
# வணிக நாதம்




10வது ஆண்டு சிறப்பிதழ்

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி
## கந்தரோடை, சுன்னாகம்

# Our Principal



**Mr. K. Siwaji**

B.A. (Hons) Dip-in-Edu. Special Trd. (Eng.)

# எமது கல்லூரி அதிபரின் ஆசிச்செய்தி

எங்கள் கல்லூரிக் கலைவர்த்தக மாணவர் மன்றம் தனது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வணிக நாதம் சிறப்பு மலரை வெளியிடுவது குறித்து மிகுந்த ஆனந்தமடைகின்றேன். புகழ்பூத்த எம் கல்லூரி கலைவர்த்தகத் துறையில் இன்றுபல சாதனைகளை நிலைநாட்டி மிளிர்வதனை யாவரும் ஒப்புக் கொள்வர். இன்று எமது கலை வர்த்தகத்துறை சார் மாணவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் மட்டுமல்லாது பேராதனை, சப்ரகமுவ, ரயரட்ட,கொழும்பு பல்கலைக்கழககங்களிலும் கற்று வருவது எமக்குப் பெருமையைத்தருகிறது. கலை, வர்த்தகத்துறை மன்றத்தில் முதன்மையானவர் களாகக் கடந்த பத்து ஆண்டுகளாக விளங்கியவர்கள் பல்கலைக்கழங்களில் கற்று உயர் நிலையில் விளங்குவது எமக்குப் பெருமையை அளிக்கிறது. கடந்த காலங்களில் போர்ச்சூழல் நிலவிய போதிலும் இம்மன்றம் தனது பணிகளைத் தளர விடாது தொடர்ந்து ஆற்றியமை குறிப்பிடத்தக்கது. இம்மன்றம் பல கல்விமான்களைக் கல்லூரிக்கு அழைத்து மாணவர்கள் பயன்பெறக் கருத்தரங்குகளை விழாக்களைக் காலத்திற்குக் காலம் நடாத்தி வருகிறது. தகவல் தொழினுட்பத்துறை உலகளாவிய ரீதியில் வளர்ச்சி பெற்றுவரும் இந்நாளில் எமது கல்லூரி மாணவர்கள் அத்துறையில் அனுபவங்களைப் பெறுவதற்கு கணணித்துறையைக் கல்லூரியில் உருவாக்கியிருக்கிறோம். விரைவில் இத்துறை வளர்ச்சி பெற்று கலை வர்த்தகத்துறை சார் மாணவர்கள் உலக அறிவை வளர்த்துக்கொள்ள வாய்ப்பு உருவாகுமென நம்புகிறோம். பத்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் கலை வர்த்தக மாணவர் மன்றம் மேலும் சாதனைகளை நிலைநாட்டிப் பிரகாசிக்க வேண்டுமென கல்லூரி வளாகத்தில் அமைந்திருக்கும் ஸ்கந்தப் பெருமானை வேண்டி மன்றப் பொறுப்பாசிரியர்களையும் மாணவர்களையும் வாழ்த்தி அமைகின்றேன்.

**திரு க.சிவாஜி,**

B.A.(Hons/Dip -in-Ed sp.l.Trd (English)

# பிரதி அதிபரின் வாழ்த்துச்செய்தி



வணிகநாத மலர் வெளியீடு பத்து ஆண்டுகளுக்கு மேலாக நிகழ்ந்துவரும் நல்லதொரு செயற்பாடு. முன்னைய அதிபர் (இன்றைய தீவகக் கல்விப் பணிப்பாளர்) திரு.ப. விக்னேஸ்வரன் அவர்களின் ஆசி, அனுசரணை யுடன் முன்னைய ஆசிரியர் (இன்றைய அதிபர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) திரு. ச. சிவனேஸ்வரன் அவர்களின் தளரா உழைப்பால் தொடங்கப்பட்ட வணிகநாத வெளியீடு ஆரம்பத்தில் வணிக மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கிய மலரைத் தந்தது. பின்னர் கலை வர்த்தக மாணவர் மன்ற வெளியீடாக மாற்றம் பெற்றுள்ளது. வணிக நாதம் கல்லூரியில் ஆண்டுதோறும் கல்லூரிச் சஞ்சிகை வெளியிடப்படாத குறையை ஓரளவு தீர்த்து வைக்கிறது. கலை - வர்த்தக மாணவர்கள், ஆசிரியர்களின் உழைப்பு- விசேஷமாக ஆசிரியர் திரு.ஆறு. திருமுருகன். ஆசிரியர் திரு. வ. நந்தீஸ்வரன் ஆகியோரின் சேவை போற்றற்குரியது.

நல்லாசிரியர்கள் பலரைத் தன்னகத்தே கொண்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரி சேவையில் உயர்ந்த கல்லூரி என்னும் தன் நிலை வழுவாது மேன்மேலும் சிறந்த சேவையை நம் சமூகத்திற்கு ஆற்ற வேண்டும். கலை, வர்த்தக மாணவர்கள் நல்ல முறையில் வளர்த்தெடுக்கப்பட்டு இன்றும் இனிமேலும் கல்லூரிக்கும் சமூகத்திற்கும் நல்ல சேவையாற்ற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். வணிக நாத வெளியீட்டுக்காக உழைத்த உழைக்கின்ற அத்தனை பேருக்கும் என் வாழ்த்துக்கள்.

திருமதி. வீ. இலட்சுமணன்
(Bsc Dip in Ed)
(பிரதி அதிபர்)

# யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்
# "வணிக நாதம்" வெளியீட்டு விழா
# ஆசியுரை



கல்வி உலகில் இன்று பிரகாசித்துக் கொண்டிருக்கும் பாடசாலைகளில் ஒன்றாக மிளிர்வது சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகும். கல்வியினாலும், ஏனைய துறைகளினாலும் தனது செயற்பாடுகளினால் முன்னணி வகிப்பது இக்கல்லூரி ஆகும். இத்தகைய சிறப்புக்களை மேலும் மெருகூட்ட அமைந்ததே உயர்தர கலைவர்த்தக மாணவர் மன்றமாகும். இம்மன்றம் தனது பத்து ஆண்டுகள் நிறைவைக் கொண்டாட இருப்பது மகிழ்ச்சிதரும் நிகழ்வாகும். ஒவ்வாரு வருடமும் "வணிகநாதம்" என்ற மலரை இவர்கள் வெளியிடுவது வழமையாகும். இம்மலரை அறிஞர்களது ஆக்கங்களும் இக்கல்லூரி மாணவர்களது ஆக்கங்களும் அணிசெய்வதை நாமறிவோம். இந்த வகையில் பத்து ஆண்டுகள் நிறைவுடன் வெளிவரும் இம்மலர் மேலும் பொலிவுடன் விளங்கும் என்பதில் ஐயமில்லை. இம்மலரைச் சிறப்பாக வெளியிட உதவிய கல்லூரி அதிபர், செஞ்சொற் செல்வர். ஆறு.திருமுருகன் அவர்கள், ஆசிரியப் பெருமக்கள், கலைவர்த்தக மாணவர் மன்றத்தினர் ஆகியோருக்கு எனது ஆசியையும் வாழ்த்தையும் தெரிவித்து "வணிகநாதம்" புதுப்பொலிவுடன் மிளிர ஆசிகூறி அமைகின்றேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**
**சமாதான நீதிபதி**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பளை.**

# வாழ்த்துச் செய்தி




இலங்கைக் கல்வி வரலாற்றில் முத்திரை பதித்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்குவது ஸ்கந்தவரோதயக் கல்லூரி. நூற்றாண்டு கண்ட இக்கல்லூரியின் கலை வர்த்தகத்துறை மாணவர்கள் தம் கல்விசார் செயற்பாடுகளை விரிவாக்கும் நோக்கிலும், தலைமைத்துவப் பண்பை வளர்க்கும் நோக்கிலும் உருவாக்கிய கலைவர்த்தக மாணவர் மன்றம் 10வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாட இருப்பது அறிந்து அகமகிழ்கிறேன். இம் மன்றத்தின் வெளியீடான "வணிகநாதம்" மலர் பல ஆக்க பூர்வமான விடயதானங்களோடு வருடாவருடம் வெளிவருவது வாழ்த்துக்குரியது. 10வது ஆண்டு சிறப்பு மலர் கல்லூரி வரலாற்றில் சிறப்பு அம்சமாக, ஆவணமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. வலிகாமம் கல்வி வலயம் ஸ்கந்தாவின் வளர்ச்சி கண்டு பெருமை கொள்வதோடு கலை வர்த்தக மாணவர் மன்றத்தின் வளர்ச்சியை மன நிறைவோடு வாழ்த்தி எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**வி. இராசையா,**
**வலயக் கல்விப்பணிப்பாளர்,**
**வலிகாமம்.**

**மருதனார் மடம்,**
**சுன்னாகம்.**

# தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச்செய்தி



புகழ் பூத்த ஸ்கந்தாஅன்னையின் வணிக நாதம் சஞ்சிகையின் பத்தாவது வருடாந்த மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். புதிய கல்வி மறுசீரமைப்பில் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு சஞ்சிகை தயாரித்தல் ஒரு முக்கியமான கூறாகக் கருதப்படுகிறது. அந்த வகையில் ஸ்கந்தாவின் உயர்தர மாணவர்களின் இந்தத் தொடர் முயற்சி பாராட்டுக்குரியது.

தமிழ் மொழியில் போதியளவு உயர்தர மாணவர்களுக்கான பாடநூல்கள் வெளிவராத இன்றைய காலகட்டத்தில் மாணவர்களின் பல்வேறு தேடல்களின் இவ்வகையான தொகுப்பு ஏனைய மாணவர்களுக்கும் உதவக் கூடியதாக இருக்கும். சஞ்சிகை ஆக்கும் முயற்சியில் ஈடுபடும் மாணவர்கள் எதிர் காலத்தில் பல ஆக்கங்களைப் படைக்கக் கூடிய வல்லமையைப் பெறுகிறார்கள். இவ்வாறு மாணவர்களை ஆற்றுப்படுத்தும் அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.


பாடசாலையில் வெளிவரும் இவ்வாறான சஞ்சிகைகள் சமூகத்துடன் பாடசாலையை இணைக்கும் ஒரு சாதனமாகும். இந்த வகையில் ஸ்கந்தாவின் உலகளாவிய பழைய மாணவர்களை தொடர்புபடுத்தும் சாதனமாக வணிக நாதம் கடந்த பத்தாண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது.

வணிகநாதம் சஞ்சிகையின் முதலாவது வெளியீடு நான் அதிபராக இருந்த காலத்தில் இடம் பெற்றது. அதன் தொடர்ச்சி இன்று வரை தொடர்வதையிட்டுப் பெருமையடைகின்றேன். இந்த முயற்சியில் ஈடுபடும் ஆசிரியர்களைப் பாராட்டுவதுடன் வழிகாட்டும் அதிபரையும் செயற்படும் மாணவர்களையும் வாழ்த்துகிறேன். ஸ்கந்தா எல்லாச் சிறப்புக்களையும் பெற்று வளர்ச்சியடைய இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

**வலயக் கல்வி அலுவலகம்,**
**வேலணை**

**ப.விக்னேஸ்வரன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்.**

# முன்னாள் மன்றப் பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி



வணிகநாதம் பத்தாவது ஆண்டு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 1992ல் இம்மலரை முதன்முதலில் வெளியிடுவதற்கு மிக நெருக்கடியான காலகட்டத்தில் உழைத்த மாணவர்களை இக்காலத்தில் நினைத்துப் பார்க்கின்றேன். அவர்களில் பலரும் இன்று உயர்நிலைகளில் உயர்ந்திருப்பதைப் பார்த்து பெருமை கொள்கிறேன். நான் கல்வி கற்ற ஸ்கந்தா என்ற பெருவிருட்சத்தில் பூத்துக் குலுங்கும் மலர்களில் ஒன்றாக வணிக நாதம் விளங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். எனது ஆரம்ப முயற்சியினை தொடரும் ஆசிரியர் ஆறு. திருமுருகனையும் இச்சந்தப்பத்தில் பாராட்டி வணிக நாதம் தொடராக ஒலிக்க உழைத்த, உழைத்துவரும் மாணவச் செல்வங்கள், பொறுப்பாசிரியர்கள், அவர்கட்கு வழி காட்டும் அதிபர் திரு.க.சிவாஜி அவர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு. ச. சிவனேஸ்வரன்,**

**அதிபர்,**

**யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.**

# உடுவிற் கல்விக் கோட்டத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.அப்புத்துரை தற்பரானந்தனின்

# ஆசிஉரை



கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி கடந்த 108 ஆண்டுகளாகக் கல்விமுன்னேற்றத் திலும், சைவசமய நெறி வழுவாது ஒழுகுவதிலும். தமிழர் தம் பண்பாட்டினைக் காப்பதிலும், கடமை உணர்ச்சியுடன் ஒழுக்கத்தைப் பேணுவதிலும் "உண்மையே உயர்அறம்" என்கின்ற குறிக்கோளின்படி வளர்ந்து வருகின்றமை கண்கூடாகும். ஸ்தாபகர் உயர்திரு சின்னத்தம்பி கந்தையா உபாத்தியார் அவர்களின் சிந்தையில் எழுந்த இக்கல்லூரி 1894ஆம் அண்டு புரட்டாதி மாதம் விஜயதசமித் திதியில் அத்திபார மிடப்பட்டுக் கட்டி யெழுப்பிய காலந்தொட்டுச் சரஸ்வதியின் அருள் பார்வையுடன் உயர்வு பெற்றுவருகின்றது. அவருக்குப் பின்பு கல்லூரிக்குச் சிந்தையொடு ஆயிரம் ஆயிரம் ஆக வழங்கிய வைத்தியகலாநிதி சி.சுப்பிரமணியம் J.P, OB.E அவர்களது அரவணைப்பில் வீறுநடைபோடத் தொடங்கியது. தொடந்து அவரது பெறாமகனும் உடுவில்/ மானிப்பாய்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமாக விளங்கிய திரு. விஸ்வநாதர் தர்மலிங்கம் வரை திறம்பட இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. அரசுடைமை ஆக்கப்பட்ட பின்பும் இக்கல்லூரி தனது குறிக்கோளில் தவறாது, கல்வி, விளையாட்டு, ஒழுக்கம் ஆகிய சகலதுறைகளிலும் வளர்ச்சியடைந்தே வந்திருக்கின்றது. உதாரணமாக 1961 ஆம் ஆண்டு பல்கலைக்கழகப் புகுமுகத்தேர்வில் 42 மாணவர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார்கள். இது அகில இலங்கை ரீதியில் 3ஆம் இடத்தையும், வடமாகாணத்தில் 1ஆம் இடத்தையும் வகித்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வாறு கல்லூரி இன்றுவரை வளர்ந்து வருவதை யாம் அறிவோம்.

கல்லூரியின் மூலம் கல்வி மேம்பாட்டினையும், சமய நெறி நிற்பதையும் பயிற்றுவிக்கும் கடமை ஆசிரியர்களினதாகும், இதன் மூலம் ஒழுக்கமுள்ள சமுதாயத்தை கட்டியெழுப்பும் பணியை ஆசிரியர்கள் பூர்த்தியாக்குகின்றனர். வளர்ந்துவரும் மாணவர் சமூகத்தைப் பரிவுடன் பார்த்து, வேண்டிய இடங்களிலெல்லாம் ஆசிரியர் தமது சேவை முத்திரையைப் பதிக்கப்பழகிக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஆசிரிய சமூகம் நற்சேவைபுரிந்து நடக்குமானால் நாடே இன்றைய அவலநிலை நீக்கி எல்லோரும் போற்றக் கூடிய ஒழுக்க


முள்ளோர் வாழும் நல் நாடாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. இந்நிலையை அடைய ஸ்கந்தா ஆசிரியர் குழாத்திற்கு ஸ்கந்தன் அருளாசி வேண்டுகிறேன்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வரலாறு தனித்துவமானது. எந்தக் கல்லூரியிலும் அனுமதிக்கப்படாத மாணவரைக் கூட ஸ்கந்தா அன்னை அரவணைத்து மற்றவர் போற்றும் மனிதனாக வாழக்கற்றுக் கொடுக்கிறாள். இவ்வாறு கற்றபலர் இன்றும் பெரும் பதவிகளில் இருப்பதை நாம் காணலாம். காலத்திற்குக் காலம் இங்கு இருந்த அதிபர்களும் சிறந்த சேவையாற்றி முத்திரை பொறித்தே சென்றுள்ளனர். யான் இக்கல்லூரியில் ஒன்பது ஆண்டுகள் மாணவனாகக் கற்றவன். திரு. இ.சச்சிதானந்தம் அவர்கள் அதிபராக இருந்தகாலத்தில் கனிஷ்டபிரிவு அதிபராகக் கடமையாற்றும் பேறும்பெற்றேன். திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றும் வாய்ப்பும் பெற்றேன். இக்கல்லூரியின் தாபகர் எனக்குப் பேரன்முறையான உறவினர் என்பதில் மேலும் பெருமை அடைகின்றேன். அத்துடன் எனது கல்விக் கோட்டத்திற்குள் அமைந்த முன்னணிக் கல்லூரி என்பதிலும் பேருவகையடைகின்றேன். இக்கல்லூரி வெளியிடும் “வணிக நாதம்” சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கலை வணிக மன்ற மாணவர்களின் சிறந்த ஆக்கங்களையும், அறிஞர்களின் படைப்புக்களையும் தாங்கி வெளிவரும் இச் சஞ்சிகை ஆண்டு தோறும் வெளிவரவேண்டுமென வாழ்த்துகிறேன். மாணவரை நல்வழி நடாத்தும் ஆசிரியர் குழாத்திற்கும். கல்லூரியின் உயர்ச்சிக்கு உழைக்கும் அதிபர் திரு.க.சிவாஜி அவர்களுக்கும் எனது நல்லாசிகள் உரித்தாகுக. இம்மலர் நிறைவுடன் மிளிர உழைத்த (உயர்தர கலை வர்த்தக மாணவர்) மன்றத்திற்கும் எனது நல் வாழ்த்துக்கள். கல்லூரி உயர்ந்து வளரக் கந்தனை வந்தனை செய்து வாழ்த்தி நல்லாசி பகர்கின்றேன்.

**அ.தற்பரானந்தன்,**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**உடுவில்.**

**கோட்டக்கல்வி அலுவலகம், உடுவில்.**
**மருதனார் மடம்,**
**சுன்னாகம்,**
**25.09.2002.**

# பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரி கலை வர்த்தக மாணவ மன்றத்திற்கு அகவை பத்து நிறைவு பெறுகிறது. இம் மன்றம் பல ஆக்க பூர்வமான காரியங்களில் ஈடுபட்டு வளர்ச்சி பெற்றிருப்பது கண்டு பூரிப்படைகின்றேன். மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதற்கு இத்தகைய மன்றங்கள் பெரிதும் உதவுகின்றன என்பதனை அனுபவ ரீதியாக யாம் கண்டுள்ளோம். முதலாவது வணிக நாதம் பிரசவித்த வேளை, அதற்கு உறுதுணை செய்த மாணவர்களில் ஒருவர் தான் இன்று யாழ் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்துறையில் விரிவுரையாளராக விளங்கும் திரு.இ. விஜயகுமார். எனவே கலைவர்த்தக மாணவர் மன்றம் கல்வியாளர்களை ஆளுமைமிக்கவர்களைத் தோற்றுவித்ததில் பெருமை கொள்கிறது. இம் மன்றத்தை ஸ்தாபித்த அதிபர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களுக்கும் ஆசிரியர் திரு. சிவநேஸ்வரன் அவர்களுக்கும் பத்து ஆண்டு நிறைவு பெறும் இந்நாளில் மன்றத்தின் சார்பில் நன்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். கலை வர்த்தக மாணவர் மன்றம் கடந்த காலங்களில் பல கருத்தரங்குகளை, விழாக்களை, கல்விச் செயற்பாடுகளை நடாத்தி மாணவர் பயனுறச் செயற்பட்டு வருகிறது. இம்மன்றம் இன்று பொருள் வளத்தாலும் அதிபர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள். பெற்றோர்களின் உற்சாகத்தாலும் எவ்வித குறையுமின்றி நிமிர்ந்து நிற்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் மன்றத்தைப் பொறுப்பேற்ற மாணவர்கள் மிக அவதானமாக நேர்த்தியாகச் செயற்பட்டு மன்றத்தை வளர்ந்தனர். இவர்களின் அயராத உழைப்பை இன்றும் நினைவு கூர்ந்து பெருமை கொள்கின்றோம்.

இலங்கைக் கல்வி வரலாற்றில் கலை வர்த்தகத் துறைசார் கல்விக்கான பாடசாலை மட்ட ஆராய்ச்சிக்கு தகுந்த வளங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. தற்போது புதிய கல்விச் செயற்றிட்டத்தின் கீழ் மாணவர்களிடையே ஆய்வுத்துறைகளை ஏற்படுத்துகின்ற செயற்றிட்ட ஒப்படை முறை பொதுவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் விஞ்ஞான ஆய்வுகூடம், அமைந்திருப்பது போல் கலை வர்த்தகத் துறை சார்ந்த மாணவர்களுக்கான ஆய்வு கூடங்கள் பிற நாடுகளில் உள்ளது போல் அமைக்கப்படுதல்

அவசியமாகும். கடந்த பல வருடங்களாக எமது உயர்தர வகுப்பு மாணவர்கள் பக்ஸ், ரெலக்ஸ், ஈமெயில் போன்றவை பற்றி நூல்கள் வாயிலாகக் கற்றனரே யொழிய அவை பற்றிய அனுபவ ரீதியான கல்வி பெற வாய்ப்பற்று உள்ளனர். தகவல் தொழினுட்பக் கூடங்கள் ஒவ்வொரு பாடசாலை தோறும் உருவாக்கப்படுதல் அவசியமாகும். எதிர்காலத்தில் ஒவ்வொரு கல்விச் சாலைகளிலும் ஒவ்வொருதுறைப் பாடங்களுக்குமான ஆய்வு நிலையங்களும் அதற்கான தகவற்கருவிகளும் அவசியம் அமைதல் வேண்டும். உதாரணமாக இந்து நாகரிகம் என்ற பாடத்தில் தென்னக சிற்ப ஓவியங்கள், திராவிடக்கலை வடிவங்கள் பற்றி வெறும் குறிப்புகளால் மட்டுமே மாணவர்களுக்குப் போதிக்கப்படுகிறது. இந்தியக் கலை வடிவங்கள் சார்ந்த வீடியோ நாடாக்கள் புகைப்படங்கள் மேலும் இன்ரநெற் மூலமான தகவல்களை இத்துறை சார்ந்த மாணவர்களுக்கு ஆய்வு ரீதியில் விள.க்குவதற்கான வாய்ப்புக்கள் இன்று இல்லை. எதிர்காலத்தில் இத்துறைகளில் கற்கும் மாணவர்களுக்கான கல்வியை விரிவாகச் செயற்படுத்துவதற்கு கல்விச் சாலைகளில் தனித்தனிப் பாட ஆய்வுநிலையங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை இத்தருணத்தில் முன் வைக்கின்றோம். புகழ்பூத்த எமது கல்லூரி என்றும் பெருமை கொள்ளும் வகையில் கலைவர்த்தக மாணவர் மன்றம் தொடர்ந்து சிறக்க வேண்டும், ஆக்க பூர்வமான பணிகளை ஆற்ற வேண்டுமென வாழ்த்தி எல்லாம் வல்ல ஸ்கந்தப் பெருமானைப் பிரார்த்தனை செய்து

'சொல்விப் பணமும் அவதானமும் கவி சொல்லவல்ல
நல்வித்தையாவும் தரும்' அன்னை சரஸ்வதி
தேவியை இறைஞ்சி நிறைவு செய்கிறேன்.

ஆறு. திருமுருகன் (B.A.DiP in Ed.).







# மலரின் நினைவுகள்







உ

## எல்லோர்க்கும் கல்வி

# "பள்ளிக்கூடம் விழித்திருக்கிறது படலைகள் திறக்கப்படட்டும்"

**திரு. கே. எஸ். சிவஞானராஜா அவர்கள்**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உலகம் தன்னாலியன்ற வசதிகளை வழங்கி, வாழ்வதற்குரிய விழுமியங்களை இனங்காணச் செய்துள்ளது. இனங்கண்ட விழுமியங்களை இலகுவாக எய்துவதற்கு அறிவு பிரதான தகுதியாகப் போற்றப் படுகிறது. அதனால், உலகம் அறிவை நோக்கிப் பயணிக்கிறது. அறிவானது விருத்தியடைவதற்கு மொழிவளம் அத்தியாவசியமாகிறது. மொழியைக் கற்பதற்கு பள்ளிகள் தோன்றலாயின. குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்கள் பெரியதொரு வரப்பிரசாதமாக அமைகின்றன. எல்லோருக்கும் கல்வி கட்டாயமாக வேண்டப்படுவதனால், இலவசமாகவே போதிக்கப் படுகிறது. இதனால் பெரும்பாலானவர்கள் கல்வியை உணர்ந்து கற்றிட, சிறுதொகையினர் அதன் பெறுமதி தெரியாதவர்களாய் உதாசீனம் செய்து தம் வாழ்வினைப் பாலைவனமாக்குகின்றார்கள். அறிவு சார்ந்த கல்விச்சாலைகள் ஆயிரம் இருக்கும் போது, அதன்வசம் ஈர்க்கப் படாத குழந்தைகள் - மாணவர்கள் தொடர்பாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் ஏயவுணர்விக்கும் என்னம்மை"
அறிவுமயமாகக் காட்சிதருகின்றாள்.

"கலையாத கல்வியை" அள்ளித்தருவதற்கு அபிராமி கடைக்கண்கள் காத்திருக்கிறது.

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என்ற வாசகத்தை உலகநீதி உரைக்கிறது.

"கல்லாதவர் கண்ணிரண்டும் புண்ணுடையார்" என்றவாறு குறள் ஓங்கி ஒலிக்கிறது.

"வாழக்கல், வளரக்கல், வல்லவனாய் நீவர வணங்கக்கல்" என்றுரைக்கிறது தாய் மொழி.

"கல்வியே கருந்தனம்" என்கிறது மந்திரம்.

"கல்வியழகே அழகு" என்கிறது இலக்கியம்.

இவ்வாறு எண்ணையும் எழுத்தையும் கண்ணெனப் போற்றி வாழ்ந்த சான்றோர் எமக்கெல்லாம் வழிகாட்டிகளாக இருந்த காரணத்தினாலும், அளவற்ற தெய்வ நம்பிக்கை கொண்ட பாங்கினாலும் பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் நிரம்பியிருக்கின்ற இக்காலங்களில், பள்ளிக்கூடங்களிலிருந்து "விலகி வாழ்கின்ற ஒரு சமூகம்" உருவாகின்ற நிலையினை அவதானிக்கின்றோம். வேதனையடைகின்றோம். இந்த விடயத்தில் பொது நிறுவனங்களும், சமய நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும், வெளிநாட்டவர்களும் அக்கறைகாட்டி ஆவனபுரிவது வரவேற்கக்கூடிய தொன்றாகும். புள்ளி விபரம் எடுப்பதோடமையாது, பள்ளியில் பயின்றிட வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்வதுமே தலையாய கடமையாகும்.

யாழ்மாவட்டத்திலே ஒரு லட்சத்து எழுபதினாயிரம் பிள்ளைகள் இருப்பதாக அண்ணளவாகக் கொள்ளலாம். இத்தரவில் ஏறக்குறைய இருபத்திரண்டாயிரம்பிள்ளைகள், உளம்சார்ந்த தேவைகளைச் சுமந்தவர்களாக இருப்பதனால் பாடசாலைகளூடாக வரும் அழைப்புகள் அவர்களுக்குப் பலிதமளிப்பதாக இல்லை என்றே கூறலாம். இக்கட்டத்தில்தான் நாம் செய்ய வேண்டிய கடமை ஒன்றுண்டு. சம்பந்தப்பட்ட மாணவர்களை உரிய இடத்திற்குக் கொண்டு வருவதிலும் பார்க்க, சம்பந்தப்பட்ட ஆசான்களையோ அதிகாரிகளையோ அவர்களிடம் சென்று கவிநிலையடைச் செய்து அவர்களுக்கான அன்புப்பாதுகாப்பினை வழங்கிய பின்னர், கல்வி கற்பதற்த்குரியவசதிகளை ஊக்குவித்தல் பயனுடைதாகும். கீழ்வரும் தரவுகள் எம்மை ஒரு கணம் சிந்திக்க வைத்திடும். 2000ஆம் ஆண்டுக்கான யாழ்மாவட்டப் பிள்ளைகளது நிலை:

| | | |
|---|---|---|
| * | மொத்த பிள்ளைகளின் எண்ணிக்கை | 1,61073 |
| * | உடல் ஊனமுற்றவர்கள் | 1167 |
| * | கண்பார்வை இழந்தவர்கள் | 118 |
| * | செவிப்புலன் இழந்தவர்கள் | 181 |
| * | பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லாதவர்கள் | 3946 |
| * | பாடசாலைக்குச் செல்லாதவர்கள் | 7889 |
| * | பிறப்புச்சான்றிதழ் அற்றவர்கள் | 2078 |
| * | தாய் அல்லது தந்தை மட்டும் உள்ள பிள்ளைகள் | 6587 |
| * | பெற்றோர் இல்லாத பிள்ளைகள் | 485 |
| * | பெற்றோர் இருந்தும் பெற்றோரைப் பிரிந்து வாழ்கின்ற பிள்ளைகள் | 146 |
| * | சுவீகாரம் எடுத்து வளரும் பிள்ளைகள் | 146 |

மேற்படி தரவுகளின் அடிப்படையில் இருபத்திரண்டாயிரத்து எழுநூற்றி நாற்பத்தி மூன்று பிள்ளைகள் கல்வி கற்பதற்குரிய பொருத்தமான நிலை காணப்படவில்லை. இத்தொகை மொத்தப்பிள்ளைகளின் தொகையில் கிட்டத்தட்ட 14 சதவீதமாகும். இதே நிலை தொடரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட பிள்ளைகள் சமநிலையற்றவர்களாக, ஏங்குகின்ற பரிதாபநிலைக்கு யாவரும் பதில் கூறவேண்டியவர்களாக இருக்கின்றோம். இதற்குரிய பரிகார நடவடிக்கைகளில்,

கல்வித்திணைக்களங்கள்,
பாடசாலைகள்,
பொதுநிறுவனங்கள்,
சனசமூக நிலையங்கள்,
சமய நிறுவனங்கள்,
பத்திரிகைகள்,
தொலைக்காட்சி,
வானொலி,
தெருக்கூத்துக்கள்,
விளம்பரங்கள்,
பதாகைகள்,
மதபீடங்கள் போன்றனவும்,

கிராமசேவையாளர்கள், சமயத்தின் காவலர்கள், வர்த்தகர்கள், கூட்டுறவாளர்கள், புத்திஜீவிகள், ஓய்வுபெற்ற அதிகாரிகள், சமாதானநீதிவான்கள், இலங்கைப்போக்குவரத்துச் சபையினர், சினிமாத் திரையரங்கினர் ஆகியோரும் பங்காற்ற முடியும். பங்காற்ற அழைக்கப்படவேண்டும்.

கல்வியானது எல்லோருக்கும் உரிய பொதுச் சொத்தாகும். கல்வி கற்பதற்கு எல்லோர்க்கும் உரிமையுண்டு. கல்வியால் உலகை ஆளமுடியும் வெல்லும் சக்தி கல்விக்கு உண்டு. கல்லாத ஒருவன் சமூகத்தில் முன்னுக்கு வரமுடியாத ஒரு சாதாரண பிரஜையாக வேதனைப்படுகின்றான். இறைவன் அறிவாற்றல் மிக்க குழந்தைகளையே சிருட்டிக்கின்றான். ஆனால் மனிதனோ இறைவனின் படைப்பினை உணருவதாக இல்லை. பணத்தினால் எதையும் சாதிக்கலாம் என்று மமதை கொள்கிறான். பணத்தினால் ஆண்களைக் கொள்முதல் செய்கின்ற வர்த்தகம் வாழ்க்கையில் ஊடுருவியதன் பயனாக, கல்வியின் பெறுமதி இரண்டாவது பட்சமாகி விட்டது. ஒரு பட்டதாரிப்பெண் கல்வியில் வெற்றிகண்டும் ஒரு ஆணை விலைகொடுத்து வாங்கவேண்

டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றாள். இங்கே சமயக்கோட்பாடுகள், சமய வழிபாடுகளனைத்தும் ஒரு சிலரால் தத்தம் சுயநலத்திற்காகவே பின்பற்றப்படுகிறது. இதுபற்றி யார் சிந்திக்கின்றார்கள்? இது தர்மமா? நீதியா? ஒரு நிலஅதிர்வுக்கு இவை யாவும் தாக்குப்பிடிக்குமா? அல்லது வானுலக வங்கியில் முதலீடு செய்ய முடியுமா? என்றெல்லாம் சிந்திக்கும் அளவிற்கு மனிதன் இன்னுமே முற்படவில்லை. சிந்திக்கும் ஆற்றலை விருத்தி செய்வது கல்வியாகும். பட்டங்கள் பெறுவதற்காக மட்டும் கல்வி இருந்துவிடாது, பகுத்தறிவு கொண்டு வாழ்வதற்குக் கல்வி பயன்படவேண்டும். இத்தகு கல்வியே தான் எல்லோருக்கும் வேண்டியது.

பொதுவாகப் பெண்கள் கல்வித்துறையில் வேகமாக முன்னேறி வருகிறார்கள். பாடசாலைகளிலிருந்து இடைவிலகலில் ஆண்கள் முன்னிற்கிறார்கள். பள்ளிக்குச் செல்லவேண்டிய சிறுவர்கள் வேலைகள் செய்வதற்காகப் பணிக்கப்படுகிறார்கள். மேலும் சிலர் தவறான குற்றச் செயல்களில் ஈடுபட முயற்சிக்கிறார்கள். மேலும் சிலர் தாய், தந்தையரின் பிரிவினால் பின் தள்ளப்படுகிறார்கள். மேலும் சிலர் அசாதாரண சூழ்நிலைகளினால் உளவியல்தாக்கங்களுக்கு ஆளாகுகின்றார்கள். மேலும் சிலர் ஊனமுற்றிருக்கின்றார்கள். இந்நிலையில் இவர்களைப் பூரண மனிதனாக்கும் பணியினில் ஈடுபடச் செய்வது அனைவரதும் கடமையாகும். அவர்களைப்பற்றி இந்நாளில் சிந்திக்கவும், சிந்திக்கத்தூண்டுவதும் பொருத்தமான செயல்களே என்பதனையுணர்ந்து, எல்லோருக்கும் வழங்கும் கல்விப் பேறதனை எல்லோரும் பெற்றிட எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக.

இடம்பெயர்ந்து தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் முகாம்களில் வாழும் குழந்தைகளிடத்தே எமது சமயக்கட்டமைப்புகள் நெருங்கும் வல்லமை பெறவேண்டும். அன்புக்கும், ஆதரவுக்கும் அங்கே கரங்கள் நீட்டப்படுகின்றன. நீட்டப்படும் கரங்களுக்குக் கல்வித்தேவைகளை வழங்கிடுவோம். ஆண்டவன் நொந்தவர்களது குடிசையில் வாழவே விரும்புகின்றான். நொந்துபோன குழந்தைகளின் இதயத்தில் கல்வி என்னும் ஒளி விளக்கை ஏற்றுவோமாக. கல்வி எல்லோரினதும் சிறப்புரிமையாகும்.

**கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன்.**

---

## அகத்தியின் மகிமை

நோய்நீக்கும் மூலிகைகளுள் அகத்தியும் ஒன்று; ஆனால் வழக்கத்தில் இலைமட்டும் தான் உணவும் மருந்துமாகப் பயன்பட்டு வருகிறது. அகத்தியின் 63 வகைச்சத்துக்கள் அடங்கியிருப்பதாக சித்தர்களும் மருத்துவ வல்லுநர்களும் கூறியுள்ளனர்

அகத்தி இலை உடலில் உண்டாகும் விஷநீர்களை முறித்து வெளியேற்றும். மலச்சிக்கலைப் போக்கும். பித்தத்தால் உண்டாகும் வெப்ப நோய்களையும் உடற்சூட்டையும் தணித்துவிடும். மருந்துகளின் வேகத்தைத் தணிக்கும். அகத்தியிலைகளை வாயில் வைத்துச் சுவைக்கும் போது அவை வாயில் கிருமிகளால் ஏற்படும் தொற்றுக்களை ஒழிக்கின்றன.

# இலத்திரனியல் வணிகம் [ E - Commerce ]

**Kalaivani Kanagalingam**
2003 " Commerce "

இன்று உலகம் ஒரு பூகோளக் கிராமமாகவே மாறிவிட்டது எனலாம் அதாவது இன்று உலகத்தை "Globalvillage" என்று ஆங்கிலத்தில் மிக எளிமையாக கூறுகின்றார்கள், இவற்றிற்கு எந்நேரமும் உலகளாவிய ரீதியில் கவனத்தில் கொள்ளத்தக்க தொழினுட்ப ரீதியான மாற்றங்களும் அபிவிருத்திகளும் இடம்பெற்றவண்ணம் இருக்கின்றமையே காரணம் ஆகும்.

இந்த வகையில் ஒரு தனி நபரோ or ஒரு வியாபார நிறுவனமோ புதிய தொழினுட்ப மாற்றங்களுக்கும், அபிவிருத்திக்கும் முகங் கொடுத்து அம்மாற்றங்களை தன்னகத்தில் உள்வாங்குவதன் மூலகம் தொடர்வதும் தமது செயற்பாடுகளை அகற்றி வந்தாலே வியாபார உலகில் வெற்றி நடை போட முடியும் இவ்வாறு செயற்படாத நிறுவனங்கள் தோல்வியைத் தழுவி வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்படும். இந்த அடிப்படையில் தற்காலத்தில் அனைவராலும் பேசப்படும் இலத்திரனியல் வர்த்தகம் or மின் வர்த்தகம் (Electronic - Commecre E - commerce) என்றால் என்ன? இதன் சிறப்பியல்கள் வகைகள், நன்மை, தீமை என்பனபற்றி அறிந்து கொள்வது மிகவும் நன்மைபயப்பதாகும்.

இலத்திரனியல் வர்த்தகம் என்றால் பொருட்களினதும் சேவைகளினதும் தரத்தையும் விநியோக விரைவுத் தன்மையையும் உயர்த்தும் அதே வேளையில் செலவினங்களை குறைப்பதற்கும் வியாபார நிறுவனங்களுக்கும் வியாபாரிகளுக்கும் நுகர்வோருக்கும் உள்ள தேவைகளுக்கு முகம் கொடுக்கும் வியாபார முறை எனலாம். மற்றொரு வகையில் கூறின் (E - commerce) இலத்திரனியில் வணிகம் என்பது மின்னணுக் கருவியின் உதவியுடன் இணையத்தின் ஊடாக பொருட்களை கொள்வனவு செய்வதையும் வினை செய்வதையும் கருதி நிற்பதாக அமைகின்றது.

இலத்திரனியல் வர்த்தகத்தின் பிரிவுகள் அடிப்படையில் மூன்று வகைப்படும். அவையாவன

(i) நுகர்வோருக்கானமின்னியல்வர்த்தகம்
Business to Consumer e - Commerce)
B2c E - com)

(ii) வியாபாரங்களுக்கான மின்னியல் வர்த்தகம்
(Business to Business e - Commerce)

(iii) உள்ளக நிறுவன அமைப்புக்கான மின்னியல் வர்த்தகம்
(Intra organizational e - Commerce)

B2c எனப்படும் நுகர்வோருக்கான இலத்திரனியல் வர்த்தகமானது வியாபார நிறுவனங்களுக்கும் நுகர்வோருக்கும் இடையில் இடம் பெறுகின்றது. இங்கு நுகர்வோனுக்கான பாதுகாப்பும் வியாபாரிகள் செய்யும் மோசடிகளை கண்டறிதலும் முக்கியமான சிறப்பம்சம் எனலாம். நுகர்வோருக்கான நேரம், பணம் ஆகிய இரண்டையும் மீதப்படுத்தும் அதேவேளையில் கிடைக்கின்ற வாய்ப்பிலும் கட்டுப்பாடுகளை மேற் கொள்வதிலும் தெரிவு செய்தலிலும் இதன் வெற்றி தங்கியுள்ளது.

B2B e - com எனப்படும் வியாபாரிகளுக்கிடையிலான மின்னியல் வர்த்தகமானது வியாபார நிலையங்களுக்கிடையில்

மட்டும் இடம்பெறுகின்றது. பணக் கொடுக்கல் வாங்கல்கள் அடங்கலாக வியாபாரிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கலும் அவற்றை நிறைவு செய்தலும் இவ்வகை இலத்திரனியல் வர்த்தகத்தின் ஊடாகவே இடம் பெறுகின்றது. வலையமைப்பினூடாக மேற்கொள்ளும் பெருந்தொகை வர்த்தகத்தை உள்ளடக்கியுள்ள இவ்வணிகமானது பல்வேறு வகையான வர்த்தகப் பங்காளிகளை இணையத்தினூடாக ஒருவருடன் ஒருவர் இணைந்து செயற்படுவதற்கும், ஒருவருடன் ஒருவர் வியாபாரத்தை மேற்கொள்ளவும் இடமளிக்கின்றது. பலவகையான வர்த்தகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றை காலத்துக் கேற்ப நவீன மயப்படுத்துவதற்கு வேண்டிய மாற்றங்களை செய்வதற்கும் உதவுகின்றது எனலாம்.

B2E - e - com எனப்படும் உள்ளக நிறுவன அமைப்புக்கான மின் வர்த்தகமானது இணையச் சூழலில் நிறுவனத்துள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையான மின் வர்த்தகமானது நிறுவனங்களுக்குள்ளேயே மேற் கொள்ளப்படும் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடையது. குறிப்பாக உள்ளக வர்த்தகத்தை தனிப்பட்டவர்களுக்கும் தொழிற்பகுதிகளுக்கும் அதனோடு இணைந்த நிறுவனங்களுக்குமிடையிலான உள்ளக வர்த்தக செயல்முறைக்கான வழிமுறைகளையும் அவற்றுக்கு தேவையான தொழினுட்பங்களையும் பயன்படுத்துதல் எனலாம். இங்கு பொருட்களின் ஆகக் குறைந்த விலையை நிர்ணயிப்பதற்கு (Zero Lentency enterpri, ce) அவற்றை தெரிவு செய்வதற்கான செயல் முறையை எளிதாக்குவதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதனால் இணையங்கள பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்றன.

இலத்திரனியல் வர்த்தகத்தில் நாம் ஈடுபட வேண்டுமாயின் முக்கியமாக இணைய இணைப்புள்ள கணனி இருத்தல் வேண்டும். இவ்வாறான இணைய இணைப்புள்ள கணனியை பயன்படுத்துவதன் மூலம் தேவையான இணையப் பக்கங்களுள் புகுந்து இவ்வர்த்தகத்தில் ஈடுபடலாம். இவ் வர்த்தகத்தில் பல்வேறு பொருட்கள் பல்வேறு வகை தரம் என்பவற்றில் விற்பனைக்காக விளம்பரப்படுத்தப்படுகின்றன. இவற்றில் தேவையான பொருட்களின் வகை, தரம் என்பவற்றுக்கேற்ப கொள்வனவாளன் or நுகர்வோன் தெரிவு செய்து கொள்வனவு செய்ய முடியும். இவ்வாறாக தேவையான பொருளை தெரிவு செய்து வாங்குவது 'Online Shopping' எனப்படுகிறது.

மின் வர்த்தகத்தில் ஈடுபட்டு பொருட்களை கொள்வனவு செய்வோர் அதற்கான பணக் கொடுப்பனவை முதலில் (Credit Card) கடனட்டை மூலமே மேற்கொண்டனர். ஆயினும் தற்போது இதற்கு மேலதிகமாக இலத்திரனியல் நிதி நுகர்வு அடிப்படையிலான புதிய சில யுக்திகளை கையாண்டும் பணப்பரிமாற்றத்தை அபிவிருத்தி செய்ய முயற்சி நடைபெறுகின்றது.

இவ் மின் வர்த்தகமானது தன்னகத்தே பல சிறப்பியல்புகளை கொண்டுள்ளது. அதாவது இவ்வர்த்தகத்தில் ஈடுபடும் சந்தையானது விரிவுபட்டு காணப்படுகின்றது. ஏனெனில் பொருட்கள் சேவைகளை விற்பனை செய்யும் நிறுவனங்கள் தமது பொருள் சேவை பற்றி இணையத்தில் விளம்பரப்படுத்துவதன் மூலம் நுகர்வோரை அதை வாங்குவதை தூண்ட முடியும். நுகர்வோரை பொறுத்தவரை உலகின் எந்த மூலையில் வினை செய்யப்படும் பொருட்களையும் இவ்வர்த்தகத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம், விற்பனையாளர்களை பொறுத்து அவர்கள் தமக்கு உடமையான நிலையான சொத்துக்களை கூட ஏல விற்பனை முறை மூலம் கூடிய விலைக்கு இம்முறை மூலம் விற்பனை செய்ய முடியும்.

வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் (Suply chain manege ment) கேட்டதும் காட்டும் முறை (Vedio - on - demand) தொலை வங்கியில் (Remote Banking) பங்குக் கொள்வனவும் பொருட்கொள்வனவும் (Procurement & Purchasing) இணைப்புள்ள சந்தைப் படுத்தலும் விளம்பரப்படுத்தலும் (on line marketing and advertising) வீட்டிலிருந்தான

பொருட் கொள்வனவு ( Home Shopping ) போன்ற சில துறைகளினூடாக மின் வர்த்தகத்தின் உபயோகங்களை எடுத்துக் காட்ட முடியும்.

வியாபாரத்தில் எப்பொழுதும் வளர்ச்சியடைந்து வரும் போட்டியானது இலத்திரனியல் வர்த்தகத்தின் பரிணாம வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறது எனலாம், வர்த்தக நிறுவனங்களுக்கிடையில் பலத்த போட்டி காணப்படுகின்றமையால் அவர்கள் தமது வாடிக்கையாளர் பலத்தினை உயர்த்திக் கொள்வதற்காக மேலும் மேலும் நுட்பங்களையும், வழிமுறைகளையும் கண்டுபிடிப்பதற்கு முயல்கின்றனர். இலத்திரனியல் வர்த்தகத்தின் இலக்குகளில் செலவினக் குறைப்பு, உற்பத்திச் சுழற்சி, நேரக் குறைப்பு, விரைவானதும், சிறந்ததுமான வாடிக்கையாளர் தொடர்புகள் மேம்படுத்தப்பட்ட தரமான சேவைகள், காகித வேலைக் குறைப்பு மேம்படுத்தப்பட்ட தன்னியக்க முறைமை ஆகியன அடங்கும். வர்த்தகத்தின் செயல் முறைகளிலும் வடிவத்திலும் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தியதன் மூலம் இன்று இணையத்துடன் பலராலும் பேசப்பட்டுவருவது இலத்திரனியல் வர்த்தகம் எனலாம். தகவல் தொழினுட்பத்துறையில் தற்பொழுது புரட்சியை ஏற்படுத்தும் நாடுகள்யாவும் இலத்திரனியல் வர்த்தகத்துக்காகவே பெருந்தொகை பணத்தை முதலீடு செய்கின்றன. எனவே எதிர்காலச் சவால்களை எதிர் நோக்கியுள்ள இளம் சமுதாயம் இலத்திரனியல் வர்த்தகம் பற்றி அறிந்திருத்தல் அவசியமானதாகும்.

---

## ஏட்டுச்சுரக்காயும் கூட்டுக்கறியும்!

பெண்கள் பற்றிய
மரபு ஆணிகள்
என் உள்ளத்தில் ஆழமாகவே அடிக்கப்பட்டுள்ளன!
என்தாயும் சகோதரியும்
நடைபயின்ற
பழைமைக் கண்ணோட்டத்தில் தான்
உன் பற்றிய என் எதிர்பார்ப்புக்கள்!

* * *

பெற்ற கல்வியும்
பெண்ணிய சிந்தனைகளும்
உன்னைத்
நிமிர்ந்த ஞானச் செருக்கோடு
நடப்பித்துள்ளன.

– மா. பா. மகாலிங்கசிவம்

உ

# வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையும் அதன் நிதியீட்டமும்

**K. Kamalini**
2002 A/L
Commerce

அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் தொடர்பாக அதற்குள் ஒரு பகுதியாக பற்றாக்குறையும் நிதியீட்டமும் அமைகிறது. அரசாங்கத்தின் வருமானத்திற்கும் செலவிற்கும் இடையிலான தொகை தொடர்பாக பின்வரும் கருத்துக்கள் உண்டு.

வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு

வரவு செலவுத் திட்டத்தின் முழுமையான அல்லது சமூக பற்றாக்குறை

வரவு செலவுத் திட்ட தேறிய பற்றாக் குறை

வரவு செலவுத்திட்ட முதன்மைப்பற்றாக் குறை

**வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக் கணக்கு :**

அரசாங்கத்தின் மொத்த வருமானத்தையும் அரசின் மொத்த நடைமுறைக் கொடுப்பனவுகளையும் தொடர்புபடுத்தி தயாரிக்கப்படும் கணக்கு இதுவாகும். இந் நடைமுறைக் கணக்கில் மிகையோ அல்லது பற்றாக்குறையோ ஏற்படலாம்.

நடைமுறைக்கணக்கு மிகை எனப்படுவது குறிப்பிட்ட ஓர்ஆண்டிற்கான மொத்த அரசிறையிலும் பார்க்க மொத்த நடைமுறைச் செலவு குறைவாக இருக்கும்போது ஏற்படும் மிகையே நடைமுறைக் கணக்கு மிகையாகும். இந்நடைமுறைக் கணக்கு மிகை அரசாங்க சேமிப்பைக் குறிக்கிறது. இவ்வாறு நடைமுறைக் கணக்கில் மிகை ஏற்படும் பொழுது அரசின் வருமானம் அதன் நடைமுறைச் செலவைமேற்கொள்ள போதுமானதாக இருப்பதில்லை. மூலதனச் செலவின் ஒரு பகுதியை அரசாங்கம் தனது வருமானத்தைபயன்படுத்திமேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். எனவே அரசாங்க சேமிப்பு மூதலீடாக மாறும். மேலும் நடைமுறைக்கணக்கில் மிகை ஏற்படும் பொழுது வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை குறைவடைகிறது.

நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை என்பது குறிப்பிட்ட ஓர் ஆண்டிற்கான மொத்த அரசிறையிலும் பார்க்க மொத்த நடைமுறைச் செலவு அதிகமாக இருப்பது ஆகும் இவ்வாறு நடைமுறைக்கணக்கில் பற்றாக்குறை ஏற்படும் பொழுது அரச சேமிப்பு உருவாகாதது மட்டுமன்றி சேமிப்பு எதிர்க் கணியமாக காணப்படுகிறது. நடைமுறைக்கணக்கில் பற்றாக்குறை ஏற்படும் பொழுது அரசின் வருமானம் அதன் நடைமுறைச் செலவுகளை மேற்கொள்ளக் கூட போதுமானதாக இல்லை. எனவே நடைமுறைச் செலவை மேற்கொள்வதற்குக்கூட கடன்பெற வேண்டிய நிலை ஏற்படும்.

**வரவு செலவுத்திட்ட முழுமையான பற்றாக்குறை :**

குறிப்பிட்ட ஓர் ஆண்டிற்கான மொத்த அரசிறையிலும் பார்க்க அரசின் மொத்தக் கொடுப்பனவுகள் ஆன நடைமுறைக் கொடுப்பனவு, மூலதனச் செலவு, தேறிய கடன்வழங்கல் கூடுதலாக காணப்படும்

போது ஏற்படுகின்ற பற்றாக்குறையே முழுமையான பற்றாக்குறை எனப்படும்.

**வரவு செலவுத்திட்டத் தேறிய பற்றாக்குறை :**

அரசின் மொத்த செலவில் உள்ள அரசின் மீள்கொடுப்பனவு நீங்கலாக உள்ள வரவு செலவுத்திட்ட பற்றாக் குறையே தேறிய பற்றாக்குறை எனப்படும். எனவே வரவு செலவுத்திட்டத்தின் முழுமையான பற்றாக்குறையோடு அரசின் படுகடன் மீள் கொடுப்பனவுகளைச் சேர்ப்பதன் மூலம் தேறிய பற்றாக்குறை கணிக்கப்படும்.

**வரவு செலவுத்திட்ட முதன்மைப் பற்றாக்குறை :**

அரசின் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக உள்ள வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையே முதன்மைப் பற்றாக்குறை எனப்படும் அதாவது பொதுப்படுகடன் மீதானவட்டிக் கொடுப்பனவுகளை அரசின் செலவில் இருந்து நீக்கிய பின்னர் கணிக்கப்படுகின்ற வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையே முதன்மைப் பற்றாக்குறை எனப்படும்.

**நிதியீட்ட முறைகள் :**

அரசாங்க வரவுசெலவுத்திட்ட பற்றாக் குறைக்கு நிதி பெறப்படும் வழிவகைகள் :

1. உள்நாட்டுச் சந்தைக்கடன்
2. உள்நாட்டுச் சந்தையில்லாக்கடன்
3. வெளிநாட்டு நிதி
4. பணநிலுவையின் பயன்பாடு
5. தனியார் மயமாக்க பெறுகை

உள்நாட்டுச் சந்தைக் கடனில் அரசாங்கம் கடன் பெறுவதற்கு பயன்படுத்தும் கருவிகள்

1. மத்திய வங்கி முற்பணம்
2. திறைசேரி உண்டியல்
3. திறைசேரி முறிகள்
4. ரூபாய்ப் பிணைகள்

உள்நாட்டு சந்தையில் அரசாங்கத்திற்கு கடன் வழங்கும் மூலங்களை இரண்டு வகைப்படுத்தலாம்.

1. வங்கித்துறை மூலம்
2. வங்கியல்லாத்துறை மூலம்

இதில் மத்திய வங்கி வணிக வங்கி என்பன தவிர்ந்த ஏனைய உள்நாட்டு சந்தைக்கடன் வழங்கும் மூலங்கள் வங்கியல்லாத்துறை மூலங்கள் எனப்படும் இவற்றில் பின்வருவன அடங்கும்.

* தேசிய சேமிப்பு வங்கி
* ஊழியர் சேமலாபநிதி
* ஊழியர் நம்பிக்கை நிதி
* காப்புறுதி நிறுவனங்கள்
* தனியார் நிதிக்கம்பனிகள்
* தனிப்பட்டவர்கள்

**உள்நாட்டுச் சந்தையில்லாக்கடன் :**

அரசாங்கத்திற்கு உள்ளே காணப்படும் மிகையில் இருந்து அரசாங்கம் பெறுகின்ற கடன்களே உள்நாட்டுச் சந்தையில்லாக் கடன் எனப்படும். அரசாங்கம் தனக்கு சொந்தமான அமைப்புக்களில் இருந்து கடன் பெறுவதைக் குறிக்கும் திறைசேரி வைப்புக்கள் திணைக்களங்களிடம் இருந்து பெறும் கடன்களே உள்நாட்டுச் சந்தையில் லாக் கடன் எனப்படும்.

**வெளிநாட்டு நிதி :**

வெளிநாட்டு நிதி பின்வரும் வகைகளில் கிடைக்கிறது.

1. கடன்கள்
   - A செயற்றிட்டக் கடன்கள்
   - B செயல்திட்டம் இல்லாக்கடன்கள்
2. வெளிநாட்டு நன்கொடை
   - A செயல்திட்டக் கடன்
   - B செயல்திட்டம் அல்லாக் கொடைகள்

ஏனைய கடன்

இவற்றிலே இலங்கை கடனைப் பெற்றுக் கொள்ளும் பிரதான மூலங்களாக

சர்வதேச நாடுகள்

சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து பெறுதல்

| வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை நிதியிடல் | 1999 | 2000 |
|---|---|---|
| 1. உள்நாட்டு நிதியிடல் | 90 | 95 |
| 1. சந்தைக்கடன் | 90 | 93 |
| A வங்கி | 32 | 43 |

| | 1999 | 2000 |
|---|---|---|
| B வங்கியல்லாத்துறை சந்தையில்லாக்கடன் | 51 — | 50 02 |
| 2. வெளிநாட்டு நிதி | 10 | 05 |
| 1. கடன் | 02 | 01 |
| 2. நன்கொடைகள் | 04 | 04 |

அரசின் இறைத் தொழிற்பாட்டின் தொகுப்பு :

| | 1999 | 2000 |
|---|---|---|
| மொத்த அரசிறை | 195905 | 211282 |
| செலவும் மீள்கொடுப்பனவு கழித்த கடன் வழங்கலும் | 279160 | 345823 |
| நடைமுறைச் செலவு | 207272 | 254279 |
| மூலதனச் செலவும் மீள் கொடுப்பனவு கழித்த கடன் வழங்கல் | 71888 | 81544 |
| நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை | – 11367 | – 42997 |
| முதன்மைப்பற்றாக்குறை | – 21132 | – 53341 |
| மொத்தப் ,, | – 83255 | – 124541 |

வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறையின் சாதகமான விளைவு :

1. பற்றாக்குறையினால் உருவாக்கப் படும் மேலதிக வளங்களினால் நாட்டின் முதலீடு அதிகரிக்கும்
2. உற்பத்தி இயலளவு அதிகரிக்கும் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்
3. இதுவரை காலமும் உற்பத்தியில் ஈடு படுத்தப்படாத வளங்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் குறிப்பாக வேலைவாய்ப்பு அதிகரிக்கும்
4. கைத்தொழில் வளர்ச்சி ஏற்படும்

வரவு செலவுத் திட்ட பற்றாக் குறையின் பாதகமான விளைவு :

வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கு நிதி பெறப்படும் முறையின் அடிப்படையில் பாதகமான விளைவுகள் கூறப்படுகின்றன.

1. உள்நாட்டுச் சந்தையில் வங்கித்துறை மூலங்களில் இருந்து கடன் பெறும் போது பணநிரம்பல் அதிகரித்தல் இதனால் பணவீக்க விளைவுகள் தோன்றும்.
2. உள்நாட்டுச் சந்தையில் கடன்பெறும் போது தனியாருக்கு கிடைக்கும் வசதி பாதிப்படையும்.
3. வெளிநாட்டு கடன்களைப் பெறும் போது வெளிநாட்டு மீள்கொடுப்பனவு வட்டிக்கொடுப்பனவு அதிகரிக்க சென் மதி நிலுவையில் தாக்கம் ஏற்படும்.

---

## ஏட்டுச்சுரக்காயும் கூட்டுக்கறியும் !

உன் நவீனத்துவம்
என் பழைமைகளுக்கு
முற்றிலும் முரணாகக் கூட இருக்கலாம்.
எங்கள் தனித்துவத்தில்
சில விட்டுக் கொடுப்புகள்
சிரமமானதாகவும் இருக்கலாம்.

* * *

எனினும் .........
தண்டவாளப் பிணைப்பிலும்
வீணையின் நரம்புகள்
இனிய நாதத்தைப் பிரவகிப்பதென
ஏட்டுச் சுரைக்காய்களெல்லாம்
எங்கள்
கூட்டுக் கறியைச் சுவை கெடுப்பதில்லை !

— ம. பா. மகாலிங்கசிவம்

# யூரோ நாணயம் பற்றிய சில நோக்குகள்
# (Some Aspects of Euro Currency)

**P. Karthika**
2002 A/L (Com.)

**அறிமுகம் :**

எதிர் காலத்தில் உலகம் முழுவதும் ஒற்றை நாணய அறிமுகம் என்ற கோட்பாட்டின் படி ஓர் ஆரம்ப கட்ட நடவடிக்கையாகவே Euro நிலம் என்ற தனியான பொருளாதார வலயத்தின் பல நாடுகளுக்கான பொதுவான நாணய முறையாக Euro நாணயம் காணப்படுகின்றது. ஐரோப்பிய நாணய சபையின் (European monetary Union) உறுப்புரிமை பெற்றுள்ள பல நாடுகளில் தமது சொந்த நாட்டு நாணயத்திற்கு பதிலாக Euro நாணய முறைபயன் படுத்தல் ஆரம்பமானது.

**நோக்கம் :**

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தமக்கிடையில் தனியொரு நாணயத்தை உருவாக்குவதன் மூலம் ஐரோப்பாவுக்குள் வர்த்தகத்தையும் முதலீட்டையும் இலகுவாக்குவதுடன் அமெரிக்க டொலருக்குச் சமாந்தரமாக உலகப் பொருளாதாரத்தில் ஐரோப்பாவிற்கு அதிக பங்களிப்பைக் கொடுப்பதன் மூலம் பொருளாதார முடிவுகளைக் கூட்டாக எடுத்து அரசியல் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தலாம்.

**Euro நாணயத்தில் உறுப்புரிமை பெறும் நாடுகள் :**

ஐரோப்பிய சமூகத்தில் உள்ள 15உறுப்பு நாடுகளில் 11 நாடுகள் ஒன்றிணைந்தே ''Euro நிலம்'' என்ற புதிய வலயம் ஒன்றை ஏற்படுத்தியது. இத்தகைய தனியான பொருளாதார வலயத்தின் பொது நாணயமாகவே யூரோ காணப்படுகிறது. 1957ஆம் ஆண்டு ரோம் உடன்படிக்கையின் போதே ஐரோப்பாவிற்கு தனியொரு நாணயம் என்ற கோட்பாடு முதன் முதலிலே தோற்றம் பெற்றது. எனினும் 1969ஆம் ஆண்டு இடம் பெற்ற ஐரோப்பியத் தலைவர்களின் கேய்க் உச்சி மாநாட்டின் போதே இந்த யோசனை முழு அளவில் உறுதிப் படுத்தப் பட்டது. பின்னர் 1992இல் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மாஸ்டிரிச் உடன் படிக்கையில் உறுப்பு நாடுகள் கையொப்பம் இட்டதன் மூலம் எழுத்து மூலம் உறுதிப் படுத்தப்பட்டது. தற்பொழுது 15 ஐரோப்பிய உறுப்புரிமை நாடுகளில் 12 ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய நாணயச் சபையில் இணைந்து ஒற்றை நாணய முறையில் இணைந்துள்ளன. இந் நாணயத்தில் இணைந்துள்ள நாடுகளாக ஒகத்திரியா, பெல்ஜியம், பின்லாந்து, பிரான்சு, ஜெர்மனி, அயர்லாந்து, இத்தாலி, லக்சம்பேக், நெதர்லாந்து, போத்துக்கல், ஸ்பெயின், கிரிஸ் ஆகிய 12நாடுகள் தற்பொழுது உள்ளன. இங்கிலாந்து, சுவீடன், டென்மார்க் ஆகிய 3 நாடுகளும் சுய விருப்பின் பெயரில் அவற்றின் சொந்தக் காரணங்களுக்காக இந் நாணயத்தில் இணையவில்லை. அத்துடன் கிரிஸ் நாடு இந் நாணய முறையில் இணைவதற்கு விண்ணப்பித்த போதும் ஐரோப்பிய நாணய சபையின் விதிகள் பிரமாணங்களுக்குக் கிரிஸ் நாட்டின் தரவுகள் உடன்படாத காரணத்தால் அந்நாடு விலக்கி வைக்கப் பட்டது. எனினும் 01-01-2002ஆம் ஆண்டு தொடக்கம் கிரிஸ் இணைக்கப்பட்டே 12 நாடுகளாக உள்ளது.

**Euro அறிமுகப்படுத்தும் பிரதான 4 கட்டங்கள் :**

**கட்டம் i**

1990 யூலை 1ஆம் திகதி ஆரம்பமாகியதுடன் இந்நிலையில் மூலதனக் கட்டுப்பாடுகளை அகற்றுவதிலும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள்ளே உள்ள பிராந்திய ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டது.

**கட்டம் ii**

1994 ஜனவரி 1ஆம் நாள் தொடங்கிய உறுப்பினர் நாடுகளிடையே இறை மற்றும் நாணய ஒரு முகப்படுத்தல்களை அடைகின்றதற்கான இலக்கினை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தது.

**கட்டம் : iii**

ஐரோப்பிய மத்திய வங்கிக்கு முன்னோடியான ஐரோப்பிய நாணய நிறுவனமொன்றை நிறுவுவதை இலக்காகக் கொண்டிருந்தது.

**கட்டம் iv**

1999ஆம் ஆண்டு சனவரி 1ஆம் திகதி தொடங்கிய யூரோவின் இறையான அறிமுகமும் பங்கேற்கும் நாடுகளிடையே கைமீட்புச் செய்ய இயலாத நிலையான செலவாணி வீதங்களும் நிர்ணயிக்கப்பட்டன. யூரோ நாணயத் தாள்களும், குத்திகளும் தேசிய நாணயங்களோடு 2002ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி புழக்கத்திற்கு விடப்பட்டுள்ளது.

பங்கேற்கும் நாடுகளின் தேசிய நாணயங்கள் மாற்றத்திற்குட்படுகின்ற 6 மாத காலப்பகுதிக்குள் முற்றாக அகற்றப்படும். இதன் பின்னர் இந்த 12 நாடுகளின் தேசிய நாணயங்களும் சட்ட பூர்வ வழங்கல் கொண்ட நாணயங்களாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

யூரோ நாணயத்தில் உறுப்புரிமை பெறுவதற்கு விலை உறுதிப்பாடு திறனாக இருத்தல், நீண்டகால வட்டி வீதத்தைத் தாழ்ந்த மட்டத்திற் பேணல், செலவாணிவீத உறுதிப்பாடு, உறுதியான அரச நிதி நிலைமை இருத்தல் போன்ற 4 தகைமைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**ஐரோப்பிய மத்திய வங்கி முறை :**

ஐரோப்பாவில் உள்ள பல நாடுகளுக்கு ஒற்றை வங்கி என்ற வகையில் ஐரோப்பிய மத்திய வங்கி உருவாக்கப்பட்டது. இது தனது செயற்பாட்டை இலகுபடுத்துவதற்காக இருவகை நிறுவன அமைப்பாக செயற்படுகிறது. ஐரோப்பிய மத்திய வங்கியானது யூரோ முறை என அழைக்கப்படும் யூரோ லாந்தில் உறுப்புரிமை பெற்றுக் கொள்ளும் நாடுகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட ஒரு பொதுவான வங்கி முறையினைக் குறிக்கும்.

**யூரோ நாணய அறிமுகத்தின் நன்மைகள் :**

1. நாடுகளுக்கிடையே வர்த்தகக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுத் தாராண்மைத் தன்மை பேணப்படல்
2. ஐரோப்பாவில் பணவீக்கமற்ற பொருளாதார உறுதிப்பாடு பேணப்படும்
3. ஐரோப்பிய நாடுகள் ஒன்றியப் பொருளாதார வலிமை பெறும்
4. கூடுதலான தொழில் வாய்ப்புக்களும் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வும் ஏற்படும்
5. அதிகளவான மூலதன உட்பாய்ச்சல் இடம்பெறும்
6. நாணய மாற்று விகித சிக்கல், தாமதம் செலவு குறைவடைதல்
7. விரிவான செயல்திறன் வாய்ந்த சந்தை ஒன்று உருவாகும்

**யூரோ நாணயமும் இலங்கையும் :**

யூரோ நாணயத்துடன் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகள் அனைத்தும் கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பித்துள்ளன. இதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் பின்வரும் தாக்கங்கள் ஏற்படும்.

1. மேலதிக கடன் முதலீட்டு வசதிகள் கிடைத்தல்
2. டொலரை விடப் பெறுமதி அதிகரித் தால் வர்த்தகத்தை இலாபகரமாக முன்னெடுக்க முடியும்
3. தொடர்ச்சியாக ஐக்கிய அமெரிக்க டொலரில் தங்கியிருக்கும் நிலையி லிருந்து விடுபடும்
4. ஐரோப்பிய சந்தையில் இலங்கை கடுமையான வர்த்தகப்போட்டியை எதிர் நோக்க வேண்டி இருக்கும்

12 நாடுகளிலும் யூரோவின் பெறுமதி (1 யூரோ):

| | |
|---|---|
| பெல்ஜியம் பிராங் | 40.33 |
| ஜேர்மன் மார்க் | 1 96 |
| கிரேக்க ட்ரச்மர் | 340.75 |
| ஸ்பெயின் பெலேபடா | 166 38 |
| பிரான்ஸ் பிராங் | 6.55 |
| அயர்லாந்து பவுண்ட | 0.787 |
| இத்தாலி வீரா | 1936.27 |
| லக்ஸம்பேக் பிராங் | 40.33 |
| நெதர்லாந்து கில்டா | 2.66 |
| ஆஸ்ட்ரியா சஜஸ்சில் | 13.76 |
| போத்துக்கல் எலக்குடோ | 200.18 |
| பின்லாந்து மார்க் | 5.94 |

முடிவுரை:


யூரோ நாணயம் 01-01-2001ல் புழக்கத்திற்கு வந்தமையால் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே வர்த்தக நடவடிக்கைகள் இலகுவாக நடைபெற வழிவகுத்தது. இதன் மூலம் ஐரோப்பிய நாடுகள் தமது பொருளாதார வலயத்தில் ஸ்திரத் தன்மையைப் பேணி சர்வதேச வர்த்தகத்தில் அமெரிக்க டொலரிற்கு மாற்றீடாக யூரோ பயன்படுத் தப்படவும் டொலரின் தனி ஆதிக்கம் குறைவடையவும் யூரோ நாணயத்தின் அறிமுகம் வழி வகுக்கும் எனலாம்.

---

## உசாத்துணை நூல்கள்:


1. வணிகநோக்கு
   1999 Navember 2000 May
2. ''உதயன்'' பத்திரிகை 03-01-2002
3. முகாமைநோக்கு - 1999.

**2001 கலை, வர்த்தக மன்ற மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள்**



**2001 கலை, வர்த்தக மன்ற மாணவர் மன்ற நிர்வாக சபை**




## 2002 கலைப் பிரிவு மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள்






**க. டினேஸ்**
(தலைவர்,
கலை வர்த்தக மன்றம், 2001)



**க. யதீஸ்குமார்**
(செயலாளர்,
கலை வர்த்தக மன்றம், 2001)




**யோ. காந்தரூபன்**
(பொருளாளர்,
கலை வர்த்தக மன்றம், 2001)



**த. பிரணவன்**
(தலைவர்,
கலை வர்த்தக மன்றம், 2002)



**ம. மதுராஷன்**
(செயலாளர்,
கலை வர்த்தக மன்றம், 2002)



**ப. ராதாகிருஷ்ணசர்மா**
(பொருளாளர்,
கலை வர்த்தக மன்றம், 2002)

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின்
கல்வி வளர்ச்சிக்கு யூனியன் அஸ்யூரன்ஸ்
நிறுவனத்தின் நல்வாழ்த்துக்கள்.

## வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

யாழ் மண்ணில் முதன் முதலாக காலடி பதித்த எங்கள் யூனியன் அஸ்யூரன்ஸ் ஆரம்ப காலத்தில் இருந்து மக்களின் நம்பிக்கையைப் பெற்றதனால் யாழ் நகரில் முன்னோடியான ஸ்தாபனமாக திகழ்கின்றது.


முழு இலங்கையிலும் நீங்கள் ஆயுள், பொது காப்புறுதிகளை மேற்கொள்ளலாம்.

எங்கள் ஸ்தாபனம் மென்மேலும் சிறப்புற
தங்கள் ஆதரவை கோரி நிற்கும்
**யாழ் பிராந்திய அலுவலர்.**

உங்கள் பிராந்தியக்கிளை :
யூனியன் அஸ்யூரன்ஸ்,.
139, Stanley Rd, Jaffna. T.P : 2223753

## வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

## புதிய பாரதி கல்வி நிலையம்



**தரம் 5 முதல்**
**A/L வரையான வகுப்புக்கள்**
**தனித்துவம் வாய்ந்த**
**ஆசிரியர் குழுவினால்**
**கற்பிக்கப்படுகின்றது.**

கல்வி உலகின் கலங்கரை விளக்கம்

உடுவில்

## வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

## மகிந்தன் கொம்பியூட்டர் கிறாபிக்ஸ்



**அனைத்து கணனிப்பதிப்புக்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்**

**மற்றும்**

- **போட்டோ பிரதிகள் சேவை**
- **அடையாள அட்டை கவரிடல்**
- **றோணியோ வேலைகள்**

**மற்றும் பாடசாலை உபகரணங்களையும் பெற்றுக்கொள்ள**
**நீங்கள் நாடவேண்டிய இடம்**

**கே.கே.எஸ் றோட், சுன்னாகம்.**

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

## பேரம்பலம் சகோ நிறுவனம்



உங்களுக்குத் தேவையான சகல பாவனைப் பொருட்களையும் ஒரே இடத்தில் தெரிவு செய்ய உகந்த ஸ்தாபனம்

50, 52, 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

## துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்



**பாடசாலை
உபகரணங்களையும்
வெளிநாட்டு உள்நாட்டு
பத்திரிகை வகைகளையும்
மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெறலாம்.**

பஸ்நிலையம் முன்பாக,
சுன்னாகம்.

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

## ஹைலைற்ஸ் பார்மசி அன்ட் குறோசறீஸ்

சகலவிதமான

ஆங்கில மருந்து வகைகள்,
பால்மா வகைகள்,
அழகுசாதனப்பொருட்கள்

ஆகியவற்றை

நியாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்

உடுவில், சுன்னாகம்.

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

## குறூஸ் ஸ்ரோர்ஸ்

**சகலவிதமான
வீட்டுப்பாவனைப்
பொருட்களையும்**



**பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்.**

கந்தரோடை, சுன்னாகம்.

# நாவலர் தொடக்கிவைத்த சைவசமயக் கல்வி மறுமலர்ச்சி

**ம. பிருந்தா**
*2002 A/L கலை*

அந்நியராட்சிக்குட்பட்டிருந்த இலங்கையில் 19ஆம் நூற்றாண்டைக் குறிப்பாக அதன் பின்னரைக் கூற்றினை சுதேசிய சமய மறுமலர்ச்சிக் காலம் எனக்கொள்ளலாம். 16ஆம் நூற்றாண்டிலும் போத்துக்கேயருடைய ஆதிக்கத்துக்கு உட்பட்ட காலத்திலிருந்து இலங்கையின் புராதன சமயங்களான பௌத்தமும், சைவமும், இஸ்லாமும் கிறீஸ்தவத்தின் மதமாற்றுப் பிரசாரத் தாக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்னடைந்திருந்தன. போர்த்துக்கேயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் என்ற ஒழுங்கில் இலங்கையில் அரசாதிக்கம் பெற்றிருந்த மேலைநாட்டார் அனைவரும் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கே ஆதரவை அளித்தனர். அதன் விளைவாகச் சொந்த நாட்டிலேயே பௌத்தம், சைவம், இரண்டும் நலியும் நிலை காணப்பட்டது. அவ்வகையான நீண்டகால அமுக்கம் ஏற்படுத்திய பல்வேறு பிரச்சினைகள் மக்கள் மத்தியிலே ஏற்படுத்திய விழிப்புணர்ச்சியின் விளைவே 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட சுதேசிய மறுமலர்ச்சி ஆகும்.

அம்மறுமலர்ச்சியின் காரண கர்த்தாக்களாகவும், உந்துசக்திகளாகவும், அதன் பிரதிவிம்பங்களாகவும், விளங்கியவர்கள் பலர். பௌத்தத்திற்கு மீகெதுவத்த குணானந்த தேரோ, கேணல் ஒல்கேட், ஹிக்கடுவ ஸ்ரீசுமங்கல தேரோ, அநாகரிக தர்மபால போன்றோரும் இஸ்லாத்துக்கு அறிஞர் சித்திலெப்பையும், சைவத்திற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறிமுகநாவலரும் குறிப்பிடக்கூடியவராவார்.

இலங்கையில் ஏற்பட்ட சுதேசிய சமய மறுமலர்ச்சி பற்றிக் குறிப்பிடுகையில் அதன் ஆரம்ப குரல் தெற்கிலே ஒலித்தது என்று கூறப்படுவதுண்டு. இக்குறிப்பு 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஸ்ரீசுமங்கல தேரோ, குணானந்ததேரோ போன்ற பௌத்த சமயத்தலைவர்களுக்கும் கிறிஸ்தவப் பாதிரிமாருக்குமிடையே இடம்பெற்ற சமயஞ்சார்ந்த வாதத்தொடர்பை அடிப்படையாகக் கொண்டெழுந்த ஒன்றாகும். தெற்கில் கிறிஸ்தவத்திற்கு எதிரான முதற்குரல் என அதனைக் கொள்ள முடியும். அதேபோல் 1847ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் சமயப்பிரசங்கமாக ஒலித்த ஆறுமுகநாவலருடைய குரலே வடக்கில் ஒலித்த முதற்குரல் எனலாம்.

யாழ்ப்பாணத்துச் சமூக வாழ்க்கை என்னும் வானில் நாவலர் என்னும் சூரியன் தோன்றிய காலம் (1822 - 1879) மிகவும் இக்கட்டான காலமாகும். கிறிஸ்தவ மிசனரிமாரின் பிரசாரப்பிடியினுள் சிக்குண்ட இளந்தலைமுறையினர் தமது சொந்தமதம் கலாச்சாரம் என்பனவற்றை மறந்திருந்த காலமது. ஆங்கிலக் கல்வி அரச உத்தியோகம், பட்டம், பதவி என்ற கவர்ச்சிகளுக்கு ஆளாகித் தமது பாரம்பரியத்தையே மறந்து துறந்து மக்கள் இருளில் தத்தளித்துக் கொண்டிருந்த காலம் அது. அந்தநிலை புராதன சமய ஈடுபாடுடையோரிடத்து ஒரு வெதும்பலை ஏற்படுத்தியது. தமது பிள்ளைகள் அந்நிய மார்க்கத்தில் மோகங்கொண்டதைப் பார்த்துப்

புழுங்கிய சமூகத்தின் விடிவெள்ளியாகத் தோன்றினார் நாவலர். இதனைச் சி. வை. தாமோதரப்பிள்ளையின்,

> நல்லை நகர் ஆறுமுகநாவலர்
> பிறந்திலரேல்
> சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே
> எல்லவரும்
> ஏத்துபுரா ணாகமங்க ளெங்கே
> ப்ரசங்கமெங்கே
> ஆத்தனறி வெங்கே அறை.

என்ற பாடல் நாவலர் பிறப்பின் பொருத்தப்பாட்டை வெகு அழகாகப் பிரதிபலிக்கின்றது. காலத்தின் தேவை அதற்கு உகந்த தலைவனைத் தோற்றுவிக்கிறது என்பர். நாவலர் பெருமானைப் பொறுத்தவரையில் இக்கருத்து முற்றிலும் உண்மை அவர் தோன்றிய காலம் யாழ்ப்பாணத்துச் சைவசமயிகளிடையே சமயப்பற்றையும், விழிப்புணர்ச்சியையும் வளர்க்கவேண்டிய காலமாய் இருந்தது. அதற்குப் பொருத்த மானவராகவே நாவலர் தோன்றிச் செயற்பட்டார். அவரது இளம் பருவத்தில் கணிசமான பகுதி (14ஆண்டுகள்) யாழ்ப்பாணம் மெதடிஸ்த மத்திய பாடசாலையில் (இன்றைய மத்திய கல்லூரி) கிறிஸ்தவர்மத்தியில் கழிந்தது. உண்மையை நோக்குமிடத்து 14 வருடக்கிறிஸ்தவச் சூழலே நாவலரைநமக்குத் தந்தது. ஆபிரிக்கதேசமே காந்தியை மகாத்மா ஆக்கியது. 14 வருடக்கிறிஸ்தவச் சூழல் அமையாதிருந்தால் ஆறுமுகநாவலர் என்றொருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை என்ற கூற்று இங்கு கவனிக்கத்தக்கது. கிறிஸ்தவர்களுடன் கொண்ட நெருக்கமான தொடர்பின் பயனாக நாவலர் அவர்களுடைய நோக்கம், நடைமுறை, உத்தியாவற்றையும் அறிந்து கொண்டார். அந்த அனுபவம் கிறிஸ்தவ மிஷனெரிமாருடைய பிரசாரத்தை முறியடித்துச் சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட உதவியது.

இலங்கையில் கிறிஸ்தவத்தை பரப்புவதில் மிஷனரிமார் கையாண்ட உத்திகளில் இரண்டு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாகும். அதில் ஒன்று சிறுவர்களுக்கு கல்வி வழங்குவது என்ற முறையில் அவர்களை மதம் மாற்றிப் பின்னர் பிள்ளைகளுக்கூடாகப் பெற்றாரையும் மதம் மாற்றுதல் இதில் ஆங்கிலக் கல்வி மிகவும் சக்தி வாய்ந்த கவர்ச்சிப் பொருளாக அமைந்தது ஆங்கிலக்கல்வியைக் கற்று அதற்கூடாக அரச உத்தியோகத்தைப் பெறலாம் என்ற ஆசையின் நிமித்தம் கிறிஸ்தவத்தைத் தழுவிய இலங்கையின் தொகை கணிசமானது. யாழ்ப்பாணத்தவருக்கும் இது பொருந்துவதாகும். கிறிஸ்தவர்கள் கையாண்ட இரண்டாவது உத்திமேடைப் பிரசங்க முறையாகும். தெய்வ ஆராதனைக் கூட்டங்களிலும் பொது வைபவங்களிலும் தமது கருத்துக்களை வலியுறுத்தியும் எதிர்க் கருத்துக்களை மறுத்தும் கிறிஸ்தவ சமய பிரசாரத்தைப் பாதிரிமார் மேற்கொண்டனர். கிறிஸ்தவரல்லாதோரிடையே காணப்பட்ட குறைபாடுகளைக் கோடிட்டுக் காட்டி அவற்றை தீர்ப்பதற்கு தமது மார்க்கத்தைப் பின் பற்றும்படி மக்களைத் தூண்டினார். இதுவும் ஓரளவு வெற்றியளித்தது.

கிறிஸ்தவர் மத்தியில் வாழ்ந்த அனுபவம் அவர்களுக்கு எதிராகச் செயற்படுவதற்கு நாவலருக்கு வழியைக்காட்டி வலிமையையும் ஊட்டியது. எந்தப்பிரசங்க முறை கிறிஸ்தவத்துக்காகப் பயன்பட்டதோ அதே பிரசங்க முறை நாவலருடைய நாவில் சைவப்பிரசாரக் கருவியாக மாறியது. முக்கிய இடங்களில் சைவப்பள்ளிக் கூடங்களை நிறுவுவதும் சைவத்திற்காகப் பிரச்சாரத்தை மேற்கொள்வதும் சைவத்தையும் தமிழ்க் கல்வியையும் வளர்ப்பதற்கேற்ற கருவிகளாகும் என்பது நாவலருடைய கருத்தாயிருந்தது. இவ்வழிகளில் கல்வி வாய்ப்புக்காகச் சைவச்சிறார்கள் கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களை நாடவேண்டிய தேவையை நீக்கலாம் என நம்பினார். இதற்காக ஆங்காங்கு சைவப்பள்ளிக்கூடங்களை நிறுவும் முயற்சிகளில் இறங்கினார்.

சைவக்கல்வியின் விருத்திக்காக நாவலரால் நிறுவப்பட்ட முதலாவது பள்ளிக்கூடம் 1848இல் வண்ணார்பண்ணையில் அமைக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியசாலைஆகும். அதனைத் தொடர்ந்து 1865ல்

தென்னிந்தியாவில் சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்தில் கோப்பாயிலும், மேலும் இரண்டு சைவத்தமிழ் பள்ளிக்கூடங்கள் அவரால் தோற்றுவிக்கப்பட்டன. நாவலருடைய முன்மாதிரியைப் பின்பற்றி அவருடைய அபிமானிகளால் யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலும் சைவப்பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்விதமாகப் பள்ளிக்கூடங்கள் தோன்றிய இடங்கள் கொழும்புத்துறை, கந்தர்மடம், பருத்தித்துறை, மாதகல், வேலணை ஆகிய பகுதிகளாகும். இப்பள்ளிக்கூடங்கள் நெடுங்காலமாக அரச உதவியில்லாமல் கஷ்டநிலையில் இயங்க வேண்டியிருந்தது.

இவ்விதம் எழுந்த பள்ளிக்கூடங்கள் அனைத்தும்சைவசமயமரபில் தமிழ்மொழிக் கூடாக கல்வியளித்தன என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றுக்கூடாக சைவசமயத்தையும் தமிழ் மொழியையும் பேணிப்பாதுகாக்க நாவலர் சைவம் தமிழ் ஆகிய பாடங்களுக்குப் பயன்படக்கூடிய பாடநூல்களையும் எழுதி வெளியிட்டார். சைவசமயம், சைவவினாவிடை, பாலபாடம், இலக்கணச் சுருக்கம் போன்ற நூல்கள் இவ்வரிசையிற் குறிப்பிடத்தக்கனவாகும். இவை ஒவ்வொன்றும் வகுப்புக்கும் வயதுக்கும் ஏற்பத்தரம்பிரித்து எழுதப்பட்டவை என்பது நினைவிற் கொள்ளத்தக்கது ஆகும்.

ஆங்காங்கு சைவத்தமிழ்ப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பதன்மூலம் பிள்ளைகளுக்கு அவர்களுடைய சமயச்சூழலிற் கல்விக்யளிக்கக்கூடியதாயிருந்தாலும் அவர்கள் ஆங்கிலக்கல்வியைப் பெறுவதற்குக் கிறிஸ்தவ மிஷனெரிமாருடைய பள்ளிக்கூடங்களுக்கு செல்லவேண்டி இருந்தது. அங்கே அவர்கள் கிறிஸ்தவ முறைகளைப் பின்பற்றும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அவ்விதமான துர்ப்பாக்கிய சம்பவங்கள் நாவலரை உள்ளங்குமுறச் செய்தன. எனவே சைவசமய மரபில் ஆங்கிலக் கல்வியைக் கற்பிப்பதற்காக ஒரு ஆங்கிலப்பாடசாலையை 1872ல் வண்ணார்பண்ணையில் நாவலர் ஆரம்பித்தார். ஒரு ஐரோப்பியரைத் தலைமை ஆசிரியராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அப்பாடசாலை அதிக காலம் நிலைத்து நிற்கவில்லை. சைவச்சிறுவர்கள் கிறிஸ்தவருடையதல்லாத ஒரு பள்ளிக்கூடத்தில் ஆங்கிலக்கல்வியைப் பெறக்கூடிய நிலையைக் கண்ட கிறிஸ்வ மிஷனெரிமாரின் கடும் எதிர்ப்பும், அவர்களுடைய செல்வாக்குக்குட்பட்ட அரசு நிதியுதவி வழங்கத் தவறியமையும் பொதுமக்களுடைய ஆதரவு அருகியமையும் அப்பாடசாலையை மூடிவிடும் நிலையை உருவாக்கின.

சைவக்கல்வியை வளர்ப்பதற்கு நாவலர் செய்தவற்றோடு அவர் செய்ய நினைத்தவற்றையும் நோக்குதல் வேண்டும். பள்ளிக்கூடங்களை அமைத்துச் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் கருத்தைச்செலுத்திய நாவலர் அனாதைகளுடைய கல்வியிலும் அக்கறை கொண்டிருந்ததை அவருடைய பேச்சுக்களிலிருந்து அறியக்கூடியதாயிருக்கிறது. அனாதைகளாயிருந்த சைவச்சிறுவர், சிறுமியரைப் பேணிப்பாதுகாப்பது என்ற போர்வையில் கிறிஸ்தவர்களாக மதம்மாற்றும் முயற்சியினை அக்காலக் கிறிஸ்தவப்பாதிரிமார்கள்கையாண்டு வந்தனர். அதனை உணர்ந்த நாவலர் அந்நிலையைத் தவிர்ப்பதற்கு சைவச்சிறார்களுக்கென அனாதை இல்லங்களை அமைக்கத் திட்டம் தீட்டியிருந்தார். அத்தோடு சைவசமய அறிவையும், உணர்வையும் வளர்ப்பதற்கு சைவசமயப் பிரசாரங்களை உருவாக்கிப் பயிற்சியளிக்கவும் திட்டமிட்டிருந்தார். அக்கருத்துக்கள் கைகூடுமுன் அவர் மறைந்தமை சைவ உலகின் துர்ப்பாக்கியமேயாகும்.

கல்வி முயற்சியாக நாவலர் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொகுத்து நோக்கும்போது அவை இலங்கைக் கல்வி வரலாற்றிலே முன்னோடிகளாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இலவசக்கல்வி தாய்மொழிக்கல்வி, சமயபோதனை என்பவை இன்று நமது கல்வி அனுட்டானத்தில் நடைமுறைக்கு வந்துவிட்டாலும் நாவலருடைய செயற்பாட்டில் அன்றே இடம் பெற்றுவிட்டன. அவர் மேற்கொண்ட பிரசங்கங்கள் வெளியிட்ட பிரசுரங்கள் எல்லாம் பொது மக்களிடையே சைவசமய உணர்வையும், அறிவையும், வளர்ப்பதில்

வகித்த இடம் மறக்கத்தக்கதன்று. இன்றைய வளர்ந்தோர் கல்வி முறைசாராக் கல்வி முயற்சிகளோடு அவற்றை ஒப்பிட்டு நோக்குவது பொருத்தமுடையதாகும்.

நாவலருடைய காலத்தில் சைவமறு மலர்ச்சியில் முக்கிய தேவைகளாக இருந்தவை சைவசமயிகளிடையே மதமாற்றத்தைத் தடுத்தல், வைதீக நெறியினைச் சைவர்களிடையே பாதுகாத்தல் என்ற இரண்டுமாகும். அவரால் வெளியிடப்பட்ட சைவசமய நூல்கள் சைவசமய பாரம்பரியத்தையும், இலட்சியங்களையும் பேணி வளர்ப்பதில் அன்றுமட்டுமல்லாமல் இன்றும் பயனளிக்கின்றன. இது ஒன்றே நாவலருடைய பங்களிப்பின் பெருமையைக் காட்டப்போதுமானதாகும். கிறிஸ்தவ மத மாற்று முயற்சிகளுக்கெதிரான பாதுகாப்பு அரண்களாக அவர் தோற்றுவித்த பள்ளிக் கூடங்கள் அமைந்தன.

1879இல் நாவலர் மறைந்த பொழுது அவருடைய பணிதொடர்வதற்கான உணர்வும் வலுவும் சைவசமயத்தவர்களிடையே வளர்க்கப்பட்டுவிட்டன. அதன் பயனாக நாவலர் தொடங்கிய பயணம் நிறுவனங்களாலும் தனிநபர்களாலும் தொடரப்படுவதைக் காணலாம். நாவலருடைய மறைவுக்குப்பின் அவரது அபிமானிகள் சிலர் சேர்ந்து சைவப்பிரகாச சமாஜீயம் என்ற ஒருசங்கத்தையும் உதயபானு என்ற தமிழ்ப் புதினப்பத்திரிகையையும் 16-08-1880இல் தொடங்கினர். எனினும் இச்சங்கம்நெடுங் காலம் நிலைத்து நிற்கவில்லை. அதனிடத்தில் 1888இல் யாழ்ப்பாணம்சைவபரிபாலன சபை உருவாகியது. அதுவும் நாவலருடைய அன்பர்கள், அபிமானிகள், மாணவர்கள், உறவினர்கள் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது. அதன் நோக்கம் செயற்பாடு எல்லாவற்றிலும் நாவலரின் முயற்சிகளின் சாயலைக் காணலாம்.

அவ்விதம் செயற்பட்ட நிறுவனங்கள் தனிநபர்கள் ஆகியோருடைய உழைப்பு நாவலர் தொடக்கிவைத்தபணியைநாடெங்கிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பரப்பியது. அது சைவவித்தியாவிருத்திச்சங்கம் போன்ற அமைப்புக்களினால் இருபதாம் நூற்றாண்டிலும் தொடரப்பட்டது. அத் தொடர்ச்சியின் விளைவே இன்றும் எமது நாட்டில் சைவத்தையும் சைவசமய மரபுக் கல்வியையும் மிளிர வைத்தது.

---

## கேள்வி அறிவு

உணற்கினிய இன்னீர் பிறிதுழி இல்லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார் — * கணக்கினை
முற்றப் பகலும் முனியாது இனிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று.

— நான்மணிக்கடிகை

* கணக்கு = நூல்

# இணையத்தில் தவழும் தாய்மொழி

த. பிரணவன்
*2002 உ. த. (கலைப்பிரிவு)*

உலகில் வழங்கும் செம்மையான மொழிகளுள் ஒன்றாக விளங்கும் நம் தமிழ்மொழி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்த கவிவளமுடையதாய் உயர்நிலை பெற்றுள்ளது என சங்க கால நூல்களில் அறியக்கிடக்கின்தேயன்றி அதன் ஆரம்ப நிலையைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

இப்படிப்பட்ட பழமையான தமிழ் மொழியை பண்டைக் காலத்தில் முச்சங்கங்கள் அமைத்து பேணினர் என்றால் மிகையாகாது. அது போல ஓலைச் சுவடிகளில் வளர்ந்த தமிழ் இன்று தகவல் தொழினுட்ப வளர்ச்சியின் உச்சக்கட்டமாகவுள்ள இணையத்தின் தொட்டிலில் தவழ்ந்து வருகிறது ஆங்கிலம் தெரிந்தால் தான் கணனியை உபயோகிக்க முடியும் என்ற நிலையை இல்லாமல் செய்யவேண்டும் என்பதற்காக எமது தமிழ் மொழியையும் இணையத்தில் இணைக்க வேண்டிய தன் அவசியத்தை உணர்ந்து தொழினுட்ப வல்லுனர்கள், தமிழறிஞர்கள் என்போரின் கூட்டு முயற்சியால் ''தமிழ் இணையம்'' என்ற எண்ணக்கரு துரித கதியில் செயற்பட்டு வருகிறது.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் தமிழ் மொழியிலும் அதன் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டுள்ளனர். பல நாடுகளில் தமிழர்களாகத் தம்மை அடையாளப்படுத்தித் தமிழர்களாகவே வாழ்கின்ற போதும் தமிழ் மொழியைப் பேச, எழுதத் தெரியாத, இதனைக் கற்க வாய்ப்பில்லாத நிலையில் பலர் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் தமிழ் மொழியையும் இலக்கியங்களையும் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவே தமிழக முதல்வரின் யோசனைப்படி இணையப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இதனூடாக தமிழ் மொழி இலக்கியங்கள் என்பவை உள்ளடக்கப்பட்ட பாட நெறிகளும் ஏனைய சாதாரணமாக ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்படக் கூடிய பாட நெறிகளும் அறிமுகப்படுத்தப் பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படும். வீட்டிலிருந்தவாறு தமது வசதிக் கேற்ப உலகின் எப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் இப்பாடநெறிகளைப் பயின்று பரீட்சையில் தோற்றிப் பட்டம் பெற்றுக்கொள்ளலாம்.

அடுத்து இணையத் தமிழ் நூலகம் ஒன்றை இப்பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இணையத்தினூடாக உலகின் எப்பாகத்திலும் இருக்கும் ஒருவர் விரும்பிய நேரத்தில், விரும்பிய நூலை வாசித்துப் பயனடைய முடியும். இதற்காக இணையத்தில் பல நூல்கள் ஏற்றப்பட்டுள்ளன. அத்துடன் இணையத் தமிழ் அகராதியும் உருவாக்கப்படுவதன் மூலம் தேவையான பொழுது இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இணையத்தில் தமிழ் மொழியின் ஆக்கிரமிப்பை வெளிப்படுத்தக் கூடிய ஆதாரமாக ''இன்தாம்'' (Intamm) விளங்குகிறது. சர்வதேச ரீதியாக வாழும் தமிழர்களை இணைக்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இத்தளத்தில் தான் அதிகளவு செய்திகளும், தமிழ்ச் சஞ்சிகைகளும் இடம் பெற்றுள்ளன. இதன் புதிய வரவு ''பனித்துளி'' என்ற வார சஞ்சிகையாகும். இணையத்துக்கென்றே தயாரிக்கப்படும் இந்தப் பல்சுவைச் சஞ்சிகையில் சிறுகதை

முதல் ஜனரஞ்சகமான பல்வேறு தகவல்களும் அடங்கியுள்ளன. ''இன்தாம்'' பக்கத்தில் வரும் ''விண்ணோசை'' மிகவும் பிரபலமானது. விண்ணோசையில் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் செய்திகள் இடம்பெறுகின்றன. இவை தினசரி புதுப்பிக்கப்படும். அத்துடன் முக்கியமான படங்களும் இதில் வெளியிடப்படுவதால் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது இதனைவிட அனைவருக்குமே பயன்படக்கூடிய முறையில் பதினெட்டுச் சஞ்சிகைகள் இதில் இடம் பெற்றிருக்கிறது. மாணவர்களுக்கான ''நூற்றுக்கு நூறு'' முதல் ''வளர்தொழில்'' ''தமிழ்க் கொம்பியூட்டர்'', ''மூலிகைமணி'', ஒளியோவியம் (சினிமா) போன்ற சஞ்சிகைகள் இடம்பெறுகின்றன. எழுத்தாளர்கள்; இலக்கியவாதிகளின் பேட்டிகள் இலக்கிய ஆர்வலர்களிடையே பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளன. இணையத்துக் கென்றே தயாரிக்கப்பட்ட மற்றொரு சஞ்சிகை தான் ''தமிழ்ச் சோலை'' கணனி இணையம் வாயிலாக மாதமிருமுறை மலரும் உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கான முதல் பன்னாட்டுப் பல்சுவைத் தமிழ் இதழ்'' என்ற மகுடத்துடன் இணையத்தில் வெளியாகும் இச்சஞ்சிகை ஜனரஞ்சகமான அதே வேளை தரமான அம்சங்களைக் கொண்டுள்ளது. ''முரசு அஞ்சல்'' ரக எழுத்துருவில் வெளியிடப்பட்டுள்ள இச்சஞ்சிகையில் சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்கு திரைப்படம் அழகுக்குறிப்பு சமையல் குறிப்பு ஆகிய பகுதிகள் உள்ளன. இதனைப் பார்வையிட http: / w w w indiaplus Com / Cholai / Inder Shtml. என்ற தளத்தில் இணைய வேண்டும்.

தமிழில் மின்னஞ்சல் செய்வது நமக்கும் மொழிக்குமான உறவை தாய்க்கும் குழந்தைக்கும் இடையேயான உறவால் பிணைப்பதாகும். தமிழில் மின்னஞ்சல் செய்தால் ஆங்கிலத்தை விட மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். உலகின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கும் நமக்கு அமுதிலும் இனிய நம் மொழியை உயிர்ப்பிக்கும், வாழ வைக்கும் முயற்சியாக இம் மின்னஞ்சல் சேவை தமிழில் முதன் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ் மட்டும் தெரிந்த ஒருவர் ''மெயில் அம்பலம்'' மூலம் தனது கடிதத் தொடர்புகளை மேற்கொள்ள முடியும்.

தமிழ் இணையத் துறையில் சாதனை புரிந்து வரும் பிரபல தமிழ் எழுத்தாளர் சுஜாதா http: / / w w w Click Sujatha. Com என்ற முகவரியிலுள்ள இணையத்துடன் தொடர்பு கொண்டதும் சுஜாத்தாவின் படத்துடன் கூடிய முகப்புப் பக்கம் வரவேற்கிறது. சுஜாதாவின் இந்த இணையத் தளத்தில் நான்கு அம்சங்கள் உள்ளன. முதலாவது சிறுகதைகள் இதில் சுஜாதா எழுதிய அண்மைக்காலச் சிறுகதைகள் உட்பட பல கதைகள் உள்ளன. இந்த இணையத்துக்கென்றே சுஜாதா சில சிறுகதைகளை எழுதியுள்ளார் இவை தொடர்பான சில விளக்கங்களும் உண்டு. இரண்டாவதாக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள், சிறுகதை நுணுக்கங்கள், உபாயங்கள், உத்திகள் தொடர்பாக இதில் விளக்கமளிக்கிறார் சுஜாதா. மூன்றாவதாக ''சுஜாதாவின் சிறுகதை நுணுக்கங்கள்'' என்ற பகுதி இடம்பெறுகிறது. இதில் சிறுகதைகளை எழுதுவதில் தான் கையாண்டுள்ள நுணுக்கங்களை சுஜாதா விளக்குகிறார். இறுதியாக ''தங்கள் கருத்து'' என்ற பகுதியில் ஆர்வலர்கள் கடிதங்களை அனுப்ப முடியும்.

தமிழின் வளர்ச்சி ஒன்றை மட்டும் முன்வைத்து செயற்பட்டு வரும் ''மதுரைத் தமிழ் இலக்கிய மின் தொகுப்புத் திட்டம்'' பழைய இலக்கியங்களை இணையத்தில் ஒவ்வொன்றாக வெளியிடவுள்ளது. இணையத்துக்குள் சென்று இவ்விலக்கியங்களை வாசிப்பதுடன் அவைகளைத் தனிமனித சுவைத்தலுக்கும், ஆய்வுக்கும் என இலகுவாக நகலெடுத்துக் கொள்ளலாம் இதில் ஏற்கெனவே திருக்குறள், ஔவைப் பாடல்கள், திருவாசகம் திருமந்திரம், நாலாயிரம் திவ்ய பிரபந்தம் ஆகியன வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனைப் பார்

வையிட http // w w w. tamil. net/Project madurai எனும் இணைய முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

உலகளாவிய ரீதியில் தமிழ் மொழியின் நன்மைக்காய் ஒரு நியம வடிவத்தை ஏற்படுத்துவது அவசியம். தமிழ் நெடுங் கணக்கு எழுத்துக்களில் பல்வேறு குறியீடுகளும் பயன்படுகின்றன. உயிர் மெய் எழுத்துக்களில் எகர, ஏகார, ஐகார, ஒகர. ஓகார உயிர் மெய் எழுத்துக்களுக்கு முறையே ஒற்றை, இரட்டை கொம்புகளுடன் அரவு போன்ற குறியீடுகள் ஒரு சீராக எல்லா உயிர் எழுத்துச் சேர்க்கைகளுக்கும் பயன் படுத்தப்படுகின்றன. சிங்கப்பூரில் உத்தியோக மொழியாகவுள்ள தமிழ்மொழியை இளைஞர்கள் இலக்கண விளக்கத்துடன் சிறந்த முறையில் கற்கின்றனர்.

இலக்கிய மொழியாக மட்டுமன்றி, அறிவியல் மொழியாகவும் கணினி மொழியாகவும் தமிழை மாற்றியமைப்பது தவிர்க்க முடியாத ஒன்று கணினித் தமிழாக மாற்றுவதற்குரிய பண்புகள் தமிழுக்கு உண்டு, மாற்றியமைக்கும் பணிகளில் இலங்கை. இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற தமிழர்களின் தாய்நாடுகளில் மட்டுமன்றி தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் கூட இதற்கான தீவிர முயற்சிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. கணினிக்குப் புரியும் தமிழ் இலக்கணத்தை உருவாக்கும் பணியில் சென்னையைச் சேர்ந்த 'சுவிதா' கணினி நிறுவனம் வெற்றி கண்டுள்ளது. இந்நிறுவனம் 30 இற்கும் மேற்பட்ட கணினிப் பொறியியலாளர்களுடன் இணைந்து ''கலைஞர் 99 கல்வியாளர்'' என்ற மென்பொருளை ஆக்கியிருக்கிறது

உலகில் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளாகக் கருதப்படும் பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான் சீனா போன்ற நாட்டவர்கள் சகல கருமங்களையும் தம்முடைய தாய் மொழியிலேயே செய்யக்கூடிய விதமாக மொழியை வளர்த்திருக்கிறார்கள். ஆனால் எமது தொழில் நுட்ப வளர்ச்சிக்கு மற்றொரு மொழியை நாட வேண்டிய நிலை உள்ளது. சர்வதேச மொழி ஒன்றை நாம் பெற்றிருத்தல் அவசியம் தான் ஆனால் அதற்காக தாய் மொழியாகிய தமிழை நாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழியைப் போல இனி எங்கும் காணாத அளவுக்கு இணையத்தில வளர்ச்சி பெற்று வருகிறது. மரபணுக்களில் ஆழமாகப் பதிந்து விட்ட உயிரிலும் மேலான தாய் மொழி சங்க காலத்தில் முத்தமிழாகத்தான் இருந்தது. இப்போது இணையத்தளத்தில் அறிவியல் தமிழாக இணையத் தமிழை உருவாக்கி நான்காவது தமிழையும் கண்டிருக்கிறார்கள் இணையத்தில் வளர்ந்து வரும் தமிழ்க் குழந்தை சீரும் சிறப்பும் பெற்று வாழ்க வளமுடன்.

---

**உசாத்துணை நூல்கள் :**

* குமுதம்
* ஆனந்தவிகடன்
* கம்பியூட்டர்டுடே.

# "இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் சுவாமி விபுலானந்தரடிகளின் பங்கு"

**செல்வி துளசி சிவஞானராஜா**
*கலைப்பிரிவு (2003),*
*யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி.*

உலகப் புகழ் படைத்த உத்தம அறிஞர்களின் வரிசையில் வைத்து எண்ணப்படுபவர் தவத்திரு சுவாமி விபுலானந்தரடிகளே யாவார். அந்நியர் படையெடுப்புக்களால் இலங்கையின் கரைப்பிரதேச மக்களின் பாஷை, சமயம், கலாச்சாரம் என்பன வீழ்ச்சியடைந்தன. அதனால்சைவசமயிகள் ஆயிரக்கணக்கில் கிறீஸ்தவராயினர். அந்நேரத்தில் சைவமக்கள் கோயில் கும்பிடவோ அதன் ஆசாரங்களையோ செய்ய முடியாமல் தவித்தார்கள். அந்த இடர்ப்பாடுள்ள காலத்திலேயே நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அவதாரஞ் செய்து அருந்தொண்டாற்றி 1879ல் அமரரானார். அதன் பின்பும் ஆங்கிலேயரின் ஆட்சியிலும் இந்த நெருக்கடியில் இருந்த போது தான் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிலுள்ள காரேறு மூதூராம் காரைதீவில் அடிகளார் அவதரித்தார்.

கற்றலிலும் கேள்வியிலும் சைவசமயத்திலும் நீண்டகாலப்பழங்குடி வழிவந்த கிராமவிதானையார் சாமித்தம்பிக்கு கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த கண்ணம்மை வயிற்றில் உதித்தவர் தான் விபுலானந்தர். பெற்றாரிருவரும் இறைவனை வேண்டி மகனை உயர்தரமாகப் படிப்பிக்க நினைத்தனர். அக்காலத்தில் திருமலையில் படித்த மேதாவியாகவிளங்கிய பேரறிஞர் த. கனகசுந்தரம்பிள்ளை போலவும் மட்டக்களப்பைச் சேர்ந்த புலவர் பூபாளப்பிள்ளையைப் போலவும் யாழ்ப்பாண நாவலர்போலவும் தமது மகன் உயருமாறு தந்தையார் சாமித்தம்பி அவருக்குக் கல்வியூட்டுவதில்லாமல் வைத்தியலிங்க தேசிகரிடமே வடமொழியையும் கற்கச் செய்தார், மகனுக்குச் சூட்டிய தம்பிப்பிள்ளை எனும்பெயரை மாற்றி மயில்வாகனன்என மாற்றிச்சூட்டிய சாமித்தம்பி ஆங்கிலக் கல்வியை கல்முனையிலும், மட்டக்களப்பிலும் உள்ள கத்தோலிக்கக் கல்விக்கூடங்களிலும் படிக்க வைத்தார். சிறுவயதிலேயே சைவசமயத்தின் பொருட்டு பெரியபுராணம், கந்தபுராணம், இராமாயணம் ஆகிய நூல்களை நன்கு வாசித்தறிந்த மயில்வாகனம் 1909ல் மட்டக்களப்பு புனிதமிக்கேல் உயர்தரக்கல்லூரியில் படித்து கேம்பிரிஜ் சீனியர் தேர்வில் முதலாவதாகச் சித்தியடைந்தார். அதனால் ஆரம்பத்திலேயே மேனாட்டறிஞரின் வரலாறுகளைக் கற்றுக்கொண்டார். அவர்களைப் போல உயருவதற்குக் கல்வியே கருந்தனம் எனக்கண்டு கொண்டார். அதே கல்லூரியிலேயே அவரதுதிறமை நோக்கி ஆசிரியராகவும் அமர்த்தப்பட்டார்.

அத்தொழிலால் மாணவர்களுக்குச் சமய அறிவு ஏனையதமிழறிவு, ஏன்ஆங்கில அறிவையும் கற்பித்துச் சேவை செய்ய விரும்பினார். தாயார் காலமான பின் கொழும்பை அடைந்தார்.

**கொழும்பில் :**

கற்கவேண்டியன எத்தனையோ அத்தனையுங் கற்றுக்கொண்டார், இருவருடம் ஆங்கிலப் பயிற்சி பெற்றார். அந்தக்காலத்திலேயே மதுரைப் பண்டித வகுப்பிற் சித்தியடைந்து தம்மையுயர்த்திக் கொண்டார். கொழும்பிலிருக்கும் போதே சைவசித்தாந்தத்தைக் கற்றுக் கொண்டார். ஏனைய பௌத்த கிறீஸ்தவசமய நூல் உண்மைகளை

நன்றாக வாசித்து அறிந்தார். எல்லாச் சமயத்தவரோடும் அன்பாகவும், பண்பாகவும் பழகினார். ஆயினும் நமது இந்து சமய ஆசாரங்களிலும் பண்பாடுகளிலும் அதிக நாட்டங்கொண்டார். சமயம் என்பது மனிதனைப் பண்படுத்துவதற்காக ஏற்பட்ட நெறி. அது வாதாடுவதற்கன்று, என்பதை ஆணித்தரமாய் வற்புறுத்தியவர் ஆயினும் எச்சமயத்திலுமுள்ள நல்லனவற்றைப் போற்றி ஏற்றுக்கொண்டவர்.

**யாழ்ப்பாணத்தில் :**

யாழ்ப்பாணத்தவரான சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஆண்களுக்கொன்றும் பெண்களுக்கொன்றுமாக இரு பெரும் கல்லூரிகளைமைத்த தொண்டினை அடிக்கடி கூறிப் பாராட்டுவார்.

மற்றும் தமிழுக்கும் சைவத்திற்கும் அருந் தொண்டாற்றிய நாவலரின் பாரிய தொண்டினையும் வியப்பார். அதனால் யாழ்ப்பாணம் செல்லக் காலம் பாத்திருந்த போது ஒரு அரிய சந்தர்ப்பம் தானாக வந்து சேர்ந்தது. 1917இல் யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான பாடத்திற்காக நியமிக்கப்பட்டார். புகையிரதமூலம்யாழ்ப்பாணம்வந்தடைந்த மயில்வாகனர் கீழே நிலத்தில் காலடியெடுத்து வைக்கும் போது பெரிதும் குதூகலமடைந்தார். தமக்குரிய கல்லூரியைச் சென்றடைந்ததுஞ் சுற்றும் முற்றும் பார்த்தார். சில வாரங்களின் பின் சில ஆசிரியர்களின் துணைக்கொண்டு வீதிகளில் உலா வந்தார். கிறீஸ்தவ கோயில்கள், மடங்கள், இந்துக்கல்லூரிகளையுங் கண்டார். பழைய முறைப்படி வாழும் சைவ நற்புலவர், தமிழுரையாளர், நல்லியற் புலலர், இசைதரும் புலவர், நாடகம் வல்ல புலவர் முதலாம் பல வகையான புலவர்க்கும் உறைவிடமாக யாழ்ப்பாணம் விளங்குவதைக் கண்டார். தான் கண்ட அக்காட்சிகளை, ஒரு அரிய விருத்தமாக தமிழ்ச் சமுதாயத்துக்கு நன்கொடையாக வழங்கினார்.

இதோ அந்தப் பாட்டு :

தொல்லியல் வழுவாச் சைவநூற் புலவர்
 தூநெறித் தமிழுரை காரர்
நல்லியற் புலவர் இசை தரும் புலவர்
 நாடக நவிற்றிடும் புலவர்
சொல்லியல் தொகைநூல் வசனநூல் தருக்கம்
 தோமறு கணித நூல் முதலாம்
பல்வகைப் புலவர்க் குறைவிடமாகப்
 பரந்திசை யெய்தும் யாழ்ப்பாணம்

எவ்வளவு அருமையான பாட்டு இது. மேலும் அங்கிருக்கும் போதே லண்டன் பல்கலைக் கழகம் நடாத்தும் விஞ்ஞான மாணிப் பட்டத்தைப் (B. Sc) பெற்றார். கொழும்புத்துறை முனிவராம் உயர்திரு யோகசுவாமியிடம் ஆசீர்வாதம் பெற்ற அடிகளாருக்கு துறவு, எண்ணமும் ஆரம்பித்தது. அயலிலேயுள்ள ஆனைப்பந்தியடியில் நண்பர்களின் உதவியோடு விவேகானந்த சபை என்னும் ஒரு சபையை அமைத்து அதில் அறிஞர்களின் கருத்துரைகளை வழங்கச் செய்தார். கடையிற் சுவாமியார் சஞ்சாரஞ் செய்த வீதிகளையும் பார்த்தார். நாவலர் பெருமான் தொடக்கத்திலேயே அமைக்கப் பெற்ற காவிய பாடசாலையையும், நாவலர் சைவப்பிரகாச வித்தியாலயத்தையுங் கண்டு கொண்ட அடிகளார், திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையால் வழங்கப்பட்ட நாவலர் எனும் பட்டத்தையும் அவரடைந்த சிறப்பையும் பாராட்டினார். அந்த உபசாரத்தை தமது மனக் கண்ணால் நோக்கிப் பாடிய பாடல்

பாவலர் போற்றும் ஞான தேசிகரைப்
 பணிந்தவ ராணையின் வண்ணம்
பூவலர் கொன்றை புனைந்தவர் புகழை
 புலமிகு மறிஞர்கூட் டுண்ண

காவலர் வியப்ப உரைத்திடல் கேட்டு
கருணைகூர் தேசிகர் இவர்க்கு
நாவலர் எனும் பேர் தகும் என அளித்தார்
ஞாலத்தார் தகுந்தகு மென்றார்

இச்சுவை தரும் பாடல் மனத்துக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருவதாகும். இப்பாடல்களன்றி பல பாடல்களை காவலரைப் போற்றியும் ஏத்தியும் பாடியுள்ளார்.

தம்மையீன் றெடுத்த யாழியல் நாட்டில்
சைவமாஞ் சமயமும் புலவர்
செம்மைசே ருளத்திற் பொலிந்தமுத் தமிழும்
சீருறப் பலபணி புரிதல்
இம்மையிற் பிறவிக் கியைந்தமா தவமென்
றெண்ணியே விடைபெற்று மீண்டார்
எம்மையும் பயந்த ஈழமா நாட்டின்
இணையிலாப் பெருநிதி யனையார்

இவ்வாறு பெருமைமிக்க அடிகளார், தமது நண்பராகிய திருவிளங்கத்தின் விருப்பப்படி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராயிருந்து பல பணி புரிந்தார். அக்காலம் கொழும்பு வந்திருந்த சுவாமி சர்வானந்தாவைக் கண்டு சென்னை இராமகிருஷ்ண மடத்திற் சேர்ந்து அம்மடத் தலைவர் சூட்டிய பிரபோதசை தன்னியர்ப் பட்டத்தைப் பெற்றார். தமிழ் நாட்டில் இருந்த போதே பலதொண்டுகளைச்செய்து புகழ்பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதன் முதல் ஆக்கம் பெற்ற தமிழ்த்துறைக்குப் பேராசிரியராய் பல பெரிய மகான்கள் உருவாக்குவதற்குகாரணமாயிருந்தார். மகா கவி பாரதியாரின் கவிதை நூலை அச்சேற்றி வெளியிடக் காரணராயிருந்தார். அங்கே நடந்த சைவசித்தாந்த வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடாத்தினார். மகாமகோபாத்தியார் உ. வே. சாமிநாதையர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் விழாக்களிற் கலந்து கொண்டார். அங்கிருந்த போதே முதன் முதல் தமிழ் நாட்டில் தோன்றிய தேவாரப் பண்கள், அயல் தேசங்களிற் சேர்ந்து இராகங்களானமையுங் கண்டார். கோயில்களிலுள்ள சிற்பங்களில் யாழுடன் அமைந்திருக்குஞ் சிற்பங்களைக் குறித்துக் கொண்டார்.

தமது குருவான சிவானந்த மகரிஷியின் பெயரால் மட்டக்களப்புக் கல்லடி உப்போடையில் சிவானந்த வித்தியாலயத்தையும் அமைத்தார். திருமலை சண்முக வித்தியாலயத்தை உயர் கல்லூரியாக்கினார். இலங்கையில் இராமகிருஷ்ண தாபனங்களின் தலைவராகவும் விளங்கினார். கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தை நிறுவினார். 1920 அளவில் யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷா விருத்திச் சங்கத்தை அமைப்பதற்கு உதவியாய் அரசின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்தார். மற்றும் யாழ்ப்பாணத்திற்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று குரலை முதன் முதல் எடுத்து வழங்கியவரும் அடிகளாரே. அடிகளாரின் சமயப் பற்றையும் தமிழ்ப்பற்றையும் நாவலர் பால் அவர் வைத்திருந்த பற்றையும் மெச்சி அன்றிருந்த பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையவர்கள் தமது இலக்கிய வழியென்னும் நூலின் முகவுரையில் பின்வருமாறு எழுதியுள்ளார்கள் :

இலக்கிய வழியிற் சுவாமிகளின் பங்கு மிகப் பெரியது. சுவாமிகளின் செய்யுள்கள் அனைத்துந் தொகுத்து ஒரு விமர்சனஞ் செய்தல் வேண்டும் என்கிறார். வெள்ளை நிற என்ற பாட்டும்; அஞ்சினர்க்குச் சதமரணம். என்கிற பாட்டும்; தாழ்ந்து மென்மொழி பகர்ந்திடேன் என்னும் பாட்டும் அற்புதமானவையென்று கூறி வேறு கவிஞரின் பாட்டுக்கு ஒப்பிட்டுக் காட்டுகின்றார். சுவாமிகளின் பாடல்கள் எண்ணில மட்டக்களப்பு வாவியின் மீன் பாடல் அழியா நிலை படைத்தது என்று பலவாறாக வியக்கிறார்.

1939இல் இமயமலைக்குச் செல்ல முதனாள் கொக்குவில் இராமகிருஷ்ணப் பாடசாலைக்கு வந்தவர் இணுவில் வடிவேற் சுவாமிகளுடன், கூட்டிக்கொண்டு போய் இணுவில் மஞ்சத்தின் கலைச் சிறப்பைப் பார்த்து அற்புதம்! அற்புதம்!! என்று வியந்தவர் அதனை செய்வித்த பெரிய சந்நாசியார் அடங்கிய மஞ்சத்தடிச் சமாதிக் கோயிலையும் சென்று, பார்த்துப் பெரும் பரவசப்பட்டார்.

அடிகளார் யாழ்ப்பாணத்தைத் தரிசித்து அதன் சமய, கல்வி, ஆசாரங்களில் மனதைப் பறிகொடுத்தார். பின்பு இமாலயஞ் சென்று 'பிரபுத்த பாரத' என்னும் ஆங்கிலச் சமய சஞ்சிகைக்கு ஆசிரியராகி இந்தியாவுக்கன்றி, பிற தேசங்களிலுள்ள சமய, கலாச்சார பெரியார்களுக்கும் ஓர் உபதேசியாக விளங்கினார்.

1943ல் இலங்கையில் பெரதேனியாவில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியராய் விளங்கினார். அவரிடம் தமிழ் படித்துத் துறைபோகக்கற்ற பெரியார்கள் அநேகருளர். முஸ்லிம்களும் பலர் அவரது வழியிலே அவரைப்போலவே அவரைப் பின்பற்றி பேரறிஞராயினர். காய்தல், உவத்தலில்லாத நடுநிலையாளராம் அடிகளார் தமது கோலத்துக்கேற்ற பாத்திரமாய் வாழ்ந்தார்.

தொல்காப்பியர், திருத்தக்கதேவர், இளங்கோவடிகள், கம்பர், ஆறுமுகநாவலர், ஔவையார் போலத் தாமும் வாழ்ந்து இனிமேல் வருஞ் சமுதாயத்துக்காகப் பயனுள்ள தமிழ் நூல்களையுஞ் சமய நூல்களையும் ஆக்கினார். மரபுக்கவிதைகளிலும் புதுக்கவிதையிலும் வல்லுநரானசுவாமிகள் தமக்கு இசைஞானம் கற்பித்தருளிய சுந்தசாமிப்பிள்ளை மறைந்து போனதை அறிந்து ஆற்றொணாத் துயரடைந்து அவர் அமரராகியிருக்குமிடம் சென்றடையும் பான்மையில் ஒரு அருமையான இனிய கவிதையைப் புனைந்துள்ளார் அதில் இரு கண்ணிகளையே இங்கு குறிப்பிடுகின்றேன்.

மாணியென வாழ்க்கை முற்று
மிலக்கண நூல் பயின்றோன்
வானகத்தும் அது பயில் வான்
எனுமுண்மை தெளிந்தேன்
பாணினி தொல் காப்பியன் சீர்
பதஞ்சலி வா முலகு
படர்ந்தன னென நண்ப னெனும்
பான்மையினை யுணர்ந் தேன்.

தோற்றுவதும் மறைவதுவும்
தொல்லியல் பென்றுணர்ந்து
துயரகன்ற தெனி னுமன்புத்
தொடரகலா மையினால்

மாற்றமொன்று முரையாது
வான்புகுந்தாற் கோலை
வரைவலென அன்பு பொதி
வாசகங்களெழுதி

என்றிங்கனம் அடிகளார் எழுதி சங்கையில் விட்ட ஓலை, என்னும் இந்த அருமருந்தன்ன பாட்டை எழுதிய பாங்கை, இனிமையை கற்பனையை என்னென்று சொல்வது.

இந்த இடத்தில் வாசகர்கள் ஒன்றை நன்றாக அறிந்திருந்தல் மிக அவசியம். நல்ல கல்வியறிவொழுக்கங்களில்மேம்பட்ட விழுமியோர்க்கன்றி மற்றஎவருடைய நாவிலும் கலைவாணி இவ்வாறு தீஞ்சுவைக் கவிமலர்களைப் புஷ்பிக்க இடமளியாள். இதுதான் அடிகளாரின் எந்த முயற்சிக்குங் கைகொடுத்துதவிற்று என்பதை உணர வேண்டும். மேலும் அடிகளாரின் பன்மொழிப் புலமையும் இதற்குக் காரணமானவை என்பதை மறந்துவிட முடியாது.

இதுவரை அடிகளாரின் தமிழ்ச்சிறப்புக்குஞ் சமயச் சிறப்பே முக்கிய காரணம் எனச் சுட்டிக்காட்டினேன்.

இப்பாடலன்றி மதியம் எமக்குக் காட்டும் புத்திமதி பற்றிய பாட்டும் சுவையானது.

ஈசனுவக்கும் இன்மலர் மூன்றும் எந்தத் தமிழ்ப்புலவனாலும், எக்காலத்திலும்எடுத்துக் காட்டாத புதுமைப்பொலிவுடையது.

அடிகளார் எங்கே படித்தாலும் எங்கே சென்றாலும் எந்த ஆக்கங்களைச் செய்தாலும் அவரது அடிமனதில் ''யாழ்நூல்'' பற்றிய எண்ணம் மூலவேராக அமைந்திருந்ததை யாவருமறிவர்.

யாழ் நூல் :

சிலப்பதிகாரத்திலே யாழ்நூல் அரங்கேற்று காதையில் வரும் பலவித யாழ்களைப்பற்றி ஆராய்ந்தெழுதியவர் மறைந்து போன பேரியாழைப்பற்றியும் ஆராய்ந்து அதை நுண்மையாக அமைத்தும் மீட்டும் காட்டியுள்ளார் இவ்வாறு ஆராய்ந்துகாட்டிய யாழ்வகைகளையெல்லாம் விளக்கமாக எழுதிய அடிகளார் அதனை 1947ம் ஆண்டு

தமிழ் நாட்டில் திருக்கொளம்புதூரிலுள்ள விநாயகர் ஆலயத்தில் அக்காலத்தில் தமிழகக்கல்வி மந்திரியாகவிருந்த அவிநாசிலிங்கஞ் செட்டியார் தலைமையில் மங்கல வாத்தியம் முழங்க வாசித்து அரங்கேற்றினார். வேதாந்த சித்தாந்த சமரசஞானியாகிய அடிகளார் எதுவித சமய வேறுபாடுமின்றி இந்நூலை அரங்கேற்றி, பெருஞ்சாதனை புரிந்தாரென்றால் அது மிகையாகாது.

பல வித்துவான்களின் முன் பாராட்டப்பட்ட அடிகளாரை தமிழ்நாடு பலவாறாகப் போற்றிப் புகழ்ந்தது. எந்த நேரமும் அயராது உறக்கமின்றிப் பணிசெய்த அடிகளார் கொழும்பை அடைந்தபோது, நகர சபையும், கொழும்புத்தமிழ்ச்சங்கமும் நன்றாக வரவேற்றுப் புகழ்ந்து பாராட்டின. அக்காலத்திலேயே யாழ்ப்பாணமடைந்த அடிகளாருக்கு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் மகாபெரிய வரவேற்பொன்று காத்திருந்தது; இந்நிகழ்ச்சியெல்லாம் முடிய அடிகளார் தமது பரிசனர்களுடன் கொழும்பு திரும்பினார். மிகக் களைப்படைந்தவரான அடிகளார் 1947 யூலை மாதத்தில் 19ஆம் திகதி அமரரானார். அவரது பூதவுடல் அடுத்தநாள் கல்லடி உப்போடையிலுள்ள சிவானந்த வித்தியாலய கிழக்கு வாசலில் சமாதி வைக்கப்பட்டது. அச்சமாதியில் அவரது

ஈசனுவக்கும் இன்மலர் மூன்றுஎன்னுங் கவிதைகளெழுதப்பட்டன. அடிகளார் மறைந்தாலும் அவரியற்றிய நூல்களும் சிறப்பாக யாழ்நூலும் அவரது நாமத்தை உச்சரித்தபடியே இருக்கும் என்பதில் ஐயமில்லை. வாழ்க அடிகளார் புகழ்! வளர்க அவரது திருநாமம்.

அடிகளார் இறைவனடி சேர்ந்தாலும் அவரியற்றிய யாழ்நூல் போல அவருக்கு உயர்ந்த பெயரை ஈட்டித்தந்தது. அவரியற்றிய மதங்கசூளாமணி என்னும் நாடக நூலாம். ஆங்கிலப் புலவராகிய ஸேக்ஸ்பியர் இயற்றிய பன்னிரு நாடகங்களைத் தமிழிற்பெயர்த்தெழுதிப் புகழ்கொண்டவர் அந்நாடக நூலிலேயே மானிடரின் ஏழு பருவங்கள் பற்றிய அருமையான பொருள் பொதிந்த பாடல்களைப் பாடியுள்ளார். அந்த நயம் பொருந்திய நூலினாலே தான் அவரை அறிஞர்கள் 'முத்தமிழ் வித்தகர்' என அழைத்தனர். மற்றும் இவற்றைவிட அடிகளார் பல பிரபந்தங்களையும் அழகாகப் பக்தியுடன் பாடி வைத்துத்தான் சென்றார்; என்பதை நாமறிதல் வேண்டும்.

அவர் பாடி எழுதிய பல பிரபந்தங்களினால் அவர் ஒரு வேதாந்தசித்தாந்த ஞானியார் என்பதை நாமறியக் கூடியதாக இருக்கிறது. அவரியற்றிய மரபுக் கவிதை நூல்களிற்சில:

கணேச தோத்திர பஞ்சகம்
கதிரை மாணிக்க விநாயகர் இரட்டை மணிமாலை
சுப்பிரமணியர் இரட்டை மணிமாலை
குமரவேள் நலமணிமாலை
மகாலட்சுமி தோத்திரம்
உமா மகேசுரம்
நடராச வடிவம்

வேதாந்த நூல்கள் :-
விவேகானந்த ஞானதீபம்
கரும யோகம்
ஞான யோகம்
சுவாமி விவேகானந்தர் சம்பாஷணைகள்
நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை என்பவை குறிப்பிடத்தக்கன.

அடிகளாரியற்றிய அருமையான கட்டுரைகள், மதுரைத்தமிழ்ச் சங்கப் பத்திரிகையான செந்தமிழ்த் திங்களிதழிலும் அவர் ஆசிரியராயிருந்த தமிழ்ப்பொழில் வேதாந்தம். வேதாந்த கேசரி என்னும் பத்திரிகைகளிலும், பிரபுத்தபாரத என்னும் மற்றுமொரு பத்திரிகையிலும் வெளிவந்தனவாம்.

---


**உசாத்துணை நூல் :**

விபுலானந்தம் — பண்டிதமணி அவர்கள்

## 2002 கலை ,வர்த்தக மாணவர்மன்ற நிர்வாகசபை



## 2002 வர்த்தகப் பிரிவு மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள்



# சங்கீதக் கலையின் வரலாறு

கு. லக்சனா
2002, உ. த. (கலைப்பிரிவு)

சங்கீதக் கலை இறைவன் மூலமாக வெளிவந்தது என்றேநாம் அறிந்துள்ளோம். கலைமகள் இசையின் தெய்வமாகக் கொண்டாடப்படுகிறாள். இதன் காரணமாகவே நாம் வாணிவிழாக் கொண்டாடி வருகின்றோம். இதன் காரணமாகவும் நாரதர், தும்புரு ஆகியோர்கள் யாழ் ஏந்தியவர்களாக இறைவனை மகிழ்விக்கின்றனர் எனவும் இறைவனின் செவிகளிலும் குண்டல வடிவமாக கம்பளர், அசுவதரர் ஆகியோர் அமர்ந்துள்ளனர் எனவும் இதனாலே இறைவன் இசையின்பம் அடைவதாகவும் நூல்கள் கூறுகின்றன. இந்த இசையானது செவிக்கு இன்பத்தினை அளிக்கும் அளவுடன் மட்டுமன்றி மனிதனின் உள்ளத்தினைப் பண்படுத்தும் வகையினையும் உடையது. இதனை விடப் பாண்டிய மன்னர் காலத்தே மதுரையில் முதற்சங்கத்தினால் இயல், இசை, நாடகம் என்கின்ற முத்தமிழும் சிறப்புற வளர்க்கப்பட்டன எனவும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இந்த ஆதாரங்களினாலும் இராவணனின் சாமகான வரலாற்றினாலும் நாம் உணர்வது சங்கீதம் ஆகும். இச்சங்கீதம் ஆனது பழைய காலத்திலிருந்தே தோன்றிவளர்கிறது. இறைவன் ஓர் இசைப்பிரியன். பிற்காலத்தில் பல இசை வல்லுனர்கள் தோன்றி இசை நூல்களை இயற்றியும் இசைவளர்த்தார்கள். பரதமுனிவர், மதங்கமுனிவர், நாரதமுனிவர், ஜெயதேவர், சாரங்கதேவர் முதலான ரிஷிகளால் முறையே நாட்டிய சாஸ்திரம், பிருகத்தேசி, சங்கீத மகரந்தம், கீத கோவிந்தம், சங்கீதரத்தினாகரம் முதலிய இசை நூல்களும் 4ஆம்,13ஆம் நூற்றாண்டுகளில் வெளியிடப்பட்டன.

இதற்கு இடைப்பட்ட காலப்பரப்புக்களில் தேவாரக்காரர்களும், ஆழ்வாராதிகளும் தமிழோடு இசைபாடல் மறவாது இறைவன் புகழ்பாடி எம் இசைக்கலையை வகைப்படுத்தினர். இப்படியான இசையானது கர்நாடகம், ஹிந்துஸ்தான் என இரு பிரிவுகளாகியது. காலப்போக்கிலே புரந்தர தாசர், அருணகிரிநாதர், தாளப்பாக்கம் சின்னையா ஆகியோராலும் தாளசம்பந்தமான அமைப்புடைய நூல்களும் வெளிவந்தன. சங்கீத மும்மூர்த்திகள், முத்துத் தாண்டவர், கோபாலகிருஸ்ணபாரதியார், அருணாசலக்கவி ஆகியோர்களால் பக்தி மார்க்க சங்கீதப்பாடல்கள் வெளிவந்தன. நாராயணதீர்த்தர் என்பவரினால் கிருஷ்ண லீலாதரங்கினி வெளியானது. இதே வழியில் இராமநாதபுரம் சிறீனிவாசஐயர் பட்டணம் சுப்பிரமணியஐயர்,மகாவைத்தியநாத ஐயர் ஆகியோர்கள் இசை நூல்களை இயற்றியும் காப்பாளர்களாகவிருந்தும் இசையை வளர்த்தார்கள்.

முத்தையா பாகவதர், கோயமுத்தூர் ராகவஐயர், அனந்தராமபாகவதர், வேதாந்தபாகவதர், குன்றக்குடி கிருஸ்ணையர் முதலியோர் எல்லையில்லாத சாஸ்திர அறிவும் செயலாற்றலும் நிறைந்தவர்களாகச் சங்கீத உலகினை ஒளிபெறச் செய்தனர். வாத்திய சங்கீதத்திலும் வாளாடி ராதா கிருஷ்ணையர், கிருஸ்ணையர், வெங்கேயராவ், வெங்கடரமணதாஸ், சங்கமேஸ்வர சாஸ்திரி. மகாதேவபாகவதர், பழனி கிருஸ்ணையர், கஞ்சிரா ராதாகிருஸ்ணையர், கோவிந்தசாமிப்பிள்ளை, கரூர் சின்னச்சாமிஐயர் தஞ்சாவூர்வைத்தியநாத ஐயர் ஆகியோர்கள் இசை உலகில் ஒப்பற்ற தொண்டுகள் புரிந்தும் ஏராளமான சீடர்களைத்தயார் செய்தும் இசையினை வளர்த்தார்கள்.

இதன் பின்னர் நாம் அறியும்படியான காலத்தில் அரியங்குடி ராமானுயஐயங்கார்

செம்பைவைத்தியநாதபாகவதர், நயனா பிள்ளை, முசிரிசுப்பிரமணியஐயர், சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, வீணை சாம்பசிவ ஐயர், டைகர், மகாராஜபுரம் ஆலத்தூர் சகோதரர், மதுரை மணிஐயர், மிருதங்கம் பாலக்காட்டு மணிஐயர், பழனிசுப்பிரமணியபிள்ளை போன்ற இசை விற்பன்னர்களாலும் இசை வளர்ந்து வருகின்றது. இவர்கள் மட்டுமின்றி இன்னும் பல இசைவல்லுனர்களும் இசைநூல்களை ஆக்கியும் இசை வளர்த்தனர். ஆனால் சாம்பமூர்த்திஐயரின் காலத்தில் ஒரு புதிய திருப்பம் நவீன முறையின் புரட்சிகரமாகவும் மாணவர்களை இசைபயிற்றும் வகையில் பல்கலைக்கழகங்களில் இசைப்பீடங்கள் அமைக்கவும் தனியிசைக்கல்லூரிகளை அமைக்கவும் அவற்றிற்கு வேண்டிய இசை நூல்களை குறியீடுகளுடன் தயாரித்தும் அரும்பாடுபட்டு ஆக்கங்கள் பல செய்தார் சாம்பமூர்த்திஐயர் அவர்கள். இவ் வழியினைப் பின்பற்றித் தற்போது பல இசைக் கல்லூரிகள் உருவாகியும் இசை வளர்க்கின்றன. இதே போன்று மைலாட்டூர்சாமிஐயர் அவர்கள் ''மிருதங்கப்பாட்டுமுறை''எனும் நூலைக் குறியீடுகளுடன் எழுதித்தந்துள்ளார்.

இதுமட்டுமல்லாமல் இந் நூல்களின் உதவியினால் இந்தியாவில் மட்டுமல்ல இலங்கை, மலாயா போன்ற இடங்களிலும் மேலை நாடுகளிலும், நமது கர்நாடக இசையானது கல்லூரிகளில் பயிற்றப்பட்டும், இதற்கெனத் தனியாக பரீட்சைகளும் நடாத்தப்படுகின்றன. இப்பெருமை சாம்பமூர்த்திஐயர் அவர்களுக்கு உரியது என்பதில் சந்தேகமில்லை. இம் முறைகளினாலும் இசை வளர்ந்தது எனலாம்.

**சங்கீதக் கலையும், தேசியக்கல்வி முறையில் அதன் அவசியமும் :**

ஆறு அறிவுபடைத்த மனிதனுக்கும் ஜீவராசிகளுக்கும் ஏனையவற்றிற்கும் வளர்ச்சி என்பது உண்டு. வளர்ச்சியென்னும் போது பலவகைகளைக் குறிப்பிடும். ஆனால் மனிதனின் உடல் வளர்ச்சிக்கு உணவும் உடற்பயிற்சியும் இன்றியமையாததாகும். உடல் வளர்ச்சியைப் போன்றே அறிவும் வளர்தல் அவசியமாகும். இதற்கு கல்வி தேவை. இது மட்டுமல்ல மனிதனுக்கு உளவளர்ச்சியும் தேவை. இவ் வளர்ச்சியை அளிக்கவல்லது சங்கீத இசைக் கலையே ஆகும். இசை மனிதனுக்கு ஆன்ம திருப்திக்கேற்றவாறு செவிக்கும், மனதிற்கும் இன்பத்தினை அளிக்கிறது. எனவே தான் பழைய அரசர்கள் இக்கலையைப் பேணிப்பாதுகாத்து வளர்த்தனர்.

முற்காலத்திலே இக்கலையானது குருசிஷ்ய முறையாகவே கற்பிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்காலத்தில் நாகரீக முன்னேற்றத்தின் பயனாக தேசியரீதியாக கல்விக்கூடங்கள் அமைக்கப்பட்டும் அவைகளின் மூலமாகவும் சங்கீதத்தினை ஆர்வமாகக்கற்று சாதனைசெய்கிறார்கள் எனவே சங்கீதமானது மற்றைய கலாச்சாரத்திலும் இடம்பெறுகிறது. இதற்காகவே அரசாங்கமும் தேசியக்கல்விமுறையில் இசைவளர்க்க ஆவன செய்து வருகிறது, இதற்காகப் பெரும்பகுதிப் பணத்தை செலவிடுகிறது. இம்முறையினால் வறிய பிள்ளைகளும் சங்கீதமாகிய அருங்கலையினைப் பயில வசதியாயிருக்கும். இப்படியான முன்னேற்றத்திற்கு உதவி அளிக்கும் வகையில் முதிர்ந்த வித்துவான்கள் யாவரும் இதற்கான ஆலோசனைகள் வழிவகைகள் யாவற்றையும்பெறுதல் அவசியமாகிறது. இதன் பயனாக விற்பன்னர்கள் பலரை நாம் பெறமுடியும்.

எனவே தேசியக்கல்விமுறையிலே சங்கீதக் கல்விக் கூடங்களை அமைத்தும் பல்கலைக்கழக பட்டப்படிப்புகளையும் அதற்கான பாட நூல்கள், கருவிகள் ஆகியவற்றை ஆக்கியும் நல்ல பேராசிரியர்களை நியமித்தும் சங்கீத வளர்ச்சிக்கு அரசு உதவவேண்டும். இதுமட்டுமல்லாமல் கணிதப்பாடங்களைப் போலவே சங்கீதப்பாடங்களை முக்கியமாக்கியும் மாணவர்களுக்கு கட்டாய பாடமாக்கியும் மாணவர்களை அரசினர் கல்லூரிகளில் பயிலும்படி செயற்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமை ஆகும்.

**சங்கீதம் கற்பதன் பயன்கள் :**

கல்வியானது மக்களுக்கு ஒழுக்கத்தினை அளிக்கவல்லது. எனவே நாம் கலைகளை

கற்கும் போது ஒழுக்கம் நமக்கு உண்டாகிறது. இதனால் கலாச்சாரங்களைப் பின்பற்றி நாம் நடக்கிறோம். இதனால் நமது நிலை உயர்ந்த படிக்கு வரும். இதன்வழியாக நாம் இறைவனின் திருவடியை அடைவதற்கும் ஆளாக முடிகிறது. இவற்றைவிட ஆன்ம ஈடேற்றத்திற்கும் ஞானவளர்ச்சிக்கும் இசை முக்கியமானதாகும். கலை என்னும் போது பலவிதக்கலைகள் உண்டு. ஆனாலும் இசைக்கு மயங்காத உயிரினங்கள் இவ் உலகில் இல்லை. இதனையே '' இசைக்குருகான் எதற்கும் உருகான் எதற்கும் உருகான் இசைக்கு உருகுவான்'' எனக் கூறுவர்.

இவ் இசையினால் பிணிகள் கவலைகள் ஒழிகின்றன. விஷம் கக்கும் பாம்பினையும் மதம்கொண்ட யானையினையும் இவ்இசையினால் அடக்க முடிகிறது. மனிதனானவன் பிறந்தநாள் முதல் இறக்கும் நாள்வரை இசையுடனே வாழ்கிறான். இதைவிடப்பல ஞானிகளும் குரவர்களும் இசையினால் முத்தியடைந்தார்கள் என சரித்திரங்கள் கூறுகின்றன என்பதால் நாம் இசையைப் போற்றிக்காக்கவேண்டியது கடமை ஆகும்.

---

**உசாத்துணை நூல் :**

*மிருதங்க சங்கீத சாஸ்திரம்*

## கருத்துக் கலசம்

'' மனம் போன போக்கினில் போக விடாதே
மாபெரும் புகழ்வரின் மகிழ்ந்து துள்ளாதே ''

'' அற்பரைப் போயடுத்துன் அறிவை விற்காதே
அறிவுடைப் பெரியோரை அவமதிக்காதே ''

'' கற்பனை உலகினில் கனவு காணாதே
காலங் கடந்தபின் கண்விழிக்காதே ''

# இந்து நாகரிகத்தில் ஆடைகள்

**செல்வன் ப. ராதாகிருஷ்ண சர்மா**
*2002, கலைப்பிரிவு.*

நாகரிகம் என்பது மனித வாழ்வோடு தொடர்புடையது. மனிதனின் நடை, உடை, பாவனை, உணவு, உறையுள், குடும்பவாழ்வு, இறைவழிபாடு, கலை, அரசியல், சட்டம், சமூகம் எனப் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. உலக நாகரிகங்களில் காலத்தால் தொன்மை வாய்ந்த சிறந்த நாகரிகமாக இந்து நாகரிகம் விளங்குகிறது. பல நாகரிகங்களுக்கு வழிகாட்டியாக இந்துநாகரிக அம்சங்கள் உதவியமையை அறிய முடிகின்றது.

இந்த வகையில் காலத்திற்குக் காலம் பல நாகரிக அம்சங்கள் எங்கள் இந்து நாகரிகத்தில் இணைந்து இன்று சிறந்த பண்பாடாக அமைந்திருப்பதைப் பார்க்கலாம். ஆனால் இன்றைய தலைமுறையினரோ முன்னோர்கள் எதையும் செய்யவில்லை. நவீனத்தில் தான் சிறப்புக்கள் உண்டென நினைக்கின்றார்கள் அந்த வகையில் ஒரு அம்சமாகிய ஆடைகள் பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

அக்காலத்தில் இந்தியர்கள் பருத்தி, பட்டு, வாழைநார், மயிர் முதலிய பொருட்களைப் பயன்படுத்தி ஆடைகள் தயாரித்தனர். தமிழ்நாட்டில் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே தரமான ஆடைகள் தயாரித்ததுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்திருக்கின்றார்கள் வேதங்களிலும் மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் கீழாடை மட்டுமன்றி மேலாடையும் அணிந்தனர் என்றும் அரசர்கள் பளபளப்பான ஆடைகள் அணிந்தனர் என்றும் அக்கால ஆடைகள் பற்றி அறிய முடிகின்றது.

வடநாட்டில் எழுந்த அர்த்தசாஸ்திரம் ஆடைகள் தயாரிக்கப்பட்ட இடங்களாக காசி, மதுரை, வங்கம் ஆகியவற்றை சிறப்பாகக் கூறுகிறது. அவ்விடங்களில் பருத்தியும் அதிகமாகப் பயிரிடப்பட்டது. மதுரையில் துகில் என்னும் ஆடை செய்யப்பட்டது. இத்துகில் என்ற ஆடையை வெளிநாடுகளில் வெகுவாகப் புகழ்ந்தனர். தூசு என்னும் இன்னொரு வகை ஆடையும் உபயோகிக்கப்பட்டது. மோதிரம் ஒன்றினூடாக இவ் ஆடையைப் புகுத்தி இழுக்கக் கூடியதாக மிகமெல்லிய பாரமற்ற ஆடையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அக்கால ஆடைகளின் சிறப்புக்களை மாலைப்பனி, தென்றற்காற்று, ஓடும்நீர் என்றெல்லாம் உவமைகள் விளக்குகின்றன. மேலும் வெயிலின் ஆவி, பாலாவி, நீராவி, என்றும் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது பாம்புத்தோல் போன்றும் (செட்டை) ஆடைகள் இருந்தன. '' அரவுரியன்ன அறுவை '' என்றவரி இதனை மெய்ப்பிக்கின்றது. இதனைவிட மெல்லிய மென்மையான ஆடை நேத்திரம் என்னும் துணியால் செய்யப்பட்ட காஞ்சுகம் என்பதாகும். இன்னும் மரப்பட்டையை உரித்த பின் வரும் மெல்லிய தோலைப்போன்றும் (Tisu-ரிசு) ஆடைகள் காணப்பட்டது. பெண்கள் நெஞ்சை மறைப்பதற்கு இவ்வாறான மென்மையான ஆடைகளையே பயன்படுத்தினர் என்பதை '' மகளிர் முலைமேல் மென்துகில் '' என்னும் வரியின் மூலம் அறியலாம். இன்னும் அரைத்தாவணி, சேலைத் தாவணி மட்டுமன்றிப் பஞ்சாபி ஆடைக்கு

மெல்லிய துகில் மார்பில் போடுவதும் இவற்றை மருவி வந்தவை ஆகும்.

மேலும் ஆடைகளில் மெல்லிய தங்க வெள்ளித் தகடுகள்பதிக்கப்பட்டன. இன்று நமது உடைகள், சேலைகளில் 'சீக்குயின்ஸ்' ஒட்டப்படுவதைக் காண்கின்றோமல்லவா. இவை மட்டுமன்றி ஆடைகளில் பல அழகான விலங்குகளின் வடிவங்களும் பொறிக்கப்பட்டன. அன்னப்பறவையின் வடிவம் பொறித்த ஆடைகள் தரமானதாகக் கருதப்பட்டிருக்கின்றது. இவற்றில் பொற்காசுகள் கூட பொருத்தப்பட்டிருந்தது. இவ்வகை ஆடைகள் பொன்னெழுத்து என அழைக்கப்பட்டன. சரிகை என்கின்ற ஒரு வகை ஆடையும் இருந்துள்ளது. இன்றும் சரிகைச் சேலை என்றால் மெல்லிய மயிரிழை போன்ற வெள்ளிக்கம்பிகள் கொண்டு செய்யப்படும் ஆடையாகும். முனிவர்கள் மரவுரியைக் கொண்டு ஆடைகள் தயாரித்து அணிந்துள்ளார்கள். இராமன், இலக்குமணன் ஆகியோர் மரவுரி தரித்துக் கொண்டு காட்டிற்குச் சென்றமையை அறிகின்றோம் வேதங்கம் என்றும் ஒருவகை ஆடை இருந்துள்ளது.

வண்ணாடை என்பது பல வர்ணங்கள் பொருந்திய ஆடையாகும். இவற்றை இன்றும் பெண்களின் ஆடைகளில் காணலாம். கவற்றுமடி என்பது பல மடிப்புக்களைக் கொண்ட ஆடையாகும். இன்று பெண்களின் பாவாடை, தாவணி மடிப்புக்களைக் காண்கின்றோமல்லவா. அந்தணர்கள் தார் பாச்சி வேட்டிகட்டும் போதும் பெண்கள் சேலை உடுக்கும் போதும் பல மடிப்புக்களை அமைத்துக் கொள்கின்றனரே. இவ்வகையில் தொழிலுக்கேற்ற வகையிலும் ஆடைகள் அமைந்திருந்தன. கிரியை, பூசை செய்வோர் அணியும் ஆடை தூரியம் எனப்பட்டது. இவற்றைவிட சத்தியம் என்றும் ஓர் ஆடை இருந்தது. தோத்தி என வடநாட்டார் வழங்குவதே எங்கள் வேட்டியாகும். திருமுருகாற்றுப்படையில் தோத்தி எனும் ஆடைபற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

பனிக்காலத்தில் போர்த்துக்கொள்ளப் பயன்படுத்திய ஆடையைப் போர்த்தி என வழங்கினர். இதுவே தற்போது போர்வை என அழைக்கப்படுகிறது. பீதகம் என்பது மஞ்சற்பட்டாகும். இதை இன்றும்பீதாம்பரம் என அழைக்கின்றனர். பச்சிலை என்பது பசிய நிற ஆடை ஆகும். நுண்டுகில் என்பது முன்னர் குறிப்பிட்டது போன்று மெல்லிய ஆடையாகும். இவ்வாறாக முற்காலத்தில் அணிந்த ஆடைகள் எல்லாவற்றையும் கூறை என்றே அழைத்தனர் பெரியாழ்வார் பாசுரம் நாராயணா என்று அழைக்காத மனிதர்கள் உடுக்கும் கூறையும் உண்ணும் சோறும் பருகும் நீரும்பாவம் செய்தன என்று கூறுகிறது.

> "நரக நாசனை நாவில் கொண்டழையாத
> மானிட சாதியர் உடுக்கும் கூறையும் உண்
> ணும் சோறும் பருகும் நீரும் பாவம் செய்
> தனவாம் கொலோ"

முற்காலத்துத் தமிழர்கள் வாணிபத்தில் கறி எனும் மிளகு உரோமாபுரிக்கு ஏற்றுமதியானது போல தறி எனும் பல்வேறு ஆடைகள் துணிகள் ஏற்றுமதியாயினஎன்று பெரிபுளூஸ் தனது குறிப்பில் எழுதியுள்ளார். இவையும் சோழநாட்டு உறையூரில் இருந்தே அதிகமாக ஏற்றுமதியாயின. ஒல்லாந்தர் முதலியோரும் தமிழரின் நெசவுக்கு நல்லாதரவு வழங்கினர். பிரெஞ்சுக்காரரும் தமிழரின் தரமான நெசவை விரும்பினர். ஆங்கிலேயரின் கிழக்கிந்திய வர்த்தக சங்கம் இவ்வணிகத்தையும் கவனித்தது.

திருவள்ளுவர் நெசவுத்தொழிலில் ஈடுபட்டவர். அமர்நீதிநாயனார் ஒரு நெசவாளர், தன்னிடம் வரும் சிவனடியார்களுக்கு இருஆடைகளை இலவசமாகவழங்குவார். உமாபதி சிவாச்சாரியார் மறைஞான சம்பந்தரின் பாதங்களில் பணிந்து சீடரான போது மறைஞான சம்பந்தர் சென்று கூழ் வாங்கியருந்தியது நெசவாளரிடமாகும் இப்பரம்பரையினரே இலங்கையில் செங்குந்தர் என்று வாழ்கின்றனர். உமாபதிசிவாச்சாரியாரைக் கொடியேற்றவிடாது தடுத்தமையால் பல ஆலயங்களுக்கு கொடிச்சேலையைக் கொடுத்துக் கொடியேற்றத்தை ஊக்குவிக்கின்றனர். இன்றும் இலங்கையில் இது நடைபெறுகிறது.

மகாத்மாகாந்தி தன்னிடம் கற்கும் மாணவர்கள் தாம் ஆடை நெய்து தொழிற் கல்வியையும் கற்க வேண்டும் என ஆதாரக் கல்வித் தத்துவத்தை நெறிப்படுத்தினார். அவர் தன்கையாலேயே தனக்கு வேண்டிய கதர் ஆடைகளைத் தயாரித்து அணிந்து வந்தார். இன்றும் இந்தியாவில் கைத்தறி ஆடைகள் தரமானதாகவும் மலிவானதாகவும் காணப்படுகிறது. இலங்கையில்கூட கதர் ஆடைகள் மட்டும் அணிகின்றவர்களை இன்றும் காணலாம்.

இதே மரபிலேயே கிரியை செய்யும் அந்தணர்களுக்கு வேட்டி, சால்வை போன்றன தானம் செய்தலும் திருமண வைபவங்களில் மணமகனுக்கு வேட்டி சால்வையும் மணமகளுக்கு சேலை வழங்குவதும் இன்றும் நம்மவர்கள் மத்தியில் காணப்பட்டு வருவதும், கோவில்களில் வேலை செய்பவர்கள் மட்டுமன்றி உயர் வர்த்தகத்தினரும் பல்வேறு தொழில் புரிவோருக்கும் தீபாவளியன்றும் மகா கும்பாபிஷேகத்தன்றும் வேட்டி சால்வை வழங்குவதும் இந்து நாகரிகத்தின் ஆடைக் கலாசாரத்தையே காட்டி நிற்கின்றது.

இன்று நாடுகள் விஞ்ஞான முறையில் முன்னேறி செயற்கை நூல்களைத் தயாரித்துப் பல ஆடைகளை உருவாக்கினாலும் பழமையான பருத்தி, பட்டு ஆடைகளே உடலுக்கு உறுதியானது. இது மட்டுமன்றி எமது கலாச்சாரத்திற்கு ஏற்ற ஆடைகள் இந்து நாகரிக ஆடைகளே இந்திய ஆடைகள் ஆகும். இந்தியாவில் இருந்து இன்று நூற்றுக் கணக்கான நாடுகளுக்கு ஆடைகள் ஏற்றுமதியாவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே இந்துக்களாகிய நாங்களும் எங்கள் நாகரிகங்களுக்கேற்ற வகையில் உடையணிந்து நாம் இந்துக்கள் என அடையாளம் காட்டி மேலான இந்து நாகரிகத்தைப் பேணுவோமாக. நாம் இந்துக்கள். இந்துக்கள் இந்து நாகரிகத்தைப் பேணாவிட்டால் யார் இந்து நாகரிகத்தைப் பேணி வளர்க்கப் போகின்றார்கள்? சிந்தியுங்கள் தொழிற்படுங்கள் மேன்மை பெறுங்கள்.

---

## கருத்துக் கலசம்

"உன்னை விளம்பரப்படுத்தி ஒரு கருமத்தை
ஆற்றத் தலைப்படாதே
ஏனென்றால் அது
உதட்டளவோடு மட்டும்
நின்றுவிடும்!"

"புகழில் மயங்கி விடாதே! அது ஒரு
பூச்சுப் போன்றது."

# ஊழியரிடல் (Staffing)

**M. Mathooshan**
2002, Com.

**அறிமுகம் :**

நிறுவனம் தனது குறிக்கோளினை அடையும் பொருட்டு பல்வேறு வகையான வளங்களைப் பயன்படுத்துகின்றது. இவற்றினுள் முக்கியமானதாக மனிதவளத்தினைக் குறிப்பிடமுடியும். இது ஆளணி என்ற பெயர் கொண்டும் அழைக்கப்படும். நிறுவனம் தனது மனித வளத்தினை பயனுறுதிமிக்கதாகப் பயன்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் குறிக்கோள் அடைந்து கொள்ளப்படுவதுடன் போட்டி நிலையினையும் எதிர்வு கொண்டு தொடர்ந்து சந்தையில் நிலைத்திருக்க முடியும். இந்த வகையில் ஊழியரிடம் மிகவும் முக்கியமான ஒரு முகாமைத்துவச் செயற்பாடாக கருதப்படுகின்றது.

ஊழியரிடல் எனப்படுவது மனிதவள திட்டமிடல், ஆட்சேர்ப்பு, தெரிவுபயிற்சி அளித்தல், செயல் திறனை மதிப்பிடல், விருத்தி செய்தல் ஆகியவற்றினைக் கொண்ட முகாமைத்துவச் செயற்பாடுகளைக் குறிக்கின்றது.

**மனிதவளத் திட்டமிடல் :**
**( Human Resource Planning)**

நிறுவனத்தின் எதிர்கால தொழிற்பாட்டிற்கு தேவையான பல்வேறு மனித வளங்களையும் முன் உணருகின்ற கருமம் மனித சக்தித் திட்டமிடல் எ + ம்.

நிறுவனம் ஒன்றிற்கு தேவையான மனித சக்தியை திரட்டிக் கொள்ளுதல். பயன்படுத்துதல் தொடர்ந்து வைத்திருத்தல். அபிவிருத்தி செய்தல் என்பவை தொடர்பான செயல் நெறியாகும் ஊழியரிடலில் மிக முக்கியமான கருமம் இதுவாகும்.

மனித சக்தியைத் திட்டமிடக் காரணங்கள்.

* மனித சக்தியை பெற்றுக் கொள்வதற்காக.
* ஆட் சேர்த்தல் மட்டம் ஒன்றை வகுத்துக் கொள்வதற்காக.
* பொருத்தமான பயிற்சித் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்காக.
* ஊழியருக்கான கொடுப்பனவுகளை வரையறை செய்வதற்காக.

ஒரு நிறுவனத்திற்கு கூடுதலாக ஊழியர்களைச்சேர்க்கும் போது பின்வரும் முறைகளைக் கையாளலாம்.

(அ) நிறுவனத்திற்தி வெளியிலிருந்து ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

(ஆ) நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஒரு பகுதியினை உபகுத்தகைமூலம் வேறு நிறுவனத்திற்கு கையளிக்கலாம்.

(இ) பகுதி நேரம் தற்காலிக ஊழியர்களை வேலைக்கு சேர்த்துக் கொள்ளல்.

(ஈ) நிறுவனத்திற்கு உள்ளிருந்து ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(உ) மேலதிக நேரக் கொடுப்பனவு Overtime மூலம் நிறுவனத்தில் தற்போது வேலைசெய்யும் ஊழியர்களின் வேலை நேரத்தினை அதிகரித்தல்.

**மனித சக்தியை திட்டமிடுவதற்கு பயன்படும் நுட்பங்கள் :**

* தொழில் ஆய்வு
* மனித சக்தி வரைபடம்
* இடம் காட்டும் ,,

**மனித சக்தியை மதிப்பிடும் போது பின்வரும் செலவுகள் ஏற்படும் :**

1. சன்மானச் செலவு, Eg அடிப்படைச் சம்பளம், Over time
2. ஆட்சேர்த்தல் செலவு Eg தொழில் விபரணம், விளம்பரம் செய்தல்.
3. பயிற்சி அழித்தல் செலவு :
4. மீள அமைத்தல் செலவு :
5. உதவிச் செலவினம் Eg மருந்துச்செலவு சிற்றுண்டி.
6. ஆளணி நிர்வாகச் செலவினம் :

**மனித சக்தி திட்டமிடல் செய்முறை :**

மனித சக்தி திட்டமிடல் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறுவதே இதுவாகும். இதன் படிமுறைகள்.

1. தேவையை முன்னுணரல் :
2. நிரம்பலை
3. செலவையும் வினை திறனையும் ஒப்பிடல்.
4. மனித சக்தியைக் கட்டுப்படுத்துதல்.

**ஆட்சேர்ப்பும், தெரிவும் :**
**Recruitment and Setection**


நிறுவனத்தில் வேலைவாய்ப்பிற்கான வெற்றிடம் ஏற்படும் போது உழைப்புச் சந்தைக்கு இது பற்றிய தகவலை வழங்கி, மிகச் சிறந்த தகுதியானவர்களை வேலைக்கு விண்ணப்பிக்கும்படி தூண்டுகின்ற செயற்பாடே ஆட்சேர்ப்பு நடவடிக்கையாகும்.

ஆட்சேர்ப்பானது பின்வரும் 3வழிகளில் மேற்கொள்ளப்படும்.

1. உள்ளிருந்து ஆட்சேர்ப்பு
2. வெளியிருந்து ,,
3. உள்ளிருந்தும் வெளியிருந்தும் ஆட்சேர்ப்பு.

இதன்படி ஆட்சேர்ப்பு விண்ணப்பதாரர்களை விண்ணப்பிக்கும்படி தூண்டுகின்றது. ஆனால் தெரிவின் போது மிகப் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்பட்டு, பொருத்தமற்ற விண்ணப்பதாரர்கள் நீக்கப் படுகின்றார்கள். தெரிவானது பொருத்தமற்றவர்களை நீக்குகின்றது.

ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கும் தெரிவிற்கும் இடையிலான தொடர்பினை கீழ்வரும் விளக்கப்படம் மூலம் எடுத்துக் காட்டலாம்.




**உள்ளிருந்து ஆட்சேர்ப்பு :**

நிறுவனத்தின் ஒரு பதவிக்கு தேவையான ஊழியர்களை நிறுவனத்தில் இருக்கின்ற ஊழியரிலிருந்து பதவி உயர்வு ஊடாக அல்லது இடமாற்றத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளப்படுமாக இருந்தால் அது உள்ளிருந்து ஆட் சேர்ப்பு எனப்படும்.

**உள்ளிலிருந்து ஆட்சேர்ப்பின் நன்மைகள் :**

(i) ஆட்ச்சேர்ப்பு செலவு குறையும்
(ii) விரைவாக ஆட்களை சேர்த்துக் கொள்ளலாம்.
(iii) வியாபார இரகசியங்கள் பாதுகாக்கப் படும்.

(iv) நிறுவன மரபுகள், வடிவங்கள் பாதிப் படையாது அவ்வாறே கடைப்பிடிக் கப்படும்.

(v) ஏனைய ஊழியர்களுக்கும் இது ஒரு உற்சாகமாக அமையும்.

**உள்ளிருந்து ஆட்சேர்ப்பின் தீமைகள் :**

(i) நிறுவனத்திற்குள் புதிய கருத்துக்கள் வராது.

(ii) நிறுவனத்தில் இருக்கின்ற ஊழிய ரிடையே அப்பதவிக்காக போட்டிகள் குரோதங்கள் ஏற்படும்.

(iii) நிறுவனத்தில் இடம்பெறும் மோசடிகள் தவறுகள் தொடர்ந்தும் மூடி மறைக் கப்படும்.

(iv) பல்வேறு நபர்களிடமிருந்தும் திறமை யானவர்களைச் சேர்க்க முடியாது போகலாம்.

(v) இதன் போது ஓரிடத்தில் வெற்றிடம் தோன்றும்.

**வெளியிலிருந்து ஆட்சேர்ப்பு :**

நிறுவன தொழிற்பாட்டிற்கு தேவை யான ஊழியர்கள் நிறுவனத்திற்கு வெளி யிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்படுவார் களாயின் வெளியிலிருந்து ஆட்சேர்ப்பு எ+ம்.

**இதன் நன்மைகள் :**

1. நிறுவனத்தில் புதிய கருத்துக்களை வரவழைத்துக்கொள்ளலாம்.
2. பல்வேறுபட்ட நபரிடம் இருந்தும் சிறந்த ஒருவரை தெரிவு செய்யலாம்.
3. நிறுவனத்தில் வெற்றிடம் தோன்று வதை தவிர்த்துக்கொள்ளலாம்.
4. மோசடிகள் அம்பலத்திற்கு வரும்.

**இதன் தீமைகள் :**

1. ஆட்சேர்ப்பு செலவு அதிகரிக்கும்.
2. ஆட்சேர்த்தலுக்கு அதிககாலம் எடுக் கும்.
3. நிறுவன வழமைகள் மரபுகள் கைவி டப்படலாம்.



4. நிறுவனத்தில் இருக்கும் ஏனைய ஊழி யர்களுக்கு மனவிருத்தியை ஏற்படுத்த லாம்.

**அரச நிறுவனம் ஆட்சேர்ப்பிற்கு பின்பற்றுவது :**

1. அரச வர்த்தக மானி அறிவித்தலூ டாக.
2. பல்கலைக் கழகம், தொழினுட்பக் கல்வியிலிருந்து வெளியேறுவர்களூடாக
3. வேலை வங்கியூடாக.

**தனியார் நிறுவனம் ஆட்சேர்ப்பிற்கு பின்பற்றுவது :**

1. புதினப் பத்திரிகை விளம்பரங்கள்
2. அறிந்தவர்களது விதப்புரைகள்
3. தொழில் முகவர் இல்லங்களூடாக

**ஆட்சேர்த்தல் படிமுறைகள் :**

1. தொழில் விபரணம் செய்தலும் வெற்றி டங்களைக் கண்டு கொள்ளுதலும்
2. விண்ணப்பங்களை வடிவமைப்பதும் விண்ணப்பங்களை கோருவதும்
3. விண்ணப்பங்களை பரிசீலிப்பதும் பரீட்சை வைத்தலும்
4. தொழிற் பரீட்சை வைத்தலும்
5. நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்துதல்
6. மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத் தல்
7. நியமனம் வளங்குதல்

**தெரிவு :**
Selection

ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து சரியாக மிகப்பொருத்தமான விண்ணப்பதாரரை பதவிக்கு தெரிவு செய் தல் வேண்டும் இதனை தெரிவு என அமைக் கலாம்.

குறிப்பிட்ட வேலையைச் செய்வதற் கான அறிவு (Know ledgo) திறன்கள் (Shills) ஆற்றல் (Ality) என்பன விண் ணப்பதாரரிடம் காணப்படுகின்றதா என் பதனை சரியாக மதிப்பீடு செய்து கொள்

ளல் அவசியமானதாகும். அத்துடன் நிறுவனத்தின் கலாச்சாரத்துடன் இணைந்து செல்லக் கூடியவராக காணப்படுகின்றாரா தொகுதியாக வேலை செய்யும் ஆற்றல் விண்ணப்பத்தாரரின் பலங்கள் பலவீனங்கள் என்பவற்றினையும் கருத்திற் கொள்ளல் அவசியமானதாகும். எனவே மேற்குறிப்பிட்ட சகல அம்சங்களையும் மதிப்பீடு செய்யும் பொருட்டு பொருத்தமான தெரிவு முறையினை மேற்கொள்ளல் வேண்டும் நிறுவனங்கள் பொதுவாக பின்வரும் முறைகள் மூலம் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்கின்றது.

1. நேர்முகப் பரீட்சை (Interview)
2. பரீட்சை (Test)
3. பரீட்சையும் நேர்முகப் பரீட்சையும் (Test and Interview)

நேர்முகப் பரீட்சை :

பரீட்சையில் உயர்ந்த புள்ளிகளைப் பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்.

பரீட்சாத்தியின் ஆளுமையின் திறனையும் நடத்தையின் திறனையும் அறிவதற்காக பரிட்சார்த்தியும் பரீட்சகரும் முகத்துக்கு முகமாக சந்தித்து உரையாடுதல் Inter View ஆகும்.

இப்பரீட்சையானது திசை காட்டும் நேர்முகப் பரீட்சை, திசை காட்டாத நேர்முகப் பரீட்சை, பட்டியல் படுத்தப்பட்ட நேர்முகப் பரிட்சை பட்டியல் படுத்தப்படாத நேர்முகப் பரீட்சை என பல வகைப்படும்.

பொதுவாக ஒழுங்குபடுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் மூன்று வகையான கேள்விகள் கேட்கப்படும்

1. நிலையை சார்ந்த வினாக்கள் Situation Questions)
2. வேலை அறிவு சார்ந்த வினாக்கள் (Jobknow ledge Questions)
3. தேவையான தேவை சார்ந்த வினாக்கள் (Worker Requitement Questions

எனவே மேற்கூறப்பட்ட முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையானது நம்பிக்கைத் தன்மையினைக் கொண்டதும் பெறுமதியானதுமான ஒரு தெரிவு முறை எனக் கூறுவது பொருத்தமானதாகும்.

பரீட்சை :

பரீட்சாத்தியின் அறிவின் திறனை மதிப்பிட உதவுவது பரீட்சை ஆகும்.

பொதுவாக பரீட்சையினை 5 வகைகளாக வகுக்கலாம்.

(அ) புத்திக் கூர்மைப் பரீட்சை (Intell-gencetest)
(ஆ) தகுதிப் பரீட்சை (Aptitude test)
(இ) தேர்ச்சிப் பரீட்சை (Proficency test)
(ஈ) ஆளுமைப் பரீட்சை (Personality test)
(உ) உளவியல் பரீட்சை (Psychological test)

புத்திக் கூர்மைப் பரீட்சையின் பிரதான நோக்கம் விண்ணப்பதாரியின் பொதுவான அறிவுத்திறன் ஆற்றலை அளவீடு செய்வதாகும்.

தகுதிப்பரீட்சை எனப்படுவது விண்ணப்பதாரர் குறிப்பிட்ட வேலைக்குப் பொருத்தமானவரா அல்லது பொருத்தமற்றவரா எனக்கண்டறியும் பொருட்டு அவரின் ஆற்றல் பற்றிய தகவல்களை அறிவதற்குரிய பரீட்சை ஆகும்.

தேர்ச்சிப்பரீட்சை என்பது விண்ணப்பதாரர் குறிப்பிட்ட வேலை தொடர்பாக போதிய தேர்ச்சியினைக் கொண்டுள்ளதா எனக் கண்டறிவதற்கான பரீட்சை ஆகும்.

ஆளுமைப்பரீட்சை என்பது விண்ணப்பதாரரின் பல்வேறு பண்புகளை அளவிடும் பொருட்டு மேற்கொள்ளப்படும் பரீட்சை ஆகும்.

உளவியல் பரீட்சை என்பது விண்ணப்பதாரர் எந்தளவுக்கு வேலை செய்வதில் ஆர்வத்தினைக் கொண்டுள்ளார்? எந்தளவுக்கு வேலையில் எதிர் நோக்கும் சவால்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளார்

என்பனவற்வறினைக் கண்டறிவதற்கு பெரிதும் உதவுகின்றது.

**நியமனக் கடிதம் :**
**( Letter of Appointment )**

வேலைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கப்படும்.


நியமனக் கடிதத்தில் பின்வரும் விடயங்கள் எடுத்துக்கூறப்படும்.

1. பதவிப்பெயர்
2. சம்பள விபரங்கள்
3. தகுதிகாண் காலம்
4. வேலை தொடர்பான கடமைகள் பொறுப்புக்கள்
5. வேலையிலிருந்து விலகுவதாயின் வழங்க வேண்டிய கால அவகாசம்
6. வேலையிலிருந்து நீக்கப்படும் போது வழங்கப்பட வேண்டிய கால அவகாசம்

**பயிற்சி அளித்தல் :**
**( Training )**

நிறுவனத்தில் காணப்படும் ஊழியர்களுக்கு குறித்த திறன்களை வழங்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடே பயிற்சியாகும்.

வேலைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பொருத்தமான பயிற்சியை வழங்கி அவர்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு நிறுவனத்திற்கு உண்டு. புதிதாக வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கு மட்டுமல்ல ஏற்கனவே நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கும் காலத்திற்குக் காலம் பொருத்தமான பயிற்சியினை வழங்குதல் வேண்டும். கல்வி. பயிற்சி, அபிவிருத்தி என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. கீழ் உள்ள விளக்கப்படம் மூலம் இதனை எடுத்துக்காட்டலாம்.




பயிற்சியின் தேவை வேலையை மேற்கொள்ளத் தேவையான அறிவு திறனின் அளவு - ஊழியர் கொண்டுள்ள அறிவுதிறன்

பயிற்சியினை ஒழுங்குபடுத்தல் தொடர்பான நடைமுறை

நோக்கம் ⟶ உள்ளடக்கம் ⟶ முறை ⟶ நிறைவேற்றம் ⟶ மதிப்பீடு
ஏன்? என்ன? எப்படி? யார்? எங்கு? எப்போது?

தொழிலாளர் புரள்வு விகிதம் =

$$\frac{\text{குறித்தவருடத்தில் விலகும் ஊழியரின் எண்ணிக்கை}}{\text{குறித்த வருடத்தில் உள்ள சராசரி ஊழியரின் எண்ணிக்கை}} \times 100$$

முடிவுரை :

நிறுவனங்களில் பெறுமதிமிக்கசொத்து மனித வளமாகும். திறன்மிக்க ஊழியர் களைக் கொண்டுள்ள நிறுவனங்களே நோக் கத்தினை அடைந்து கொள்ள முடியும். வாடிக்கையாளருக்கு தரமான பொருட்கள் சேவைகளை வழங்க முடியும். இலாபத் தினை உழைத்து தொடர்ந்து சந்தையில் நிலைத்திருக்க முடியும்.

எனவே நிறுவனம் சரியானஆட்சேர்ப்பு தெரிவு மூலம் வேலைக்கு மிகப்பொருத்த மானவற்றைத் தெரிவு செய்து பொருத்த மான பயிற்சியினை வழங்குவது மிகவும் அவசியமானது.

---

**உசாத்துணை நூல்கள் :**

முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம்
தேவராஜன் ஜெயராமன்

## "நாளை உன்னுடையதே"

இந்த உலகம் உனக்காகவே படைக்கப்பட்டிருக்கிறது. வேறு யாருக்காகவு மல்ல. இயற்கையின் ஒவ்வொரு அசைவும் நீ இரசிப்பதற்காகவே. ஆனால் நீயோ வழிதவறி நடக்கின்றாய். உன்னைத் திருத்தவே முடியவில்லை நீயோ சொல்வழி கேட்கிறாயில்லை. நீ நினைத்தபடி நடக்கத் துணிந்து விட்டாய். மாதா, பிதா, குரு. தெய்வத்தை மதித்து நடக்க உன்னால் முடியவில்லை. இறைவனால் படைக்கப்பட்ட நீ, அல்லாத வழிகளில் வெற்றியீட்டுகிறாய். இறைபக்தியில்லாத காரணத்தினால், உன்னிடத்தில் பயபக்தி அற்றுப் போய் விட்டது. ஆதலால் எல்லோரையும் எடுத்தெறிந்து பேசுகின்றாய் இச்சமுதா யம், உன்னிடம் பல நன்மைகளை ஆவலோடு எதிர்பார்க்கிறது. உன்னை ஒரு மனிதனாக்கவே முயல்கிறது இந்த மண்ணை உன்னிடம் ஒப்படைக்க காத் திருக்கிறது. இவற்றை யெல்லாம் உணர்வாயானால் நாளை உன்னுடையதே!

# வாழ்த்துகின்றோம்



**2001 க.பொ.த சாதாரணப் பரீட்சையில் 10A**
**எடுத்து கல்லூரிக்கு பெருமை சேர்த்த**

# கனகலிங்கம் கலையரசி

**அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்**

*கலை வர்த்தக மாணவர் மன்றம்*

# முகாமைத்துவம் Management

J. Sasikala
2002, A/L Com.
Skanda.

முகாமைத்துவ தேவை அதிகரிப்பதால் தற்போது அதைக்கற்போர் அதிகம். எந்த துறையும் மனிதனுக்கு அவசியம் ஆகும் போது அத்துறை வளர்ச்சியடையும். அதே போல் முகாமைத்துவம் தற்போது வளர்ச்சி யடைகின்றது.

முகாமைத்துவம் என்பது ஊழியர்களைக் கொண்டு கருமங்களைச் செய்விப்பது தொடர்பான ஒரு கலையாகும்.

நிறுவனம் தனது நோக்கத்தை அடைவதற்கான வளங்கள் வரையறுக்கப் பட்டவை அவையாவன.

வளங்கல் — பௌதீக வளம் — நடத்தைச் சிக்கலானதல்ல
வளங்கல் — மனிதவளம் — நடத்தைச் சிக்கலானது.

முகாமைத்துவ செயற்பாடு 4 வகைப் படும்.

1. திட்டமிடல் (Planning)
2. ஒழுங்கமைத்தல் (Orgniging)
3. நெறிப்படுத்தல் (Directing)
4, கட்டுப்படுத்தல் (Contraling)

ஒரு குறித்த மனித குழுவின் நோக்கங்களை முடிவு செய்து பகுப்பாய்வு செய்து அறிமுகப்படுத்துவதன் மூலம் நோக்கை அடைய முற்படும் நடவடிக்கையாகும்.

நிறுவனத்தின் நோக்கை அடையும் பொருட்டு அங்கத்தவரின் முயற்சியையும் நிறுவனத்தின் வளங்களையும் பயன்படுத்தி திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், உள்ளடங்கிய நீண்ட செயன் முறையாகும்.

எல்லாவற்றையும் கருத்திற் கொண்டு முகாமை என்பது நிறுவனத்தின் குறிக்கோள் அல்லது இலக்கான ஊழியர்களாக கொண்டு அடைய முற்படும் செயன்முறையாகும்.

பணிப்பாளர்களையும் வளங்களையும் கொண்டு தகுந்த திட்டங்கள் மூலமாக தகுந்த கட்டுப்பாட்டின்படி நோக்கத்தை வரையறையிட்டு அடையும் செய்முறையே முகாமையாகும்.

**திட்டமிடல் :**

முகாமையாளர் நோக்கினை அடைவதற்கு வேண்டிய செயற்பாடுகளை முன் கூட்டியே தீர்மானித்தலாகும்.

**ஒழுங்கமைத்தல் :**

நிறுவனத்தின் மனித வளங்களையும் மூல வளங்களையும் தொடர்பு படுத்திக் கொள்வதாகும்.

**நெறிப்படுத்தல் :**

தனக்கு கீழ் உள்ளவர்களை ஊக்குவித்து நெறிப்படுத்தல்

**கட்டுப்படுத்தல் :**

திட்டமிட்டபடி கருமங்கள் நடைபெறுகின்றது என்பதையும் நிறுவனம் இலக்கை நோக்கி நகர்கின்றது என்பதையும் உறுதிப் படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைஆகும்.

1. நிறுவனத்தின் நோக்கமும் குறிக்கோளும்
2. வேலையில் நிறைவும் சாதனையும் ஏற்பாடு செய்தல்
3. சமூகங்களையும் சமூக பொறுப்புகளையும் முகாமை செய்தல்

முகாமையும் நிர்வாகமும் :

முகாமை என்பது வேறு நிர்வாகம் என்பது வேறு நிர்வாகம் என்பது நிறுவனத்தின் குறிக்கோளை தீர்மானிக்கும் உயர் மட்ட முகாமைத்துவ செயற்பாடு ஆகும்

Ex : அரச திணைக்களங்களில் சிவில் நிர்வாகச் சேவைகளின் பயன்பாட்டில் உள்ளது. எனவே நிறுவனத்தின் திட்டம் கொள்கைகளைத் தீர்மானிக்கும் செயல் நிர்வாகமாகும்.

அவற்றை நிறைவேற்றும் செயற்பாடு முகாமைத்துவமாகும்

முகாமை என்பது நிறுவனத்தின் நோக்கை அடைவதில் செயற்பாடுகளைத் திறமையாகத் திட்டமிட்டுஒழுங்குபடுத்தும் ஒரு சமூகச் செயற்பாடு. எனவே ''முகாமை நிர்வாகம்'' எனும் பதங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டிருந்தாலும் எந்தளவில் வேறுபட்டவை.

முகாமைத்துவம் விஞ்ஞானமா? கலையா? :

FULLET என்பவர் ''கலை'' என்று வரையறுத்தாலும் அது பலராலும் ஏற்கப்படவில்லை. Lother Gylic என்பவர் அது விஞ்ஞானமாக மாறிவருகின்றது என்று வலியுறுத்தினார். அவரது கருத்துப்படி அத்துறை நிறுவனத்தில் நோக்கை அடையும் பொருட்டு ஊழியர் ஏன்? எப்படி ஒன்று சேர்ந்து வேலை செய்கின்றனர் என்பதைப் பற்றி விளக்கிக்கொள்ள முற்படுகிறது. இது அறிவு சார்ந்த துறை ஒன்றிற்கான தேவைகளைக் கொண்டிருப்பதால் பல்வேறு கோட்பாடுகளையும் கொண்டுள்ளது. விஞ்ஞான கோட்பாடுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும். அதே போல் இங்கு நடைமுறைக் கோட்பாடுகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளக்கூடியதா? கூடாதா என்று முடிவு கூறப்பட்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சிக்கு கோட்பாடும் கொள்கையும் சார்ந்த எண்ணக்கரு ரீதியான அமைப்பு அவசியம். விஞ்ஞானமுகாமைத்துவவளர்ச்சிக்கு கொள்கை உருவாக்கல் காரணமாக அமைந்தது. முகாமைத்துவ கொள்கை அனுபவம், ஆராய்ச்சி என்பனவற்றினூடாக கட்டி எழுதப்பட்ட அறிவை சீர்திருத்தி ஒழுங்கமைக்கின்றது. Lotherன் கருத்துப்படிமுகாமைத்துவகோட்பாடுகள் குறித்த சூழலில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று Manager ஐ வழி நடத்தும் போது அதன் பின் விளைவுகளை எதிர்கூற முடியுமாக இருந்தால் இது நிச்சயமாக விஞ்ஞானமாக அமையும் என்கின்றார்.

Henry M. Buollnger இதை கலை என்கிறார். கலைக்கு உ+ம் (பாவஸ் ஓவியம்) இதற்கு 3 உதாரணங்கள் அவசியம்:

1. கலைஞனின் பார்வை
2. எண்ணம்
3. வெற்றிகரமான செய்தி தொடர்பு

முகாமைத்துவம் தொழிலா?

தொழில்சார் உத்தியோகத்தர்களுக்கு திறன், அறிவு, தத்துவம் வேண்டப்படுகின்றது. முகாமையாளருக்கும் இவ்வாறே திறன் அறிவு, தத்துவம் வேண்டப்படுகிறது ஆயினும் மற்றைய வேலைகளைப் போல் அல்லது முகாமையாளருக்கு இலங்கையில் அடிப்படைக் கல்வித்தகமை நிர்ணயிக்கப்பட்டுள்ளது அதை மீறுவோர் தண்டிக்கப்படுவர் என்றும் கூறுகிறது.

Eg : இலஞ்சம், ஊழல் போன்றசெயலுக்கு ஒப்பான அன்பளிப்போ, பொருட்களோ முகாமையாளரிடமோ பிறரிடமிருந்து பெறுவதோ, கொடுப்பதோ தவிர்த்துக்கொள்ள வேண்டும்

முகாமைத்துவ கற்கை நெறிகளில் பல கோட்பாடுகள் காட்டப்பட்டுள்ளன. பொதுவாக முகாமையாளர்கள் இதைப் பேணுகிறார்கள்.

முகாமையாளர் பதவி தொழில்சார் பண்புகளைக் கொண்டிராததால் அது

தொழில்சார் துறை அல்ல என்று கூறலாம் ஆயினும் ஆபிரிக்க நாடுகளில் தொழில்சார் துறைகளுக்குரிய பிரதான பண்புகளை இதற்குப் பொருத்துவதினால் இதனைத் தொழில்சார் துறையாக ஏற்கலாம்.

**முகாமையாளர் :**

நிறுவனத்தின் நோக்கத்தை அடையும் வகையில் பௌதீக மூல வளங்களை பயன் படுத்த ஏனையோரை வழிநடாத்துபவர் முகாமையாளர் ஆவார்.

முகாமைப் பணியில் ஈடுபடும் எல்லோரும் முகாமையாளர் என அழைக்கப்படுவர் இது நிறுவனத்துக்கு நிறுவனம் வேறுபடும்.

Eg : பல்கலைக்கழக துணைவேந்தர்
கிரிக்கட் குழு தலைவர்

நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களை முகாமையாளர் முகாமை அல்லாத ஊழியர் என இரண்டாக வகுப்பர் முகாமையாளருக்கும் முகாமை அல்லாத ஊழியருக்குமான ஒற்றுமை இருவரும் நிறுவன ஊழியர்கள் ஆவர்.

**முகாமையாளரின்**
**தொழிற்பாடுகள் அல்லது பணிகள் :**

1. செயற்பாடுகளை திட்டமிடுதல்
2. விசாரணை செய்தல்
3. இயைபாக்கம்
4. மதிப்பீடு செய்தல்
5. ஊழியரிடல்
6. தீர்வுகாண கலந்துரையாடல் செய்தல்
7. பிரதிநிதித்துவம் செய்தல்
8. மேற்பார்வை செய்தல்

**முகாமையாளரும் அதன் பிரிவுகளும் :**

ஆளணிப்பகுதி ( Human Section ) — ஆளணி முகாமையாளர்

நிதிப்பகுதி ( Financial Section ) — நிதி முகாமையாளர்

சந்தைப்படுத்தல் ( Marketing ) — சந்தைப் படுத்தல் முகாமையாளர்

உற்பத்தி ( Production ) உற்பத்தி முகாமையாளர்

அபிவிருத்தி ஆராய்ச்சி ( Development and Reasurech ) — ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையாளர்

இவர்களுக்கு மேலாக பொது முகாமையாளர் காணப்படுவார். முகாமையாளரின் அதிகாரம் பொறுப்பு அடிப்படையில் வருமாறு வகைப்படுத்தலாம்.

| உயர்மட்ட முகாமை | நடுமட்ட முகாமை | கீழ்மட்ட/முதல்வரிசை முகாமை |
|---|---|---|
| Top level Management | Middle level Management | Low level Management |
| நிறுவனத்தின் கொள்கை வகுத்தல் தீர்மானம் | கொள்கை செயற்படுத்தும் செயற்பாடு ஏனைய முகாமையாளரை வழிநடத்தல் | தமக்குக்கீழ் உள்ள ஊழியரை மேற்பார்வை செய்தல் |

முகாமையாளர் பதவிக்கான கல்வித் தகைமை நிறுவனத்துக்கு நிறுவனம் வேறுபடும் சிலவற்றில் பட்டதாரிகளும் சிலவற்றில் பட்டதாரி அல்லாதோரும் தெரியப் படுகின்றனர். ஆயினும் கல்வித் தகைமைக்கு மேலாக பின்வரும் 3 தேர்ச்சி திறன்கள் தேவை என ஆய்வு ( Swot ) மூலம் கூறுகிறது.

1. தொழில்நுட்பத் தேர்ச்சி
2. மனித இயல்புக்குரிய தேர்ச்சி
3. கருத்துத் தொடர்பான தேர்ச்சி

**முகாமையாளரிடம்**
**எதிர்பார்க்கப்படும் பண்புகள் :**

1. குறைந்தளவு உள்ளீடுகளைப் பயன் படுத்தி அதிகளவு வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளுதல்
2. மனித நடத்தையை சரியாக விளங்கிக் கொள்ளுதல்
3. நடு நிலமையாகச் செயற்படவேண்டும்.
4. பொறுப்புக்களை முழு அளவில் ஏற்கத் தயாராக இருத்தல்

5. ஆபத்துக்களை எதிர்கொள்ளத் தயாராக இருத்தல்
6. தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல்
7. தொடர்பு கொள்ளும் ஆற்றல்

**முகாமையாளர் அதிகாரியாகவா அல்லது முதல்வராகவா செயற்பட வேண்டும்:**

முகாமையாளர் அதிகாரியாக செயற்பட்டால் நிறுவனம் தோல்வி அடைய நேரிடும். திறமை மிக்க முகாமையாளர் தொழிலாளர்களை தம் கீழ் பணிபுரிபவர்களைப் போல் நடத்துவதில்லை ஏனெனில் முகாமைக்குத் தொழிலாளர்கள் முக்கியம் முகாமையாளர்கள் நிறுவன நோக்கத்திற்கு ஏற்ப அவர்களைத் தூண்டுகின்ற ஒரு முதல்வராகக் காணப்பட வேண்டும்.

---

**REFERENCE :**

James A. F. Stonea Management

Thevaraja Jayaraman - An Introduction ot Managerment

## "கடமையைச் செய்யவே கடவுளும் விரும்புகின்றார்"

இந்த உலகினில் பிறந்த ஒவ்வொருவருக்கும், கடமைகளை ஆண்டவன் தந்திருக்கிறார். அவை உனது ஆற்றலுக்கும், பெறுமதிக்கும் ஏற்றவாறு தரப்படுகிறது. அவற்றைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வாயாக. அந்தக் கடமைகள் பூரணமாகும் வரை அவற்றுடன் சம்பந்தமாகி இசைந்திடு. பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியனாக இருந்தால் ஒவ்வொரு நாற்பது நிமிட வேளையிலும், மாணவர் கல்விக்காகவே உன்னை அர்ப்பணித்து விடு. அந்த நாற்பது நிமிட வேளையில் உன்னுடைய தனிப்பட்ட வேலைக்காகக் கடன் எடுத்து விடாதே! கடமையைச் சரிவர ஆற்ற முடியாவிட்டால் உன்னை இயற்கையே தூக்கி எறிந்து விடும். இதுவே உலக நியதி.

# இலங்கையில் தமிழ் இலக்கியம் கற்பித்தலில் எதிர்நோக்கும் சில பொதுவான பிரச்சனைகள் பற்றிய ஆய்வு

**செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்,**
(B. A. Dip-in-Ed.),
சிரேஷ்ட ஆசிரியர்.
( ஸ்கந்தவரோதயக் கல்லூரி )

**(சிங்கப்பூரில் நடைபெற்ற உலகத் தமிழாசிரியர் மாநாட்டில் இலங்கைத் தமிழ் ஆசிரிய பிரதிநிதியாக கலந்து கொண்டு ஆற்றிய உரை)**

அறிமுகம் :

ஈழத்துத்தமிழிலக்கியக் கல்வி மரபினை ஆராய முற்படும்போது பண்டைய ஈழத்துக் கல்வி வரலாறு சில தரவுகளை எடுத்து விளக்குகிறது. தமிழிலக்கியம், இலக்கணம் ஆரம்பகாலத்தில் இந்துப் பாரம்பரிய கல்வி மரபினூடாகவே ஈழத்தில் போதிக்கப்பட்டமையை பலரது வரலாற்றுஆய்வுத்தகவல்கள் மூலம் அறிய முடிகிறது. பண்டைய ஈழத்தில் குருகுலக்கல்வி மூலமும், திண்ணைப்பள்ளி முறை மூலமும் பாரம்பரியமான இலக்கியப்பயிற்சி வழங்கும் முறை நிலவியுள்ளது. இவ்விரு வழிகளில் குறைந்த தொகையினர்க்கு மட்டும் இலக்கிய இலக்கணப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. இதே வேளை இந்துசமயப் பாரம்பரிய மரபுகளை மக்களிடையே பரப்புவதற்கான இதிகாச புராண இலக்கியங்களை பாமர மக்களுக்கும் கதை வடிவமாகக் கற்பிக்கின்றமரபு ஈழத்தில் பிரதான தமிழ்க் குடிகளிடையே நீண்டகாலமாக நிலவி வந்துள்ளது. குடும்பம் குடும்பமாக பாரதம், இராமாயணம் புராணங்கள் என்பனவற்றை செவிவழியாக கற்கும் மரபு செல்வாக்குப் பெற்று விளங்கியுள்ளது. அறப்போதனைகளுக்காக இலக்கியக் கதைகள் கிராமம் கிராமமாக செவிவழி மூலம் கற்பிக்கும் மரபு பண்டைய இலக்கியக் கற்பித்தல் முறையாகப் பன்நெடுங்காலம் நிலவியது. பண்டைய ஈழத்துக் கல்வி மரபில் நாட்டுக் கூத்துக்கள் இலக்கியப் பொருளைப் பாமர மக்களிடையேயும் விளக்குவதற்கு உதவியமையையும் உணர முடிகிறது.

ஈழத்து இலக்கிய மரபில் இந்திய மன்னர்கள் ஈழத்தைக்கைப்பற்றிய காலவேளை பல மரபிலக்கியங்கள் ஈழத்தில் பரவியதெனலாம். குறிப்பாக ஆரியச்சக்கரவர்த்திகள் வருகையினால் தரமான இலக்கியப்பரம்பரையொன்று ஈழத்தில்உருவாகத் தொடங்கியதெனக் கருதப்படுகிறது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஈழத்தை ஆண்ட காலங்களில் இலக்கியங் கற்பித்தலில் பெரிய மாற்றங்களைக் குறிப்பிட்டுக் கூறமுடியாத நிலை காணப்படுகிறது. எனினும் 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் ஈழத்துத் தமிழிலக்கியம் கற்பித்தலில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டதென்பதை வரலாறுகள் எடுத்துரைக்கின்றன. நல்லைநகர் நாவலர் பெருமான் சைவத்தமிழ் மறுமலர்ச்சியூடாக தமிழ் இலக்கியங்களைப் பலரும் கற்பதற்கான சில நவீன ஏற்பாடுகளை ஏற்படுத்தி வெற்றிகண்டார் எனலாம். ஆறுமுகநாவலர் ஏட்டுவடிவிலிருந்த பல புராண இலக்

கியங்களை அச்சுவாகனமேற்றி மக்களி டையே பரப்பிய பெருந்தகை. குறிப்பாக வசனநடை கைவந்த வல்லோன் என தமி ழகத்தாரும் ஈழநாட்டாரும் போற்றுமள விற்கு கடுந்தமிழ் செய்யுள்களை வசன நடை இலக்கியமாக மாற்றிய செயல் வீர ராவார். இவரது நூற்பதிப்புப்பணியால் ஈழத்தில் இலக்கியம் கற்கும் ஆர்வலர் அதிகரித்தனர். நாவலரின் சைவப் பள்ளிக் கூடங்கள் உருவாக்கும் முயற்சி பல்கிப்பெரு கியதனால் அதிக மாணவர்கள் குறிப்பாக ஈழத்தின் வடபுலத்தில் தமிழிலக்கியம் கற்க வாய்ப்பு ஏற்பட்டது. சொற்பொழிவு மரபு ஒன்றினை கோயில்கள் தோறும் ஏற்படுத்தி வைத்தவர் நாவலர். இதனால்சொற்பொழி வினூடாக இலக்கியம் கற்கும் வாய்ப்பு வளர்ந்தது

ஈழத்தில் தமிழ்மொழியூடாக வட மொழி இலக்கியம் கற்கும் மரபு நீண்ட காலமாக நிலவி வந்துள்ளது இதன் காரண மாக வடமொழியில் எழுந்த பாரத இலக் கியக் கதைகள் தாராளமாக தமிழ்மொழி யில் இருமொழியறிவுடையோரால் கற்பிக் கப்பட்டன. நாவலர் காலத்தில் ஏற்படுத்தி வைக்கப்பட்ட இலக்கியக் கற்பித்தல் அவ ரைத் தொடர்ந்தும் மிகத் துரிதமாக முன் னேறியது. நாவலர் கல்வி மரபில் வந்த அவரது மாணாக்கர் பரம்பரை காவியப் பாடசாலை அமைத்து இலக்கண இலக் கியங்களை பயிற்றுவித்து வந்தது. இக்கா வியப் பாடசாலையின் தோற்றுவாயே 1920களின் பின் ''ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்'' என்ற ஒன்றை நிறு வனரீதியாக ஏற்படுத்த வாய்ப்பானதென லாம். இந்நிறுவனம் இலக்கியம் கற்பித் தலை வளர்ப்பதற்கு பல அரிய பணிகளை ஈழத்தில் ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.

**ஆங்கில மொழிமூலம்**
**தமிழிலக்கியம் கற்பித்தல் :**

ஈழத்தில் ஆங்கிலேயரது ஆட்சி நில வியபோது கல்வியில் பெரிதும் அக்கறை காட்டிய மிஷனரிமார் ஆங்கில மொழி மூலம் தமிழ் இலக்கியம் கற்பிக்கும் முயற் சியினை மேற்கொண்டனர். இதன் விளை வாக இலங்கையில் ஆங்கிலமொழி மூலம் தமிழிலக்கியம் கற்கும் மிஷனறிக் கல்வித் திட்டம் பலபாகங்களிலும் பரவியது. மிஷ னறிக் கல்வித் திட்டத்தில் ஆரம்பப் பாட சாலைகளில் தமிழ்மொழி மூலமே தமிழ் இலக்கியம் கற்கும் முறையும் இடைநிலைக் கல்வியில் தனி ஆங்கிலம் மூலமே தமிழ் இலக்கியம் கற்கும் முறையும் பல்கலைக் கழகக் கல்வியிலும் ஆங்கிலமொழி மூலமே தமிழிலக்கியம் கற்கும் முறையும் காணப் பட்டது. குறிப்பாக சுதந்திரத்திற்கு முன் ஈழத்தில் தமிழிலக்கியம் கற்பித்தலில் பல முறைகள் கையாளப்பட்டு வந்தன இக்கா லத்தில் பிறநாட்டு அறிஞர்கள் தமிழ் மொழியைக் கற்று அதன் சிறப்பை ஈழத் திலும், இந்தியாவிலும் பெருமைப்படுத்தி னர். குறிப்பாக வீரமாமுனிவர் என்றபோப் அடிகள் டாக்டர் கிறீன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் டாக்டர் கிறீன் தமிழில் மருத்துவ நூல் ஆக்குகின்ற அள விற்கு தமிழை விரும்பிக் கற்றமை குறிப் பிடத்தக்கது. இலங்கையில் வாழ்ந்த முஸ் லீம்களும் தம் தாய்மொழியாக தமிழைக் கற்கத் தொடங்கியமையால் முஸ்லீம்களி டையேயும் தமிழ் இலக்கிய ஆர்வம் ஏற் பட்டது எனலாம். இக்காலத்தில் குறிப் பாக அறிஞர் சித்திலெவ்வை போன்றவர் கள் தோற்றம் பெற்று தமிழிலக்கியத்தை வளம்படுத்துவதில் பெரிதும் ஆர்வம் காட் னர்.

**சுதந்திரத்தின் பின் ஈழத்துக்கல்வி**
**மரபில் தமிழிலக்கியம் கற்பித்தல் :**

1948இல் இலங்கை சுதந்திரம் அடைந் தமையை ஒட்டி மாற்றங்கள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வந்துள அவ்வகையில் பாடசாலைக் கல்வித் திட்டங்களில் சீரான தமிழ் இலக்கியக் கல்வி கற்பிக்கும் முறை ஏற்படுத்தப்பட்டது. மரபு ரீதியாக தமிழ் இலக்கியம் கற்றவர்களும் ஆங்கிலம் மூலம் தமிழிலக்கியம் கற்றவர்களும் பாடசாலை களில் தமிழிலக்கியம் கற்பித்தலில் ஈடுபட் டனர். சுதந்திரத்திற்கு முன் தமிழிலக்கி யப் பாடசாலைகளில் கற்பிப்பதற்காக பல தரமான ஆசிரியர்களைத் தோற்றுவிக்கும் முயற்சியில் மிஷனறிமாரும் சைவசமய நிறு

வனங்களும் முயற்சி செய்தமை குறிப்பிடத் தக்கது 1928ஆம் ஆண்டு ஈழத்தில் பல ஆசிரிய கலாசாலைகள் இலக்கியங் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதில் முன்னின்றன. கொழும்புத்துறையிலும், இராமநாதன் கல்லூரியிலும் வேறு மிஷனரிகளிலும் தமிழிலக்கியப் பயிற்சி ஆசிரியர்கள் உருவாக்கம் பெற்றனர்.

**சுதந்திரத்திற்குப் பின் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் இலக்கியம் கற்பித்தல் :**

1948ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை பெற்றது. இவ்விடுதலையின் எதிரொலியாக தாய் மொழி வளர்த்தல் என்ற சிந்தனை எழுச்சி பெற்றுக் காணப்பட்டது இதனால் தமிழ் மூலமாக அனைத்துப் பாடங்களும் கற்பிக்கும் நிலை அவசியமானதென வலியுறுத்தப்பட்டது இந்நிலையில் பின்வரும் அடிப்படையில் பாடசாலைகளில் தமிழிலக்கியம் கற்பித்தல் நடைபெற்றது.

**ஆரம்ப வகுப்பு :**

ஆரம்ப வகுப்புக்களில் தமிழிலக்கியம் பின்வரும வடிவங்களுடாகக் கற்பிக்கப்பட்டது.

1. நீதிக் கதைகள்
2 சமய இலக்கியக் கதைகள்
3. திருமுறைகள்
4. குழந்தைப் பாடல்கள்
5. கதைப் பாடல்கள்
6. மொழி இன்பப் பாடல்கள்

மேற்குறித்த விடயப் பரப்புக்களூடாக ஆரம்ப வகுப்புக்களில் இலக்கியம் கற்பிக்கப்பட்டு வந்தது ஆரம்ப வகுப்புக்களில் கிறிஸ்தவ இஸ்லாமிய மாணவர்களின் சமய பாடங்களிலும் இலக்கியம கற்பிக்கப்பட்டது. இவை தவிர தமிழ் பண்பாடு பற்றிய பாடங்களிலும் ஆரம்ப வகுப்புக்களில் இலக்கியம் கற்பிக்கப்பட்டது.

**இடைநிலைக்கல்வி :**

ஆரம்பக்கல்வியின் வளர்ச்சிப் படியாக இடைநிலைக் கல்வியில் திட்டமிட்ட அடிப்படையில் பாடப்பரப்புக்களில் இலக்கியம் கற்பிக்கப்பட்டது. கதை, நாடகம், உரை, செய்யுள், ஈழத்துத் தமிழ் இலக்கியம் என பல்வேறு அம்சங்கள் கற்பிக்கப்பட்டு வருகிறது.

**சிரேஷ்ட இடைநிலைக்கல்வி :**

சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில் தாய்மொழி என்ற நிலையிலும், தமிழ் இலக்கியம் என்ற தனிப்பாடமாகவும் தமிழ் இலக்கியம்கற்பிக்கப்பட்டு வந்தது. 1960ஆம் ஆண்டு சுயபாஷைகல்வித்திட்டம்முதன்மை பெறத் தொடங்கியது. இதனால் தமிழிலக்கிய பாடம் தனித்துவமான சிறப்புப்பாடமாக இவ்வகுப்புக்களில் கற்பிக்கப்பட்டது. எனினும் 1972ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தம், தமிழிலக்கியம் என்ற தனிப்பாடத்தை நிறுத்தி தமிழ்மொழி என்ற ஒரு பாடத்தினுள் தமிழ் இலக்கியத்தை அடக்கினர்.

1972முதல் தமிழிலக்கிய ஆர்வம் மாணவரிடையே வீழ்ச்சியடைவதாகப் பலரும் கருத்துத் தெரிவித்தமையால் '' தமிழிலக்கியம் '' மீண்டும் தனிப்பாடமாக சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில் கற்பித்தற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. எனினும் விருப்பத்திற்குரிய தேர்வுப்பாடமாகவே தமிழிலக்கியம் தற்போது அமைந்துள்ளது. கல்வி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில் தமிழிலக்கியம் மாணவரிடையே மீண்டும் முதன்மை பெற சில செயற்றிட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**பல்கலைக்கழகக் கல்வி :**

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆரம்ப காலங்களில் தமிழிலக்கியம் ஆங்கில மொழி மூலமே கற்பிக்கப்பட்டது. அறுபதுகளில் தாய்மொழிமூலம் பல்கலைக்கழகக் கல்வி போதிக்கப்பட்ட போது தமிழ் மொழியை விசேட பாடமாகக் கற்பவர்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டனர். ஆனால் இன்று குறிப்பாக யாழ் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியைச் சிறப்புப் பாடமாகக் கற்கும் பிரிவில் 200இற்கு மேற்பட்ட மாணவர்கள் கற்பது ஒரு வரலாற்று நிகழ்வாகும். இதுமட்டுமன்றிப்பட்ட ஆய்வு

பட்டப்பின் படிப்பு ஆய்வு என தமிழிலக்கியம் ஆராயப்பட்டு வருகிறது. இலங்கையிலுள்ள பதினொரு பல்கலைக்கழகங்களுள் ஐந்து பல்கலைக்கழகங்களில் தமிழ் இலக்கியம் கற்கும் வாய்ப்பு நிறைவாக உளது. தமிழிலக்கியம் கற்பதில் பல்கலைக்கழக மாணவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர். பல்கலைக்கழகத்தில் கற்கும் முஸ்லீம் மாணவர்கள் தமிழிலக்கியம் கற்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாக விளங்குகின்றனர். இலங்கைச்சட்டக்கல்லூரியிலும் தமிழை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்கள் இலக்கியம் கற்று வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ்ப் பாடத்தையே சிறப்புப் பாடமாகக் கற்கும் ஆசிரிய பயிற்சிக் கூடங்கள் பல வருடகாலமாக இயங்கி வருகின்றன. தற்போது கல்வியியற்கல்லூரி என்ற கல்விச் சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு அங்கும் ஆசிரிய பயிற்சி பெறும் மாணவர்கள் தமிழிலக்கியம் கற்று வருகின்றனர்.

**தமிழிலக்கியம் கற்பித்தலில் இன்று எதிர்நோக்கும் பிரச்சனைகள் :**

இலங்கையில் அரசாங்கக் கல்விக்கொள்கைகள் காலத்திற்குக் காலம் மாற்றமடைகின்றன. இதனால் கல்விசார் கலைத்திட்டங்கள் பல தடவைகள் மாற்றம் பெற்றன. இதனால் சீரான தமிழிலக்கியக்கற்பித்தலுக்குப் பல தடவைகள் இடையூறுகள் ஏற்பட்டுள. கடந்த காலங்களில் தமிழிலக்கியம் கற்றலுக்கான முக்கியத்துவம் அதிகரித்தும் முக்கியத்துவம் இழந்தும் விளங்கியுள்ளது. 1972இல் புதிய கல்வித்திட்டத்தின் பிரகாரம் மொழியும் இலக்கியமும் தனித்தனிப் பாடங்களாயிருந்த நிலைமாறி மொழியும் இலக்கியமும் ஒரு பாடமாகக் கற்பிக்கும் நிலை உருவாகியது. பாடசாலைகளில் ஒரு பாடமாக இரு பாடங்கள் இணைக்கப்பட்ட பின்பும் பாடவேளை அதிகரிக்கப்படவில்லை. இதனால் தமிழிலக்கியத்தை விரிவாகக் கற்கும் நிலை பின்தள்ளப்பட்டது. 1998ஆம் ஆண்டு தமிழ்மொழிப் பாடமும் தமிழிலக்கியம் விருப்பத்திற்குரிய பாடமாகவும் கலைத்திட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டது. இவ்வேளையில் தமிழ்மொழிப் பாடத்திற்கு வாரத்தில் ஐந்து பாடவேளையும் விருப்பத்திற்குரிய தமிழிலக்கிய பாடத்தைவாரத்திற்கு 2 பாடவேளையாகவும் கலைத்திட்டம் வகுத்துள்ளது. இம்முறை தமிழிலக்கியம் கற்றல் கற்பித்தலில் திருப்திகரமானதாக அமையவில்லை. விருப்பத்திற்குரிய பாடத்தேர்வில் மாணவர்கள் பின்வரும் பாடங்களுள் ஒன்றைத் தெரிவு செய்யலாம் என்ற விருப்பத்தேர்வு முறை வகுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம், அபிவிருத்தி, புவியியல், உடற்கல்வி ஆகிய பாடங்கள் தேர்விற்குரியவையாக அமைந்துள்ளன. மாணவர் மட்டத்தில் தமிழிலக்கிய பாடத்தை ஆழமாகக் கற்கும் வாய்ப்பு மிகமிகக் குறைவாகவே காணப்படுகிறது.

இன்று பல்கலைக் கழகங்களிலும் ஆசிரிய கலாசாலைகளிலும் தமிழ் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் உருவாக்கப்படுகிறார்கள். அண்மைக் காலமாக தேசிய கல்வியியற் கல்லூரிகளிலும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டு வருகிறார்கள். எனினும் தமிழிலக்கியம் கற்பித்தலில் புதிய தலைமுறை ஆசிரியர்களிடையே சில பிரச்சனைகள் தோன்றுகின்றன. அதாவது மரபு இலக்கியங்களிலும் நவீன இலக்கியங்களிலும் தற்போது பாடப்பரப்புகள் அமைந்துள்ளமையால் இரு இலக்கியங்களிலும் மிகுந்த தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்குவதில், ஆசிரியர்களை உருவாக்கும் நிறுவனங்களால் முழுமையான உகந்த ஆசிரியர்களை உருவாக்க முடியவில்லை. ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் நீண்டகாலமாக தமிழ் சிறப்புப் பயிற்சிப் பிரிவு தொடர்ச்சியாக இயங்கமுடியவில்லை. இதனால் தமிழிலக்கியத்தைச் சீராகக் கற்பிக்ககூடிய ஆசிரியர்கள் தொகை கடந்த பத்து ஆண்டுகளாகக் குறைவாகவே காணப்படுகின்றது.

தமிழிலக்கியம் கற்பித்தலில் இன்று ஏற்படுகின்ற பிரச்சனைகளுள் குறிப்பிடத்தக்க விடயமாக மாணவரது பாடத்திட்ட நூல்களின் உள்ளடக்கம் விளங்குகின்றது. பாடசாலை நூல்களை இலவச வெளியீடாக அரசாங்கம் வெளியிடுகிறது. நூலாக்கப் பொறுப்பை அரசாங்கம் பொறுப்பேற்

றுள்ளமையால் பல தவறுகள் காலத்திற்குக் காலம் ஏற்படுகின்றன. நூலாக்கக் குழுவில் அங்கம் வகிப்போர் குறிப்பாக தலைநகர் கொழும்பில் வசிப்போரே இடம் பெறுகின்றனர். முழு இலங்கைத் தமிழ் அறிஞர்களையும் உள்ளடக்கியதான ஆக்கக்குழு இதுவரை அமைக்கப்படவில்லை. இதனால் தரமான இலக்கியப் பகுதிகள் தமிழ்ப்பாடத்தில் கடந்த பல வருடங்களாக அமையவில்லை. நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் அறிஞர்கள் ஒன்று கூடித் தயாரிக்க முடியாத நிலையில் தமிழ்ப் பாட நூல்கள் வெளிவருகின்றன. இதில் பல இலக்கணப் பிழைகள், எழுத்துப் பிழைகள் காணப்படுவதாக அனுபவம்மிக்க மூத்த தமிழாசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ்மொழி, தமிழிலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்களிடையே, பொதுவாக தமிழ் இலக்கியம் பற்றிய, தமிழ் இலக்கணம் பற்றிய அடிப்படை அறிவின்மை காணப்படுகிறது. இது ஒரு பிரச்சனையாக இன்று வளர்ச்சியடைகிறது. தமிழிலக்கியத்தை இலட்சிய நோக்கில் கற்காத பரீட்சைக்குத் தயார் செய்யும் நிலையில் மட்டும் கற்றுத் தேறிய பலர் இன்று தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களாகப் பணி செய்கின்றனர். இதனால் தமிழிலக்கியம் கற்றல், கற்பித்தல் பிரச்சனையாக உள்ளது. மாணவர்களிடையேயும் பரீட்சையை மையமாகக் கொண்ட கற்றல் ஆர்வமே காணப்படுவதனால் ஆழ அகலமாகத் தமிழிலக்கியம் கற்றலில் நாட்டமின்மை காணப்படுகிறது.

பழமைபேணும் பண்டிதர்கள், புலவர்கள் தமிழ் கற்பிக்கும் மரபு மிகவும் அருகிவிட்டது. பிரத்தியேகமாகத் தமிழ் அறிஞர்களை நாடி பண்டைய முறையில் தமிழை ஐயந்திரிபறக் கற்கும் மரபு முற்றாக அருகி வருகிறது.

வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் மாணவர்கள் விரும்பியோ விரும்பாமலோ தமிழிலக்கியத்தை அனுபவிக்கும் தன்மை இன்று வளர்ந்து வருகிறது. கட்புல, செவிப்புல சாதனங்களூடாக வெளிவரும் தமிழிலக்கியப் படைப்புக்களில் நன்மையும் தீமையும் கலந்து காணப்படுகின்றன. எனினும் இச்சாதனவியல் மூலம் இலக்கிய ஆர்வம் விரிவுபடுவதை அனைவரும் ஒத்துக் கொள்வர். பத்திரிகைகளூடாக சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை, நாடகம், தமிழாய்வுக் கட்டுரைகள் மாணவர்க்கு மிகுந்த பயனுடையவையாயுள. தற்போது கணனி மூலம் இலக்கியப் படைப்புகள் வெளியாகி வருகின்றன. கணனி அமைப்பில் இலக்கணப் பிழைகள் சொற்பிரிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. இவையும் தமிழிலக்கியப் பரப்பில் இன்று எதிர்நோக்கும் பிரச்சனைகளுள் ஒன்றாக அமைகிறது.

இன்று தரமான சஞ்சிகைகள், தமிழ்த் திரைப்படங்கள் வெளிவருவது குறைந்துள்ளது. வியாபார நோக்கோடு வெளியிடப்படும் தென்னிந்தியச் சஞ்சிகைகளும் திரைப்படங்களும் இலக்கிய ஆர்வத்தைத் தூண்டுவனவாயில்லை. இலங்கையிலும் தமிழிலக்கியத்தை வளர்க்கும் நோக்கோடு தொடர்பு சாதனங்கள், சஞ்சிகைகள் தம் பணியைப் பூரணப்படுத்தவில்லை எனலாம். தமிழிலக்கிய நூல்களுக்கு மிகுந்த தட்டுப்பாடு இலங்கையில் ஏற்பட்டுள்ளது. தொடர்புச் சாதனங்களில் தமிழ் உச்சரிப்பை தவறாகப் பிரயோகிக்கும் வழமை நிலவுகிறது. திரைப்படப் பாடல்களில் பொருள் புரியாத தமிழ்ப்பாடல்களும் உருவாகுவது மிக முக்கிய பிரச்சனையாக வளர்ந்து வருகிறது.

பிரச்சனைகளுக்கான தீர்வுகள் :

(1) தமிழிலக்கியம் கற்பித்தலில் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் திட்டமிட்ட அடிப்படையில் கல்விக்கொள்கையை நிர்ணயித்துப் பாடத்திட்டங்களை நிலையான தன்மையில் நிலைத்து நிற்பதற்கு உதவவேண்டும். பொதுவாக அரசாங்கம் மாறுகின்றபோது நீண்ட திட்டத்தில் செயலுருவம் பெறும் கல்விகொள்கையை மாற்றுவது இடையூறாகும், எனவே பாடத்திட்டங்கள் நிலையானவையாகவும்

நெகிழ்ச்சியானவையாகவும் அமைதல் வேண்டும். இத்தன்மை தமிழிலக்கிய பாடத்திட்டத்தை நிலைபெறச் செய்ய வழியாகும்.

(2) தமிழிலக்கிய பாடத்திட்டமிடல் தகுதியானவர்களின் ஆலோசனை பெறப்படல் வேண்டும். தமிழிலக்கிய பாடத்திட்டமிடலில் பங்குபற்றுபவர்கள் மரபுவழித் தமிழிலக்கிய வாதிகளாகவும் நவீன இலக்கியத் துறையைச் சார்ந்தவர்களாகவும் இருத்தல் சாலப் பொருத்தமாகும்.

(3) பன்முகச் சமுதாய அமைப்புக்கு ஏற்பவும் பாரம்பரிய பண்பாட்டு நடைமுறைக்கு ஏற்பவும் தமிழிலக்கிய பாடப்பரப்பு அமைதல் வேண்டும்.

(4, தமிழிலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்கட்குச் சரியான பயிற்சிகள் திட்டமிட்டமுறையில் வழங்கப்படல் வேண்டும். ஆசிரியர்கட்குப் பயிற்சியின் மீள்கற்பித்தல், கருத்தரங்குகள், செயலமர்வுகள் ஏற்படுத்துதல் வேண்டும்.

(5) தமிழிலக்கிய அறிவை வளம்படுத்துவதற்கு அரசாங்கம் மரபு இலக்கியம் பேணும் நிறுவனங்களிற்கும் நவீன இலக்கியம் பேணிம் நிறுவனங்களிற்கும் முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். உதாரணமாக ஆரியதிராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம். இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

(6) தமிழிலக்கிய பாடத்தை உலகளாவிய ரீதியில் பெருமைப்படுத்துகின்ற போது பெற்றோரும் மாணவரும் தமிழிலக்கியத்தில் அக்கறை கொள்வர்.

(7) பொருத்தமான, யதார்த்தமான தேவைகளுக்குரிய இலக்கியங்களைக்கற்க மாணவர்க்கு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

(8) உலகளாவிய ரீதியில் தமிழிணையம் மூலம் தமிழிலக்கிய ஆர்வத்தைத் தூண்டவேண்டும்.

(9) அரசியல் பிரச்சனைகளால் ஏற்படும் அவலங்களைப் போக்கி தமிழிலக்கிய மாநாடுகள் காலத்திற்குக் காலம் கூட்டப்பட வேண்டும். இலக்கிய அறிஞர்களின் கருத்துக்களை மாணவ சமூகம் அறிவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

மேற்குறித்த தீர்வுகளைக் கருத்தில் கொண்டு ஈழத்து கல்வி மரபில் தமிழ் இலக்கியபாட விருத்தியை மேற்கொண்டு வளப்படுத்துவோமானால் எதிர்காலத்தில் தமிழ் இலக்கிய பரிமாணம் மாசு இன்றி வளர வாய்ப்பு ஏற்படும்.

# ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் மகாகவியின் முக்கியத்துவம்

தே. தேவஞானரூபி

ஈழத்துக் கவிதை உலகில் தனக்கு முன்னர் இருந்த கவிதை மரபில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தியவராக மகாகவி விளங்குகின்றார். அளவெட்டிப் பிரதேசத்தில் வாழ்ந்த மகாகவியின் இயற்பெயர் து. உருத்திரமூர்த்தி என்பதாகும். 1929ல் பிறந்து 71ஆம் ஆண்டுவரை வாழ்ந்த மகாகவி 40களில் இருந்து கவிதை உலகத்தில் பிரவேசித்தார். தனது கவிதை மேல் கொண்ட தளராத நம்பிக்கையின் காரணத்தால் தனக்குத்தானே மகாகவி எனப் புனைபெயர் சூட்டிக் கொண்டார்.

பல நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுதிய இவரது தனிக்கவிதைகள் வள்ளி, ''வீடும் வெளியும்'', என்னும் நூல்களாக தொக்கப்பட்டுள்ளன. கோடை, புதிய தொரு வீடு, அடிக்கரும்பு, வாணியும், வறுமையும், சேனாதிபதி, முதலிய பாநாடகங்களையும் அவர் இயற்றியுள்ளார். கந்தப்ப சபதம், சடங்கு ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் முதலிய காவியங்களையும் இயற்றியுள்ள மகாகவி கண்மணியாள் காதை, என்னும் வில்லுப்பாட்டினையும் உருவாக்கியுள்ளார். குறும்பாக்கள் நூறினைக் கொண்ட தொகுதியாக குறும்பா என்னும் நூலும் வெளிவந்தது இவற்றினை அடிப்படையாகக் கொண்டே ஈழத்து கவிதை வளர்ச்சியில் மகாகவியின் இடத்தினைத் தீர்மானிக்க முடியும்.

ஒரு கவிதை எவற்றினைக் கொண்டு அமைய வேண்டும் என்பதை

''இன்னவை தான் கவி எழுத ஏற்ற பொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திரும்பிச் செல்லாதீர் சோலை கடல்
மின்னல், முகில் தென்றலினை மறவுங்கள் மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு, என்பவற்றை பாடுங்கள்''

என்று கூறியதுடன் தாமும் அவற்றையே கவிதையின் பாடு பொருளாகக் கொண்டார். மகாகவியின் கவிதை ஆக்கங்கள் பலவற்றுக்கு அடிநாதமாக அமைந்தவை சமகால உணர்வு, சமூகஉறவு, ஆழ்ந்த மனிதநேயம் என்பனவாகும். தனது மண், அதன் சமூகப்பயன்பாட்டு அம்சங்கள், அங்கு வாழும் தொழிலாளர் விவசாயிகளது முயற்சித் திறன் மீதிருந்த ஈடுபாடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கண்டு ஏற்பட்ட ஆவேசம் முதலியன அவரது பல்வேறு கவிதை ஆக்கங்களிலும் புலப்பட்டு நின்றன.

''மப்பன்றிக் காலமழைகாணாத மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது
ஏர் ஏறாது காளை இழுக்காது எனினும்
பாறை பிறந்து பயன் விளைப்பான்
என் ஊரான்''

என யாழ்ப்பாண விவசாயிகளின் முயற்சிகளைப் பெருமிதத்தோடு குறிப்பிடுகின்றார்.

மறுமலர்ச்சிக் காலம் தொடக்கம் ஈழத்துத் தமிழ்க் கவிதையில் நிகழ்ந்து வந்த முக்கிய மாற்றங்களில் ஒன்று, மரபு. யாப்புக்களில் செம்மொழிச் சொற்களுக்

குப் பதிலாக பேச்சுவழக்குச் சொற்களைப் பயன்படுத்தியமையாகும். கவிதைப் பொருளை சாதாரணவாசகர்களும் அறிந்து கொள்ளக் கூடிய நிலைக்கு இட்டு வரும் இம் முயற்சியில் திறமையாக ஈடுபட்டு மரபு யாப்புக்களுக்கு பேச்சோசை என்ற பரிமாணத்தை அளித்தவர்களில் முக்கியமானவர் மகாகவி. சாதாரண பேச்சு வழக்குச் சொற்கள் கருத்து தொடர்பிற்கேற்ற வகையில் சிறுசிறு வாக்கியங்களாகத் தொடரும் போது அவற்றினூடே வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை, முதலிய யாப்பு வடிவங்கள் புலப்பட்டு நிற்பதை அவர்கவிதைகளில் காணலாம்.

''சோமு வா தம்பி சுருக்காய் வெளிக்கிடன்
நேரமாச் செல்லே நெடுக இருக்கிறாய் —
——————————————
ஊமையன்ர காருக்குச் சொன்னியெல்லே
''சொல்லி விட்டேன்'' என்னும் பகுதியில் இப் பண்பினைக் காணலாம்.

மகாகவியின் கவிதைகளில் குறிப்பிடத்தக்க இன்னொரு பண்பு அதன் கட்புலச் சித்தரிப்பு நிலை ஆகும். கவிதையில் கூறப்படும் விடயத்தை வாசகர்களின் மனக் கண்ணில் நாடகக்காட்சி போல விரியும் வகையில் சித்தரிப்பதே கட்புலச் சித்தரிப்பு எனப்படும். தேரும் திங்களும் என்னும் கவிதையில் வரும்

''நில்'' என்றான் ஓராள்
''நிறுத்து'' என்றான் வேர்ஓராள்
''புல்'' என்றான் ஓராள்
''புலை'' என்றான் வேர்ஓராள்
கல் ஒன்று வீழ்ந்தது
கழுத்தொன்று வெட்டுண்டு...... ...
மல்லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்''

என்னும் பகுதி தேர்த்திருவிழாவில் இடம் பெற்ற சாதிக் கலவரத்தினை வாசகர் மனக் கண் முன் கொண்டு வருவதாக அமைகின்றது இது ஈழத்துக் கவிதை மரபில் ஏற்பட்ட முக்கியமான மாற்றமாகவும் பிற்காலக் கவிஞர்களையும் புது நெறியில் அழைத்துச் செல்வதாகவும் அமைகின்றது.

ஈழத்து இலக்கியப் பரப்பிலே காணப்படும் தனித்துவம் மிக்கதொரு வடிவம் மகாகவியின் குறும்பா ஆகும். ஆங்கிலத்தில் லிமறிக்ஸ் என்று அழைக்கப்படும் இவ்வடிவத்தை அவர் குறும்பா எனத் தமிழில் அறிமுகப்படுத்தினார். குறுகியதாகவும் குறும்புத்தன்மை கொண்டதாகவும் அமையும் இவ்வடிவத்தின் மூலம் தமது காலத்தில் காணப்பட்ட கேலிக்குரிய சமுதாய அம்சங்களை நகைச்சுவையுடன் அவர் எடுத்துக் காட்டினார்.

''கண்டியிலே பேரிளம் பெண் ஆத்தாள்
கற்பை அவள் அற்புதமாய்க் காத்தாள்
உண்டு செமியாதவயிறு ஊத ஒருநாள்
கயிற்றை றத்
தொண்டையிலே மாட்டி உயிர் நீத்தாள்'

என்னும் பகுதி குறும்பாவிற்கு உதாரணமாக அமைகிறது. மேலும் அவரது கோடை. புதியதொரு வீடு, முதலிய பாநாடகங்களும் ஈழத்துக் கவிதை உலகிற்கு வளம் சேர்ப்பனவாக அமைந்துள்ளன

தொகுத்து நோக்கின் தனது கால சமுதாய முரண்பாடுகளை கவிதையில் திறமையாக வெளிப்படுத்தியமை, கவிதைக்குப் பேச்சோசைப் பண்பை அளித்தமை, கட்புலச் சித்தரிப்புக்கு உரியவனாக மாற்றியமை, குறும்பா என்னும் புதிய வடிவத்தை அறிமுகப்படுத்தியமை போன்ற காரணங்களால் மகாகவி இலங்கை இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியதுடன் பிற்காலக் கவிஞர்களுக்கு வழிகாட்டியாவும் அமைகின்றார்.

# கூட்டுறவு இயக்கம்
# (Co-Operative Movement)

**யோ. காந்தரூபன்**
*( 2001, வர்த்தகம். )*

கூட்டுறவு என்றால் என்ன என்பதற்கு பல்வேறு அறிஞர்களால் பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. இதில் திரு. H கல்வேட் என்பவர் கூட்டுறவு என்பதற்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகின்றார். ''மக்கள் தமது பொருளாதார கலாசார விருத்தி கருதி சம உரிமையும் கடமையும் என்ற அடிப்படையில் தாமாகவே முன்வந்து ஒன்று சேர்ந்து செயற்படுதல் கூட்டுறவு ஆகும்.''

**கூட்டுறவுத் தோற்றம் :**

வரலாற்றின் ஆரம்ப நாட்களிலிருந்து மக்கள் கூட்டுறவு இயல்பைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். வேட்டையாடுதல், விவசாயம், சமூகசமயச் சடங்குகள் உட்பட பல செயற்பாடுகளில் இக் கூட்டுறவு முயற்சியை அவதானிக்கலாம். கூட்டுறவு வரலாற்றில் உலகளாவிய வளர்ச்சியை நோக்குமிடத்து பலதரப்பட்ட வித்தியாசங்களிற்கு மத்தியிலும் ஒரு பொது மாதிரி உருவாகி வந்துள்ளதை இனங்காண முடிகிறது. உலக பொருளாதார மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருந்த 19ம் நூற்றாண்டின் ஆரம்ப நாட்களில் கூட்டுறவு தோற்றம் பெற்றது. கைத்தொழிற் புரட்சியினால் ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களிற்கு கூட்டுறவு மீட்சியைக் கொடுத்தது. ''ரொபட்ஓவன்'' ''றொச்டேல்'' முன்னோடிகள் போன்ற சமூக சீர்திருத்தவாதிகள் கூட்டுறவு இயக்கத்தின் ஸ்தாபகர்கள் என்பர் 1844இல் இலண்டனிற்கு வடக்கே அமைந்துள்ள றோக்டேல் கைத்தொழில் நகரில் வாழ்ந்த 28 நெசவுத் தொழிலாளர்கள் இணைந்து தமது உறுப்பினர்களின் சமூக வீட்டு நிலைமைகளை விருத்திசெய்ய ஒரு சங்கத்தை உருவாக்கினர் இதுவே முதலாவது கூட்டுறவுச் சங்கமாகும். றோச்டேல் முன்னோடிகளில் பலர் கைத்தறி நெசவாளர்களாகக் காணப்பட்டனர். மின்தறியின் அறிமுகம் அவர்களைப் பெருமளவில் பாதித்தது. கைத்தொழில், விவசாயப் புரட்சிகளினால் ஏற்பட்ட புதிய பிரச்சினைகளால் கூட்டுறவு எண்ணக்கருக்கள் வளரத் தொடங்கின.

ஐரோப்பா முழுவதிலும் இவ்வகையான இயக்கம் பரவ ஆரம்பித்தது. குறிப்பாக ஜேர்மனியில் கூட்டுறவு கடன்துறையில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு வந்தது. கூட்டுறவு கடன் சங்கத்திற்கான அத்திவாரம் 1840களில் ஜேர்மனியில் ரபாயிசீன் என்பவரால் இடப்பட்டது. அவர் 1848இல் ஒரு சிறுதொகைப் பணத்தினைச் சேர்த்து ஒரு கூட்டுறவு பேக்கரியை ஆரம்பித்தார். அந்தப் பேக்கரியிலிருந்து கிராம மக்களிற்கு அப்போது நிலவிய விலையை விட அரைப்பங்கு விலைக்கு பாணைப் பெறுவதற்கு உதவினார். தொடர்ந்து கூட்டுறவுக் கால்நடைக்கொள்வனவுக் கடை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் 1849இல் அவர் 300 பவுண்களைச் சேர்த்து ஒரு கிராம வங்கியை ஸ்தாபித்தார். இவ் வங்கிகள் வளர்ச்சியடைந்து 1891ஆம் ஆண்டளவில் 885 ஆகின. அரசு பெருமளவான நிதிகளாலும் இயந்திர சாதனங்களாலும் உதவ முடியாததை இக் கூட்டுறவு இயக்கம் நிரூபித்துக்காட்டியது. இவ்விதமாகத் தோன்றிய கூட்டுறவு இயக்கங்கள் ஏனைய நாடுகளிற்கும் படிப்படியாகப் பரவத் தொடங்கின.

**இலங்கையில் கூட்டுறவு அமைப்பின் வளர்ச்சிக் கட்டங்கள் :**

(i) *1911ஆம் ஆண்டு* — கூட்டுறவுக் கடன் சங்கங்களின் சட்டம் (ஐக்கிய நாணய சங்கச் சட்டம்) கொண்டுவரப்பட்டது.
(ii) *1926ஆம் ஆண்டு* — கூட்டுறவு திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
(iii) *1942ஆம் ஆண்டு* — நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டது.
(iv) *1943ஆம் ஆண்டு* — பொல்கொல்லையில் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டது.
(v) *1947ஆம் ஆண்டு* — விவசாயப் பொருள் உற்பத்தியுடன் அவைகளின் விநியோகத்திற்குமான கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன.
(vi) *1955ஆம் ஆண்டு* — கூட்டுறவுச் சம்மேளனம் உருவாக்கப்பட்டது.
(vii) *1957ஆம் ஆண்டு* — பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றம் பெற்றன.
(viii) *1971ஆம் ஆண்டு* — கூட்டுறவு மறுசீரமைப்பு செயற்படுத்தப்பட்டது.
(ix) *1979ஆம் ஆண்டு* — மீண்டும் கூட்டுறவு மறுசீரமைப்பிற்கு உட்படுத்தப்பட்டது.
(x) *1992ஆம் ஆண்டு* — கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தியமைக்கப்பட்டது.

**கூட்டுறவு இயக்கத்தை ஆரம்பிப்பதற்கான அடிப்படைப் பண்புகள் :**

(i) ''ஒருவர் பலருக்கும் பலர் ஒருவருக்கும்'' என்ற கருப்பொருளைக் கொள்ளல்
(ii) சுய உதவியும் பரஸ்பரம் உதவியும் புரிதல்.
(iii) ஒத்துழைப்பையும் சமமான தன்மையையும் மதித்தல்.

**கூட்டுறவின் கொள்கைகள் :**

கூட்டுறவிற்கென 1844இல் முதன் முதலாகக் கொள்கை வகுக்கப்பட்டது. பின்னர் உலகின் பல்வேறு நாடுகளிலும் ஏற்பட்ட சமூக, பொருளாதார அரசியல் மாற்றங்கள் காரணமாக கூட்டுறவுக் கொள்கையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் அடிப்படையில் D. U. கார்வே தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சுக்கு அமைய 1966இல் சர்வதேசக் கூட்டுறவு அமைப்பினால் 6 கொள்கைகள் கொண்டுவரப்பட்டன. அவையாவன :

1. **திறந்த தன்னிச்சையான அங்கத்துவம் :**

கூட்டுறவு அமைப்புக்களில் இன, மத, மொழி, நிற, வேற்றுமைகள் இன்றி சேர்ந்து கொள்ளவும் எந்த நேரத்திலும் விலகிச் செல்லவும் உரிமை உண்டு

2. **ஜனநாயக ரீதியான கட்டுப்பாடு :**

அங்கத்தவர் பங்குகளை வைத்திருந்த போதிலும் ஒரு அங்கத்தவருக்கு ஒரு வாக்குரிமை என்ற அடிப்படையில் வாக்களிக்கப்படும் இயக்குனர் சபையால் கூட்டுறவு அமைப்பு நிர்வகிக்கப்படும்.

3. **மூலதனத்தின் மீதான வரையறுக்கப்பட்ட வட்டி :**

அங்கத்தவர்களின் பங்கு மூலதனத்திற்கு குறைந்த வீத வட்டி வழங்க வேண்டும் என்பதனை விளக்குகின்ற கொள்கையே இதுவாகும். இதனால் அங்கத்தவர்கள் அதிக பங்குகளைக் கொள்வனவு செய்வார்கள். இது பங்குலாபப் பகிர்வைக் கூறுகின்றது.

4. **அங்கத்தவர் தொடர்பிற்கேற்ப மேலதிகத்தில் பங்கு :**

கூட்டுறவு சேவை நோக்கமுடையது எனினும் திறமையாக நிர்வகிப்பதனால் இலாபம் ஏற்படும் போது அதனைக் கூட்டுறவு அமைப்புடன் அங்கத்தவர் கொண்டுள்ள தொடர்பிற்கேற்ப பகிர்ந்து வழங்க வேண்டும் என்பது இக் கொள்கையாகும்.

5. **கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி :**

கூட்டுறவு பற்றிய அறிவினை அங்கத்தவர்கள் பொதுமக்கள், பணியாளர்கள், இயக்குனர்கள் போன்ற பல்வேறு பகுதியினருக்கும் புகட்ட வேண்டும்.

6. **கூட்டுறவுச் சங்கங்கள் மத்தியில் கூட்டுறவை அபிவிருத்தி செய்தல் :**

கூட்டுறவு அமைப்புக்கள் தமக்கிடையே பிரதேச ரீதியாக தேசிய ரீதியாக சர்வ

தேச ரீதியாக உறவை ஏற்படுத்த வேண்டும் என்பது இதன் கருத்தாகும்.

1996இல் பிரகடனப்படுத்தப்பட்ட மேற்கூறப்பட்ட கொள்கைகள் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபாடு கொண்டு வரப்பட வேண்டும் என்ற கருத்து பொதுவாக பலராலும் முன்வைக்கப்பட்டது. இதற்கு அமைவாக 1995இல் புதிய கொள்கை நகல் ஒன்று சர்வதேச கூட்டுறவு அமைப்பினால் முன்மொழியப்பட்டு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அவை யாவன :

(i) சுயவிருப்பின் படியான தடையற்ற அங்கத்துவம்

(ii) ஜனநாயக அங்கத்துவக் கட்டுப்பாடு

(iii) அங்கத்துவப் பொருளாதாரப் பங்கெடுப்பு

(iv) சுயாட்சியும் அங்கத்துவமும்

(v) கல்வியும் பயிற்சியும் தகவலும்

(vi) கூட்டுறவு மத்தியிலான கூட்டுறவு

(vii) சமுதாயம் மீதான அக்கறை

**கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைப் பண்புகள் :**

**(i) அங்கத்துவம் :** கூட்டுறவு இயக்கத்தின் பங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் பங்கொன்றின் தற்போதைய பெறுமானம் 100/- ஆகக் காணப்படுகின்றது. இப்பெறுமானம் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து வந்துள்ளது. கூட்டுறவு இயக்கம் ஒன்றின் குறைந்தளவு அங்கத்தவர் தொகை 10ஆகக் காணப்படுகின்றது அங்கத்தவர் 18வயதிற்கு மேற்பட்டாதவராக இருத்தல் வேண்டும்.

**(ii) உரிமை :** கூட்டுறவின் உரிமையானது அதன் அங்கத்தவர்களிற்கே ஆனது.

**(iii) மூலதனம் :** கூட்டுறவிற்குரிய மூலதனங்களை உள்ளக மூலதனம் வெளியக மூலதனம் என 2 வகைப்படுத்தலாம். அதாவது பிரதானமாக அங்கத்தவர்களிற்கு பங்குகளை விற்பனை செய்வதன் மூலமும் அரசிடமிருந்து நிதியுதவி பெற்றுக் கொள்வதன்மூலமும் மூலதனம் திரட்டிக் கொள்ளப்படுகின்றது.

**(iv) முகாமைத்துவம் :** கூட்டுறவின் முகாமைத்துவமானது இயக்குனர் சபையினால் மேற்கொள்ளப்படும்.

**(v) பதிவு செய்தல் :** 1972ஆம் ஆண்டு 5ஆம் இலக்க கூட்டுறவு இயக்க சட்டத்தின் கீழ் கூட்டுறவு இயக்கம் பதிவு செய்யப்படும். கூட்டுறவு திணைக்கள ஆணையாளர்மூலம் கூட்டுறவு இயக்கத்தினை பதிவு செய்தல் தொடர்பான நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

**(vi) சட்ட ஆளுமை :** கூட்டுறவு இயக்கம் சட்ட ஆளுமை உடைய நிறுவனமாகக் காணப்படுகின்றது.

**(vii) பொறுப்பு :** கூட்டுறவு இயக்க உறுப்பினர் ஒவ்வொருவரும் தாம் கொள்வனவு செய்த பங்குகளின் பெயரளவுப் பெறுமானத்திற்கு அவர்களது பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் வரையறுக்கப்படாத கடன் சங்கங்களின் பொறுப்பு வரையறுக்கப் பட்டிருப்பதில்லை.

**(viii) கணக்குப் பதிவும், கணக்காய்வும் :** கூட்டுறவு நிறுவனம் தொடர்பாக விசேட கணக்குப் பதிவு முறை பின்பற்றப்படுகின்றது. இக் கணக்குகள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கீழ் கணக்காய்வு செய்யப்படுகின்றன.

**(ix) கலைப்பு :** கூட்டுறவு இயக்கம் ஒன்றைக் கலைப்பதற்கும் அதன் பதிவை நீக்கி விடுவதற்கும் கூட்டுறவு ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவுச் சங்கத்தினைப் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் :**

(i) பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

(ii) கூட்டுறவு உபவிதியின் 2 பிரதிகள்

(iii) குறித்த உபவிதி கூட்டுறவுச் சட்டத்திற்கும் விதிகளிற்கும் முரண்படவில்லை என வெளிப்படுத்தும் சான்று

(iv) உறுதிப்படுத்தப்பட்ட பொதுச் சபையின் அறிக்கைகள்

(v) சாத்தியக் கூற்று அறிக்கை

(vi) பொருளாதார தகைமை பற்றிய அறிக்கை

(viii) நிர்வாகசபை உறுப்பினர்களின் விபரம்

(ix) சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்திற்குப் பங்குபற்றியவர்களின் பெயர்ப் பட்டியல்

(x) சங்கத்திற்குச் செல்லும் பாதைகாட்டும் வரைபடம்

(xi) அதிகார இடப்பரப்பைக் காட்டும் வரைபடம்

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இத்தகைய ஆவணங்கள் யாவற்றையும் பரிசீலனை செய்து திருப்தி கண்டால் கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்வார் இதற்குக் கட்டணம் அறவிடப்பட வேண்டியதில்லை.

**கூட்டுறவுச் சங்கக் கலைப்பு :**

கூட்டுறவுச் சங்கம் அதன் செயற்பாட்டினை முடிவிற்குக் கொண்டு வருதல் கூட்டுறவு கலைப்பு ஆகும். இதனைக் கலைப்பதற்கான அதிகாரம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு மட்டும் உண்டு. ஒரு கூட்டுறவுச் சங்கமானது பின்வரும் காரணங்களை முன்னிட்டுக் கலைக்கப்படலாம்.

(i) பதிவு செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு மேல் வியாபாரத்தை ஆரம்பிக்காவிடின்

(ii) இரு வருடங்கள் தொடர்ச்சியாக இயங்காவிடின்

(iii) உறுப்பினர்களில் ¾ பங்கிற்குக் குறையாதோர் கலைக்குமாறு வேண்டுதலிடம் போது

(iv) அங்கத்தவர்களின் இழிவு எண்ணிக்கை 10 பேரை விடக் குறைந்தால்

(v) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கூட்டுறவைக் கலைக்க விரும்பும் போது

**இலங்கையில் கூட்டுறவுச் சங்கத்தின் சட்டமூலங்கள் :**

* 1972ஆம் ஆண்டு 5ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டமும் அதன் திருத்தச் சட்டங்களும்
* உப விதிகள்
* சுற்று நிருபங்கள்
* நடைமுறை விதிகள்

மேற்கூறப்பட்டவற்றை விட கூட்டுறவு நிறுவனம் ஒன்றின் செயற்பாட்டுடன் தொடர்புபடும் ஏனைய சட்டங்களும் காணப்படுகின்றன. அவையாவன :

(i) 1972ஆம் ஆண்டு 12ஆம் இலக்க கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டமும் அதன் திருத்தச் சட்டங்களும்.

(ii) 1950ஆம் ஆண்டு13ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குச் சட்டம்

(iii) 1954ஆம் ஆண்டு 19ஆம் இலக்க கடை அலுவலக ஊழியர் சட்டம்.

(iv) 1958ஆம் ஆண்டு 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம்.

(v) 1980ஆம் ஆண்டு 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம்.

(vi) 1983ஆம் ஆண்டு 12ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டம்.

(vii) 1979ஆம் ஆண்டு 1ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்.

(viii) 1950ஆம் 29ஆம் இலக்கம் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்.

(ix) 1946ஆம் ஆண்டு 37ஆம் இலக்க நிறுவைகள், அளவைகள் பற்றிய சட்டம்.

**இலங்கையில் கூட்டுறவின் நிர்வாக மட்டங்கள் :**

(i) ஆரம்ப சங்கங்கள் / பிரதேச மட்டம் :

முதலில் உறுப்பினர்கள் உறுப்புரிமை பெறும் கூட்டுறவுச் சங்கங்களை இது குறிக்கும்.

Eg மீனவர் கூட்டுறவுச் சங்கம்

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்


**தர்மி வீடியோ கொம்பிளெக்ஸ்**

நவீன முறையில்

வீடியோ படம் பிடித்திட

நாடவேண்டிய ஒரே இடம்

**Tharmi Video Complex**




டச் வீதி, உடுவில்.

---

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

**நேசன் கொம்பியூட்டர் சேவிஸ்**



**NESAN COMPUTER SERVICE**

சங்குவேலி வடக்கு, மானிப்பாய்

---

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

**வினோ பல்பொருள் வாணிபமும்**
**வீடியோ சென்ரரும்**



உங்களுக்குத் தேவையான

புதிய, பழைய வீடியோ பிரதிகளை

உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

நீங்கள் நாடவேண்டிய இடம்

T.P - 077110264

137, டச்வீதி, உடுவில்.

---

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

**லெனின் தையல் அகம்**



நவீன முறையில்

ஆண்களுக்கான

ஆடைகளைத் தைத்திட

நாடவேண்டிய இடம்.

டச் வீதி, உடுவில்.

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

**நியூ ரட்ணம் ஸ்ரோர்ஸ்**

- ரட்ணம் அரைக்கும் ஆலை
- தொலைத்தொடர்பு நிலையம்

சகலவிதமான போட்டோக்கொப்பி
கவரிடுதல்
வாகன சேவையையும்

பெற்றுக்கொள்ளலாம்.

டச் றோட், உடுவில், சுன்னாகம்

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

**டிலக்சனா பான்சி கவுஸ்**

அழகுசாதனப் பொருட்கள்
அன்பளிப்புப்பொருட்கள்,
எவர்சில்வர் பொருட்கள்,
விளையாட்டுப்பொருட்கள்,
பிளாஸ்ரிப்பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்

அணைத்தையும் பெற சிறந்த இடம்.

மானிப்பாய் வீதி, உடுவில்.

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

- சகலவிதமான குளிர்பான வகைகளையும்
- சிற்றுண்டி வகைகளையும்

தரமாகப் பெற



**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

# தயா நகைப் பூங்கா



ஆடவர் மங்கையர், சிறுவர்

மனம் மகிழும்

அழகிய தங்க நகைகளை

அசல் 22 கரட் தங்கத்தில்

செய்து கொடுப்பவர்கள்



# தயா நகைப்பூங்கா





குறித்த தவணையில்

உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.



213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

## யோகமித்திரன்

வைண்டிங் வேலைகளுக்கு
தரமான ஸ்தாபனம்.



டச் வீதி, உடுவில்.

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

## மணியம் ஸ்ரோர்ஸ்
## &
## சிவாஸ் பந்தல்

பலசரக்கு வியாபாரமும்
பந்தல்
கதிரை
வாடகைச் சேவையும்.

மானிப்பாய் வீதி, உடுவில்.

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

## கல்யாணி கிறீம் ஹவுஸ்

உங்களுக்குத் தேவையான

ஐஸ்கிறீம் வகைகள்
சிற்றுண்டி வகைகள்
குளிர்பான வகைகள்
ஸ்பெஷல் பீடா

ஆகியவற்றைப் பெற

**சிறந்த ஸ்தாபனம்**


கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

## ராசன் போட்டோ & வீடியோ

விசேட வைபவங்களுக்கான
படப்பிடிப்பாளர்





வீடியோப்படக்கொப்பிகள்
வாடகைக்குக் கொடுக்கப்படும்.

கந்தரோடை, சுன்னாகம்.

வணிகநாதம் வாழ்க

## யாழினி அழகு மாடம்



எவர்சில்வர்,
அழகுசாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப்பொருட்கள்,
நவீன பொருட்களை

சிறந்த முறையில் பெற உகந்த இடம்

## யாழினி அழகு மாடம்

நவீன சந்தை, யாழ்ப்பாணம்

---

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

## நாதன் சகோதரர்கள்




பலசரக்கு வியாபாரத்தில்
தனித்துவம்
பெற்ற
நிறுவனம்

K.K.S வீதி, இணுவில்.

---

வணிகநாதம் சிறக்க வாழ்த்துக்கள்

## சுதர்சினி வண்ணச்சோலை



- செப்பு எவர்சில்வர்
- ஆலயத்திற்கு தேவையான பித்தளைப் பொருட்கள் விற்பனை செய்பவரும்

**அழகுசாதனப் பொருட்கள் விற்பனையாளரும்.**

K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

# வணிக நாதம் சிறக்க வாழ்த்துகின்றோம்

இளைஞர்களை அரவணைக்க இலங்கை வங்கி வழங்கும் 18+
இளைஞர் சேமிப்புக் கணக்கு (18 - 25 வயதுடையோருக்கானது)

18 plus Savings Account

திருமணப் பரிசாக தங்கப்பவுண்
ஆகக்குறைந்த நிலுவையாக ரூபா 25000/-
திருமணத்திற்கு முன்பு ஒரு வருடத்துக்குப் பேணுபவருக்கு
திருமணத்தின் போது தங்கப்பவுண் ஒன்று வழங்கப்படும்.

மேலும் 0.5% கூடிய வட்டி, காப்புறுதி (ரூபா 500 000/- வரை)
புலமைப்பரிசில்கள், கடன்அட்டை, ATM (Card) அட்டை, கடன்
வசதிகள், முதல் குழந்தைக்கு இலவச சிறுவர் சேமிப்புக்கணக்கு.

## தங்க நகை அடகு கடன் சேவை.

அவசர தேவைக்கு துரித கடன் சேவை
குறைந்த வட்டி வீதம்
நாளாந்த வட்டிக்கணிப்பு
உயர்ந்த பாதுகாப்பு
பூரண இரகசியம் பேணுதல்

# இலங்கை வங்கி

உங்கள் தேவைகளைச் சந்திக்கும்.

# கட்டுப்பாட்டுக் கணக்கு
# Control Account

க.பிரதீஸ்வரன்
2003 வர்த்தகம்.

வியாபார நிறுவனங்கள் தமது நோக்கமான இலாபத்தினை அதிகரித்து கொள்வதற்காக அதிகளவு வியாபாரக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு அதிகளவு கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுகின்றபோது அதிகளவு வியாபார கொடுக்கல் வாங்கல்களை கணக்குப் புத்தகங்களில் பதியவேண்டிய தேவை ஒன்று நிறுவனத்திற்கு ஏற்படுகின்றது. இதனால் அக்கொடுக்கல் வாங்கல் அனைத்தையும் ஒரு கணக்குப் பதிவாளரினால் பதிவு செய்து கொள்வது கடினமாக அமைகின்றது. இக்கடினத் தன்மையை இலகுபடுத்திக் கொள்வதற்காக வியாபார நிறுவனங்களில் ஏற்படும் கொடுக்கல் வாங்கல்களினை அடிப்படையாகக் கொண்டு பேரேடுகளை பின்வரும் 3 பிரிவுகளாக வகைப்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன.

1. விற்பனைப் பேரேடு
2. கொள்வனவுப் பேரேடு
3. பொதுப் பேரேடு

**விற்பனைப் பேரேடு (கடன்பட்டோன் பேரேடு)**

கடன்பட்டோர் கணக்குகளை மட்டும் கொண்டமைந்த பேரேடே விற்பனைப் பேரேடு எனப்படும்.

Eg: A கணக்கு
பாக்கு கணக்கு.

**கொள்வனவுப் பேரேடு (கடன்கொடுத்தோன் பேரேடு)**

கடன்கொடுத்தோர் கணக்குகளினை மட்டும் கொண்டமைந்த பேரேடே கொள்வனவுப் பேரேடு எனப்படும்.

Eg: C கணக்கு
தயன் கணக்கு

**பொதுப் பேரேடு**

கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கணக்குகள் தவிர்ந்த ஏனைய அனைத்துக் கணக்குகளும் கொண்டமைந்த பேரேடு பொதுப்பேரேடு எனப்படும்.

Eg: வாடகைக் கணக்கு

நிலையான சொத்து கடன்பட்டோர் கணக்கு
நிலையான சொத்துக் கடன்கொடுத்தோர் கணக்கு

மேற்கூறியவாறு பேரேடுகளை மூன்று வகையாகப் பாகுபடுத்தி 3 வகையான கணக்குப் பதிவாளர்கள் பதிவு செய்வார்கள். இவர்களுக்கிடையில் உள்ள தொடர்பினை நிறுவன முகாமை ஒருபோதும் விரும்பமாட்டாது. 3 வகையான கணக்குப் பதிவாளரும் தத்தமது ஏடுகளில் தாங்கள் பதிவு செய்து கொண்டது சரி என்பதை நிருபிப்பதற்கு பரீட்சை மீதியை சமப்படுத்திக் கொள்ள முடியாது.

இவ்வேளையில் ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கு பதிவாளரும் தம்மால் தமது ஏடுகளில் பதிவு செய்து கொண்டது சரியா என்பதினை அறிய தமது ஏடுகளில் பதியப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பதிவுகள் எவ்வேட்டில் மேற்கொள்ளப்பட்டதோ அவ்வேட்டில் தமக்குரிய கணக்குகளை மொத்தமாக எடுத்து தமது ஏட்டில் தயாரிக்க வேண்டியுள்ளது. இவ்வேளையில் கட்டுப்பாட்டுக் கணகு என்பது தோற்றம் பெறுகின்றது.

கட்டுப்பாட்டுக் கணக்கு என்பது ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கு பதிவாளரும் தமது ஏட்டில் பதியப்பட்ட நடவடிக்கைகளுக்கான எதிர்ப்பதிவுகள் எவ் ஏட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளதோ அவ் ஏட்டில் தமக்குரிய கணக்குகளை எடுத்து தமது ஏட்டில் மொத்தமாக செய்யும் கணக்கு ஆகும்.

இக் கட்டுப்பாட்டு கணக்குகளினை தயாரிப்பதற்குத் தேவையான அனைத்து தகவல்களும் முதல் பதிவேடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் இக்கட்டுப்பாட்டுக்கணக்கை தற்சமனாகும் கணக்கு என்றும் மொத்தக் கணக்கு என்றும் செம்மையாக்கும் கணக்கு என்றும் அழைப்பர்.

**கட்டுப்பாட்டுக் கணக்கின் வகைகள்**

1. பொதுப்பேரேட்டில்
   கடன்படுனர் பேரேட்டு கட்டுப்பாட்டுக் கணக்கு
   கடன்கொடுனர் பேரேட்டு கட்டுப்பாட்டுக் கணக்கு

2. விற்பனைப் பேரேட்டில்
   பொதுப் பேரேட்டு கட்டுப்பாட்டுக் கணக்கு

3. கொள்வனவுப் பேரேட்டில்
   பொதுப் பேரேட்டு கட்டுப்பாட்டுக் கணக்கு

கடன்பட்டோர் பேரேட்டு கட்டுப்பாட்டுக் கணக்கு மாதிரி அமைப்பு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| மீ.வ | xxx | மீ.வ | xxx |
| கடன்விற்பனை | xxx | பெற்ற காசு | xxx |
| மறுக்கப்பட்ட உண்டியல் | xxx | பெற்ற காசோலை | xxx |
| மறுக்கப்பட்ட காசோலை | xxx | வருமதி உண்டியல் | xxx |
| விதித்த வட்டி | xxx | உட்திரும்பல் | xxx |
| ரத்துச் செய்த கொடுத்த கழிவு | xxx | கொடுத்த கழிவு | xxx |
| மீளப்பெற்ற.அ.மு.க | xxx | ரத்து செய்வித்த வட்டி | xxx |
| திருப்திச் செலுத்திய காசு | xxx | மீ.பெ.அ.மு.க | xxx |
| மீ.செ. | | எதிரீடு | xxx |
| | | மீ.செ | xxx |
| | xxxx | | xxxx |
| மீ.வ | xxx | மீ.வ | xxx |

## இரட்டைப் பதிவுகள்

**வரவுப்பக்கம்**

1. கடன் விற்பனை - விற்பனை நாளேடு
   கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு
   விற்பனைக் கணக்கு செலவு

2. மறுக்கப்பட்ட வருமதி - உண்டியல்கள் பொதுதினசேரி
   கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு
   வருமதி உண்டியல் கணக்கு செலவு

3. மறுக்கப்பட்ட காசோலை - காசேடு
   கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு
   வங்கிக் கணக்கு செலவு

4. விதித்த வட்டி - பொதுத் தினசேரி
   கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு
   பெற்ற வட்டிக்கணக்கு செலவு

5. ரத்துச்செய்த கொடுத்த கழிவு - பொதுத்தினசேரி
கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு
கொடுத்த கழிவுக் கணக்கு செலவு

6. மீளப்பெற்ற அறமுடியாக்கடன்

a) காசினைப் பெற்றுக்கொள்ளும் போது - காசேடு
காசுக்கணக்கு வரவு
கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு

b) இலாபமாக காட்டும்போது - பொதுத்தினசேரி
கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு
மீளப்பெற்ற அறமுடியாக்கடன் கணக்கு செலவு

7. திருப்பி செலுத்தியகாசு - காசேடு
கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு
காசுக் கணக்கு செலவு

**செலவுப்பக்கம்**

1) பெற்றகாசு, காசோலை - காசேடு
காசுக்கணக்கு வரவு
கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு

2) வருமதி உண்டியல் - வருமதி உண்டியல் நாளேடு.
வருமதி உண்டியல் கணக்கு வரவு
கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு

3) அறவிடமுடியாக்கடன் - பொதுத்தினசேரி
அறவிடமுடியாக்கடன் கணக்கு வரவு
கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு

4) உட்திரும்பல் - உட்திரும்பல் நாளேடு
உட்திரும்பல் கணக்கு வரவு
கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு

5) கொடுத்த கழிவு - காசேடு

கொடுத்த கழிவுக்கணக்கு வரவு

கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு

6) ரத்துச்செய்த விதித்தவட்டி - பொதுத்தினசேரி

பெற்றவட்டிக் கணக்கு வரவு

கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு

7) எதிரீடு - பொதுத்தினசேரி

கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு

கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு

### கடன்பட்டோர் மீதி செலவு மீதியாக வரும் சந்தர்ப்பங்கள்

1) பெறவேண்டிய தொகையிலும் பார்க்க கூடுதலாக பணம் பெறப்பட்டு இருப்பின்
2) முற்பணமாக பணம் பெறப்பட்டு இருப்பின்
3) கணக்கினை முற்றாக தீர்த்த பின்னர் பொருட்களினை உட்திருப்பம் செய்யப்பட்டு இருப்பின்

### கடன்கொடுத்தோர் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக்கணக்கு மாதிரி

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| மீ.வ | xxx | மீ.வ | xxx |
| கொடுத்த காசு | xxx | மறுக்கப்பட்ட சென்.உண்டியல் | xxx |
| கொடுத்த காசோலை | xxx | மறுக்கப்பட்ட கொ.காசோலை | xxx |
| பெற்ற கழிவு | xxx | கொடுத்த வட்டி | xxx |
| வெளித்திரும்பல் | xxx | மீளப்பெற்ற காசு | xxx |
| சென்மதி உண்டியல் | xxx | கடன் கொள்வனவு | xxx |
| ரத்துச் செய்த கொ.வட்டி | xxx | ரத்துச்செய்து பெற்ற கழிவு | xxx |
| எதிரீடு | xxx | மீ.செ | xxx |
| மீ.செ. | xxx | | |
| | xxxx | | xxxx |
| மீ.வ | xxx | மீ.வ | xxx |

## இரட்டைப் பதிவுகள்

வரவுப் பக்கம்

1) கொடுத்த காசு - காசேடு
கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக்கணக்கு வரவு
காசுக் கணக்கு செலவு

2) கொடுத்த காசோலை - காசேடு
கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக்கணக்கு வரவு
வங்கிக்கணக்கு செலவு

3) பெற்றகழிவு - காசேடு
கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக்கணக்கு வரவு
பெற்ற கழிவுக்கணக்கு செலவு

4) வெளித்திரும்பல் - வெளித்திரும்பல் நாளேடு
கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக்கணக்கு வரவு
வெளித்திரும்பல் கணக்கு செலவு

5) சென்மதி உண்டியல் - சென்மதி உண்டியல் நாளேடு
கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக்கணக்கு வரவு
சென்மதி உண்டியல் கணக்கு செலவு

6) ரத்துச்செய்த கொடுத்தவட்டி - பொதுத்தினசேரி
கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக்கணக்கு வரவு
கொடுத்த வட்டிக்கணக்கு செலவு

7) எதிரீடு - பொதுத்தினசேரி
கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக்கணக்கு வரவு
கடன்படுனர் கட்டுப்பாட்டுக்கணக்கு செலவு

செலவுப்பக்கம்

1) கடன்கொள்வனவு - கொள்வனவு நாளேடு
கொள்வனவுக் கணக்கு வரவு
கடன்கொடுத்தோர் கணக்கு செலவு

2) மறுக்கப்பட்ட காசோலை - காசேடு
வங்கிக்கணக்கு வரவு
கடன்கொடுத்தோர் கணக்கு செலவு

3) மறுக்கப்பட்ட சென்மதி உண்டியல் - பொதுத்தினசேரி
சென்மதி உண்டியல் கணக்கு வரவு
கடன் கொடுத்தோர் கணக்கு செலவு

4) கொடுத்தவட்டி - பொதுத்தினசேரி
கொடுத்தவட்டிக் கணக்கு வரவு
கடன் கொடுத்தோர் கணக்கு செலவு

5) மீளப்பெற்ற காசு - காசேடு
காசுக்கணக்கு வரவு
கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக்கணக்கு செலவு

6) ரத்துச் செய்த பெற்ற கழிவு - பொதுத்தினசேரி.
பெற்ற கழிவுக்கணக்கு வரவு
கடன் கொடுத்தோர் கணக்கு செலவு

**கடன்கொடுத்தோர் மீதி வரவு மீதியாக வரும் சந்தர்ப்பங்கள்**

1. செலுத்த வேண்டிய தொகையிலும் பார்க்கக் கூடுதலான பணம் செலுத்தப்பட்டிருத்தல்.
2. முற்பணமாகப் பணம் செலுத்தப்பட்டிருத்தல்
3. கணக்கினை முற்றாகத் தீர்த்த பின்னர் பொருட்களினை வெளித்திருப்பம் செய்தல்

**எதிர்தீர்த்தல்**

வியாபார நிறுவனத்திற்கு பணத்தினை தரவேண்டிய கடன்பட்டோன் வியாபார நிறுவனத்தினால் பணத்தினை செலுத்த வேண்டியுள்ள கடன்கொடுத்தோனுக்கு பணத்தினைச் செலுத்தி வியாபார நிறுவனத்திற்குள்ள ஒரு பொறுப்பினை இல்லாமல் செய்கின்ற OR குறைக்கின்ற ஒரு நிகழ்வு எதிர்தீர்த்தல் OR எதிரீடு என அழைக்கப்படும். இவ் எதிர்தீர்த்தலை விற்பனைப் பேரேட்டில் இருக்க கொள்வனவுப் பேரேட்டுக்கு மாற்றியது கொள்வனவுப் பேரேட்டில் இருக்க விற்பனைப் பேரேட்டுக்கு மாற்றியது என்று அழைப்பர்.

## கடன்கொடுத்தோர் பேரேடு

### அமல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வெளித்திருப்பம் | 10000 | மீதி | 12000 |
| சென்.உண்டியல் | 10000 | கொள்வனவு | 50000 |
| காசு | 10000 | | |
| வங்கி | 5000 | | |
| கழிவு | 2000 | | |
| மீ.செ | 25000 | | |
| | 62000 | | 62000 |
| | | மீ.வ | 25000 |

### விமல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வெளித்திருப்பம் | 7000 | மீதி | 10000 |
| சென்.உணடியல் | 7000 | கொள்வனவு | 40000 |
| காசு | 5000 | | |
| வங்கி | 3000 | | |
| கழிவு | 500 | | |
| மீ.செ | 27500 | | |
| | 50000 | | 50000 |
| | | மீ.வ | 27500 |

### கமல்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வெளித்திருப்பம் | 5000 | மீதி | 5000 |
| சென்.உண்டியல் | 8000 | கொள்வனவு | 30000 |
| காசு | 7000 | | |
| கழிவு | 1000 | | |
| மீ.செ | 14000 | | |
| | 35000 | | 35000 |
| | | மீ.வ | 14000 |

### நிமல்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சென்.உணடியல் | 5000 | மீதி | 7000 |
| வங்கி | 5000 | கொள்வனவு | 35000 |
| கழிவு | 500 | | |
| மீ.செ | 31500 | | |
| | 42000 | | 42000 |

## கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு (பொதுப்பேரேடு)

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| மீதி | 30000 | அ.மு.க | 1000 |
| விற்பனை | 200000 | உட்திரும்பல் | 18000 |
| | | வருமதி உண்டியல் | 37000 |
| | | கொ.கழிவு | 7500 |
| | | காசு | 38000 |
| | | வங்கி | 10000 |
| | | மீ.செ | 118500 |
| | 230000 | | 230000 |

## கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| வெளித்திரும்பல | 22000 | மீதி | 34000 |
| சென்மதி உண்டியல் | 30000 | கொள்வனவு | 155000 |
| பெற்ற கழிவு | 4000 | | |
| காசு | 22000 | | |
| வங்கி | 13000 | | |
| மீ.செ | 98000 | | |
| | 189000 | | 189000 |

### விற்பனைக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ.செ | 250000 | சாந்தன் | 75000 |
| | | சேந்தன் | 50000 |
| | | வேந்தன் | 40000 |
| | | காந்தன் | 35000 |
| | | காசு | 50000 |
| | 250000 | | 250000 |
| | | மீ.வ | 250000 |

### கொள்வனவுக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| அமல் | 50000 | மீ.செ | 172000 |
| விமல் | 40000 | | |
| கமல் | 30000 | | |
| நிமல் | 35000 | | |
| காசு | 20000 | | |
| வங்கி | 15000 | | |
| | 172000 | | 172000 |
| மீ.வ | 172000 | | |

### வாடகைக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 5000 | மீ.செ | 8000 |
| வங்கி | 3000 | | |
| | 8000 | | 8000 |
| மீ.வ | 8000 | | |

### பங்குலாபக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ.செ | 5000 | காசு | 5000 |
| | 5000 | | 5000 |
| | | மீ.வ | 5000 |

### உட்திரும்பல்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சாந்தன் | 7000 | மீ.செ | 18000 |
| வேந்தன் | 5000 | | |
| காந்தன் | 6000 | | |
| | 18000 | | 18000 |
| மீ.வ | 18000 | | |

### வெளித்திரும்பல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ.செ | 22000 | அமல் | 10000 |
| | | விமல் | 7000 |
| | | கமல் | 5000 |
| | 22000 | | 22000 |
| | | மீ.வ | 22000 |

### பெற்ற கழிவு

| | | | |
|---|---|---|---|
| மீ.செ | 4000 | அமல் | 2000 |
| | | கமல் | 1000 |
| | | விமல் | 500 |
| | | நிமல் | 500 |
| | 4000 | | 4000 |
| | | மீ.வ | 4000 |

### கொடுத்த கழிவு

| | | | |
|---|---|---|---|
| சாந்தன் | 4000 | மீ.செ | 7500 |
| வேந்தன் | 2000 | | |
| சேந்தன் | 1000 | | |
| காந்தன் | 500 | | |
| | 7500 | | 7500 |
| மீ.வ | 7500 | | |

### கொள்வனவுச் செலவுக்க/கு

| | | | |
|---|---|---|---|
| வங்கி | 3000 | மீ.செ | 3000 |
| | 3000 | | 3000 |
| மீ.வ | 3000 | | |

### அ.வி.மு.க. க/கு

| | | | |
|---|---|---|---|
| வங்கி | 1000 | மீ.செ | 1000 |
| | 1000 | | 1000 |
| மீ.வ | 1000 | | |

### பெற்றதரகுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ.செ | 4000 | காசு | 4000 |
| | 4000 | | 4000 |
| மீ.வ | 4000 | | |

### மூலதனக்கணிப்புக்கூற்று

| | | | |
|---|---|---|---|
| க.கொ | 34000 | காசு | 40000 |
| மீசெ | 66000 | வங்கி | 30000 |
| | | அ.மு.க | 30000 |
| | 100000 | | 100000 |
| | | மீ.வ | 66000 |

### வருமதி உண்டியல் க/கு

| | | | |
|---|---|---|---|
| சாந்தன் | 15000 | மீ.செ | 37000 |
| சேந்தன் | 12000 | | |
| காந்தன் | 10000 | | |
| | 37000 | | 37000 |
| மீ.வ | 37000 | | |

### சென்மதி உண்டியல் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீசெ | 30000 | அமலன் | 10000 |
| | | விமலன் | 7000 |
| | | கமலன் | 8000 |
| | | நிமலன் | 5000 |
| | 30000 | | 30000 |
| | | மீ.வ | 30000 |

### கடன்பட்டோன் பட்டோலை

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| சாந்தன் | 44000 | - |
| சேந்தன் | 34000 | - |
| வேந்தன | 27000 | - |
| காந்தன் | 13500 | 118500 |
| | | 118500 |

### கடன்கொடுத்தோர் பட்டோலை

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| அமல் | 25000 | - |
| விமல் | 27500 | - |
| கமல் | 14000 | - |
| நிமல் | 31500 | 98000 |
| | | **98000** |

காசுக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 40000 | கொள்வனவு | 2000 |
| விற்பனை | 50000 | அமல் | 10000 |
| பெற்ற தரவு | 4000 | கமல் | 7000 |
| சாந்தன் | 15000 | விமல் | 5000 |
| வேந்தன் | 13000 | வாடகை | 5000 |
| சேந்தன் | 10000 | மீ.செ | 103000 |
| | 132000 | | 132000 |
| மீ.வ | 103000 | | |

வங்கிக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 30000 | கொள்வனவு | 15000 |
| காந்தன் | 10000 | கொள்வனவுச்செலவு | 3000 |
| பங்குலாபம் | 5000 | அமல் | 5000 |
| | | விமல் | 3000 |
| | | நிமல் | 5000 |
| | | வாடகை | 3000 |
| | | மீ.செ | 11000 |
| | 45000 | | 45000 |
| மீ.வ | 11000 | | |

## பரீட்சை மீதி

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| மூலதனம் | | 66000 |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு | 118500 | |
| கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கு | | 98000 |
| காசு மீதி | 103000 | |
| வங்கி மீதி | 11000 | |
| விற்பனை | | 250000 |
| கொள்வனவு | 172000 | |
| கொள்வனவுச் செலவு | 3000 | |
| பெற்ற தரவு | | 4000 |
| பங்குலாபம் | | 5000 |
| வாடகை | 8000 | |
| அறவிடமுடியாக்கடன் | 1000 | |
| பெற்ற கழிவு | | 4000 |
| கொடுத்த கழிவு | 7500 | |
| வருமதி உண்டியல் | 37000 | |
| சென்மதி உண்டியல் | | 30000 |
| உட்திரும்பல் | 18000 | |
| வெளித்திரும்பல் | | 22000 |
| | 479000 | 479000 |

## விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியும் விற்பனைப் பேரேட்டு மீதியும் வித்தியாசப் படுவதற்கான காரணங்கள்.

@ விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகையை கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியாதுவிடல்

@ கடன்பட்டோர்களின் மீதியின் மொத்த தொகையினை கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியாது விடல்

@ எதிர்தீர்த்தலை விற்பனைப் பேரேட்டு கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிந்து விற்பனைப் பேரேட்டில் பதியாதுவிடல்

@ எண்கணிதப் பிழைகள்

e:g: பின்வரும் தரவுகளில் இருந்து கரன் கம்பனியின் 31.01.97 ற்கான விற்பனைப் பேரேட்டு கட்டுப்பாட்டுக் கணக்கினை தயாரிக்குக?

| | |
|---|---|
| விற்பனை | 12000 |
| உட்திரும்பல் | 125 |
| கடன்பட்டோர் பெற்றகாசு | 11520 |
| கொடுத்தகழிவு | 250 |
| பதிவழித்த அறவிடமுடியாக்கடன் | 500 |
| கடன்பட்டோர் மீது விதித்தவட்டி | 200 |
| 01.01.93 ல் வரவு மீதி | 5141 |
| பட்டியல் மீதி | 4074 |

கட்டுப்பாட்டுக் கணக்குடன் இணங்கவில்லை ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது.

1. விற்பனை ஒரு சந்தர்ப்பத்தில் 100/- இன்னொரு சந்தர்ப்பத்தில் 50/- ஐ மிகைப்படுத்தியுள்ளது.
2. கொடுத்தகழிவு 10 விற்பனை பேரேட்டில் காணப்பட்ட போதும் காசேட்டில் காணப்படவில்லை
3. மீதிகளைக் கொண்டு பட்டியலைத் தயாரித்தபோது 88/- கடன்பட்டோர் மீதியில் விடப்பட்டிருந்தது.
4. விற்பனைப் பேரேட்டில் பதியப்பட்ட 22/- அறவிடமுடியாக்கடன் பொதுப்பேரேட்டில் பதியப்படவில்லை.
5. விற்பனைப் பேரேட்டுக் கணக்கு ஒன்றின் செலவுப்பக்கம் 50/- ஐ மிகைப்படுத்தப்பட்டது.

## கடன்கொடுத்தோன் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதியும் கொள்வனவுப் பேரேட்டும் வித்தியாசப்படுவதற்கான காரணங்கள்.

1. கடன்கொடுத்தோன் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதியை தவறவிடுதல்
2. எதிர்த்தீர்த்தலை பேரேட்டு கணக்கில் பதியாதுவிடல்
3. எண்கணிதப் பணிகள்
4. கடன்கொடுத்தோன் வரவு மீதியை பதியாதுவிடல்

E:g: கொள்வனவுப் பேரேட்டுக் கணக்கில் இருந்த 01.03.99ல் முடிவுற்ற ஆண்டுக்கான மீதிகள் வருமாறு

| | |
|---|---|
| கொள்வனவுப் பேரேடு செலவு | 36846 |
| வரவு | 328 |
| பெற்றகழிவு | 1957 |
| கொள்வனவு | 276220 |
| கடன்கொத்தோருக்கு கொடுத்தவை | 258972 |
| கொள்வனவுத் திருப்பம் | 3116 |
| கடன்கொடுத்தோரால் திருப்பியவை | 262 |
| செண்மதி உண்டியல் | 1118 |
| 31.12.97ல் மீதி (வரவு) | 419 |
| எதிரீடு | 784 |

கட்டுப்பாட்டுக் கணக்கு 31.03.97ல் செலவுமீதி கொள்வனவுப் பேரேட்டுப் பட்டியல் மீதியுடன் இணங்கவில்லை அதற்குரிய காரணங்கள்.

1. கடன்கொடுத்தோன் செலவுமீதி 176/- கொள்வனவு பேரேட்டு பட்டியலில் தவறவிடப்பட்டது.
2. பட்டியல் மீதி செலவுமீதி 48299 வரவுமீதி 419/-
3. பெற்றகழிவு 28/- காசுப்புத்தகத்தில் பெற்ற காசில் பதியப்பட்ட போதும் கடன்கொடுத்தோன் கணக்கில் பதியப்பட்வில்லை.
4. கொள்வனவு நாளேடு 200/- குறைத்துக் கூட்டப்பட்டது
5. கொள்வனவு நாளேட்டில் காணப்பட்ட 186/- கடன் கொடுத்தோன் கணக்கில் 168/- எனப்பதியப்பட்டிருந்தது.
6. பெற்றகழிவு 137/- நபர் கணக்கில் செலவுப் பக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இது கட்டுபாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.
7. வெளித்திருப்பம் 82/- கடன் கொடுத்தோன் கணக்கில் சரியாக பதிவு செய்யப்பட்டபோதும் கொள்வனவுத்திருப்பம் நாளேட்டில் 182/- எனப் பதியப்பட்டிருந்தது.

6. எதிர்தீர்த்தல் 224/- விற்பனைப் பேரேட்டில் பதியப்பட்டது. ஆனால் இது இரு கட்டுப்பாட்டுக் கணக்கிலும் பதியப்படவில்லை.

7. கொடுத்தகழிவு 6/- காசுப்புத்தகத்தில் பதியப்பட்ட போதும் வாடிக்கையாளன் கணக்கில் செலவு வைக்கப்படவில்லை

8. விற்பனை நாளேட்டில் உள்ள ஓர் 93/- விடயம் வாடிக்கையாளன் கணக்குக்கு 39 ஆக மாற்றப்பட்டது.

**திருத்தமுன் கட்டுப்பாட்டுக்கணக்கு (கடன்பட்டோர்)**

| | | | |
|---|---|---|---|
| மீதி | 5141 | உட்திரும்பல் | 125 |
| விற்பனை | 12000 | பெற்ற கழிவு | 4520 |
| விதித்த வட்டி | 20 | கொடுத்த கழிவு | 250 |
| | | அறவிடமுடியாக்கடன் | 500 |
| | | மீ.செ | 4766 |
| | 17161 | | 17161 |

**திருத்தியபின் கட்டுப்பாட்டுக்கணக்கு (கடன்பட்டோர்)**

| | | | |
|---|---|---|---|
| திருத்திய பின் மீதி | 4766 | மிகைப்படுத்திய விற்பனை | 150 |
| | | கொடுத்த கழிவு | 10 |
| | | அறவிடமுடியாக்கடன் | 122 |
| | | எதிர்த்தீர்த்தல் | 224 |
| | | மீ.செ | 4260 |
| | 4766 | | 4766 |

**பட்டியல் மீதி திருத்தக்கூற்று**

| விபரம் | + | - | மீதி |
|---|---|---|---|
| திருத்தமுன் மீதி | - | - | 4074 |
| மிகைப்படுத்திய செலவு மீதி | 50 | | |
| கொடுத்த கழிவு | - | 6 | |
| தவறுதல் | 54 | - | |
| | 192 | 6 | 186 |
| | | | 4260 |

**கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணுவதால் ஏற்படும் நன்மைகள்.**

1. பிழைகள் தவறுகள் ஏற்படுவது தவிர்க்கப்படும்
2. அவ்வாறு ஏற்பட்டாலும் அதனை இலகுவாக கண்டுகொள்ளலாம்.
3. கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் மொத்த மீதிகளை இலகுவாகவும் விரைவாகவும் கணிப்பிடலாம்.
4. நிறுவனத்தில் கடன்கொள்கைகளினை இலகுவாக நடைமுறைப்படுத்தலாம்.
5. இது ஓர் உள்ளக கணக்காய்வு முறையாக அமையும்.

வழுக்களைத் திருத்த முன்னரான கட்டுப்பாட்டுக்கணக்கு
திருத்திய கட்டுப்பாட்டுக் கணக்கு
கொள்வனவுப் பேரேட்டுப் பட்டியல்

## திருத்தமுன் கட்டுப்பாட்டுக்கணக்கு (கடன்கொடுத்தோர்)

| | | | |
|---|---|---|---|
| மீ.வ | 328 | மீ.வ | 36846 |
| பெற்ற கழிவு | 1957 | கொள்வனவு | 276220 |
| க.கொ.விற்கு கொடுத்தவை | 258922 | திருப்பிய காசு | 262 |
| கொள்வனவுத் திரும்பல் | 3116 | மீ.செ | 419 |
| சென்மதி உண்டியல் | 1118 | | |
| எதிரீடு | 784 | | |
| மீ.செ | 47472 | | |
| | 313747 | | 313747 |

## திருத்தியபின் கட்டுப்பாட்டுக்கணக்கு (கடன்கொடுத்தோர்)

| | | | |
|---|---|---|---|
| மீ.செ | 47772 | திருத்திய பின் மீதி | 47472 |
| | 12000 | கொள்வனவு | 200 |
| | 20 | கூட்டிப்பதிந்த வெளித்திரும்பல் | 100 |
| | 4766 | | 4766 |

## பட்டியல் மீதி திருத்தக்கூற்று

| விபரம் | + | - | மீதி |
|---|---|---|---|
| பிழை திருத்தமுன் பட்டியல் மீதி | - | - | 48299 |
| தவறவிடப்பட்ட மீதி | 176 | | |
| கொடுத்த கழிவு | | 28 | |
| குறைத்துப் பதிந்தது | 18 | - | |
| பக்கம் மாறிப்பதிந்த பெற்ற கழிவு | | 274 | |
| | 194 | 302 | (108) |
| | | | 48191 |
| | | | (419) |
| | | | 47772 |

# மேந்தலைகள் (OVERHEADS)

சி.சுபாஜினி
2002 வர்த்தகம்.

மேந்தலைகள் என்பது நேரில் செலவுகளையே குறித்து நிற்கின்றது. இவை உற்பத்தி மாற்றத்திற்கேற்ப மாற்றமடைய மாட்டாது. இம் மேந்தலைச் செலவுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) நேரில் மூலப்பொருள் (Indirect Meterials)
2) நேரில் கூலி (Indirect Labour)
3) நேரில் செலவுகள் (Indirect Expences)

எனவே நேரில் மூலப்பொருள், நேரில்கூலி ஏனையவற்றின் செலவுகள் என்பவற்றைக் கூட்டுவதன் மூலம் மேந்தலைச் செலவுகளை பெற்றுக்கொள்ளலாம்.

| |
|---|
| மேந்தலைகள் = நேரில் மூலப்பொருள் + நேரில்கூலி + நேரில் செலவு |

**நேரில் மூலப்பொருள் (Indirect Meterials)**

பொருட்களின் உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புபடாத மூலப்பொருட்களிற்கு ஏற்படும் செலவே நேரில் மூலப்பொருட் கிரயம் எனப்படும். இக்கிரயமானது பொருட்களின் உற்பத்திக்கு உதவி செய்வதுடன் அவற்றின் இறுதிப் பெறுமதிக்குள் உள்ளடங்கிக் காணப்படமாட்டாது.

Eg: வாளிகளின் உற்பத்தியின்போது பயன்படுத்தப்படும் Gas.
Note: சில பொருட்கள் முடிவுப்பொருட்களின் பெறுமதிக்குள் காணப்பட்ட போதும் அவற்றின் பெறுமதி மிகக் குறைவாகக் காணப்படுவதனால் அது நேரில் பொருட் கிரயத்திற்குள்ளேயே உள்ளடக்கப்படும்.
Eg: புத்தகங்களைக் (கட்டுவதற்குப்) பயன்படுத்தப்படும் நூல்கள்

**நேரில் கூலி (Indirect Labour)**

மூலப்பொருட்களின் கட்டமைப்பிலும் அதன் தன்மையிலும் மாற்றத்தினை ஏற்படுத்தாத ஊழியர்களிற்கு வழங்கப்படும் சம்பளக் கொடுப்பனவே நேரில்கூலி எனப்படும்.

Eg: களஞ்சியக் காவலாளி சம்பளம்
பராமரிப்புக்கூலி

நேரில் செலவுகள் **(Indirect Expences)**

பொருட்களின் உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புபடாததும், முழு நிறுவனத்திற்கும் பொதுவாக ஏற்படும் செலவுகளே நேரில் செலவுகள் எனப்படும்.

e g : தொழிற்சாலை வாடகை, வரி, காப்புறுதி

மேந்தலைகளைப் பொதுவாக அவற்றின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு 3 வகைப்படுத்தலாம்.

1) உற்பத்தி மேந்தலை
2) நிர்வாக மேந்தலை
3) விநியோக மேந்தலை

எளிய செலவுக் கூற்று

| | |
|---|---|
| நேர்பொருட் கிரயம் | xxx |
| நேர்கூலிக் கிரயம் | xxx |
| நேர் செலவுக் கிரயம் | xxx |
| மூலக்கிரயம் | xxx |
| உற்பத்தி மேந்தலைகள் | xxx |
| உற்பத்திக் கிரயம் | xxx |
| நிர்வாக மேந்தலைகள் | xxx |
| விற்பனை விநியோக மேந்தலைகள் | xxx |
| மொத்தக் கிரயம் | xxx |
| இலாபம் | xxx |
| விற்பனை விலை | xxx |

செலவு நடத்தை


உற்பத்தி மட்டங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களிற்கு ஏற்ப ஓர் அலகு உற்பத்திக்கான செலவுகள் எவ்வாறு மாறுகின்றன என்பதனை எடுத்துக்காட்டும் நடத்தையே செலவு நடத்தை எனப்படும். செலவுகளினை அதன் நடத்தைக்கு ஏற்றவாறு பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) நிலையான செலவுகள்
2) மாறும் செலவுகள்
3) அரைப்பகுதி மாறும் செலவுகள்
4) படிமுறைச் செலவுகள்
5) ஆழ்ந்த செலவுகள்

### நிலையான செலவுகள் (Fixed Cost)

உற்பத்தி வெளியீட்டு மட்டத்துடன் தொடர்பற்றதும் காலத்துடன் தொடர்புடையதுமான செலவுகளே நிலையான செலவுகள் ஆகும். மேலும் வெளியீட்டு மட்டத்தில் ஏற்படும் மாற்றம் இச்செலவுகளைப் பாதிப்பதில்லை.


E.g: தொழிற்சாலை வாடகை




### மாறும் செலவுகள் (Variable Cost)

உற்பத்தி, வெளியீட்டு மட்டத்துடன் விகிதாசார ரீதியான நேர்த்தொடர்பைக் கொண்ட செலவுகளே மாறும் செலவுகளாகும். மேலும் வெளியீட்டு மட்டத்தில் ஏற்படும் மாற்றம் இச்செலவைப் பாதிக்கும்.


E.g: ஆடைகளைத் தைக்கும் ஊழியர்களிற்கு வழங்கப்படும் கூலி





### அரைப்பகுதி மாறும் செலவுகள் (Semi Variable Cost)

செலவின் ஒரு பகுதி வெளியீட்டு மட்டத்துடன் தொடர்புடையதாகவும் மறு பகுதி வெளியீட்டுடன் தொடர்பற்றதாகவும் காணப்படும். செலவுகளே அரைப்பகுதி மாறும் செலவுகளாகும்.

E.g: i. தொலைபேசிக் கட்டணம்




ii. விற்பனையாளர் தரகு, மின்சாரக்கட்டணம்





**படிமுறைச் செலவுகள் (Step Cost)**

குறிப்பிட்ட உற்பத்தி, வீச்சுக்கள் செலவு நிலையானதாகக் காணப்படுவதுடன் உற்பத்தியானது அவ்வீச்சிலும் பார்க்க அதிகரிக்கும் போது செலவு குறிப்பிட்ட மடங்கினால் அதிகரிக்குமாயின் அதனையே படிமுறைச்செலவு என்பர்.

E.g: மேற்பார்வையாளர் சம்பளம்

மேற்பார்வையாளர் ஒருவரினால் ஆகக் கூடுதலாக 10 ஊழியர்களினை மேற்பார்வை செய்ய முடியும். அவருக்கான மாதச்சம்பளம் 1000/- எனில்




**ஆழ்ந்த செலவுகள் (Sunk Cost)**

ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட வளங்கள் மீது காணப்படுகின்ற செலவுகளே ஆழ்ந்த செலவுகள் எனப்படும்.

E.g: நிலையான சொத்துக்கள் கொள்வனவு தொடர்பாக ஏற்பட்ட செலவுகள்

**கிரய அலகு (Cost Unit)**

பொருட்கள் சேவைகளின் உற்பத்தியின் போது கிரயங்களினைக் கண்டுகொள்வதற்கு பயன்படுத்துகின்ற அளவு சார்ந்த தொகையே கிரய அலகு எனப்படும்.

**மேந்தலைகளினைப் பகிர்ந்தளித்தல்**
**(Apporionment of Overhead)**

குறிப்பிட்ட செலவு நிலையத்துடன் நேரடியாகத் தொடர்புபடாததும் இலகுவாக அடையாளம் காண முடியாததுமான பொது மேந்தலைகளைத் தொடர்புபட்ட அனைத்து திணைக்களங்களிற்கும் ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட பகிர்ந்தளித்தல் முறைக்கமைய சாட்டுதல் செல்வதனையே மேந்தலைகளினைப் பகிர்ந்தளித்தல் என்பர்.

| பொது மேந்தலை | பகிர்விற்கான அடிப்படை |
|---|---|
| வாடகை<br>காப்புறுதி<br>மின்சாரம்<br>கட்டடம் பழுதுபார்த்தல்<br>இறையும், வரியும் | தளப்பரப்பு |
| குளிரூட்டல்<br>வெப்பமூட்டல் | கனவளவு |
| இயந்திரப் பெறுமானத்தேய்வு<br>இயந்திரம் பழுதுபார்த்தல்<br>இயந்திரக் காப்புறுதி | இயந்திரத்தின் கிரயம்/<br>புத்தகப்பெறுமதி |
| சிற்றுண்டிச்சாலைச் செலவுகள்<br>ஊழியர் நலன் பேணல்<br>மேற்பார்வையாளர் சம்பளம்<br>ஆளணி செலவுகள் | ஊழியர் எண்ணிக்கை |

**மீள்பகிர்வு (2ம் பகிர்வு)**

சேவைத் திணைக்களங்களின் மேந்தலைச் செலவினை மீள் உற்பத்தித் திணைக்களங்களிற்கு பங்கீடு செய்யும் நடவடிக்கையே மீள்பகிர்வு எனப்படும்.

தொழிற்சாலை ஒன்றின் உற்பத்தித் திணைக்களங்கள் சேவைத் திணைக்களங்கள் காணப்பட்ட போதும் பொருட்களின் பொருட்களின் உற்பத்தியுடன் உற்பத்தித் திணைக்களங்களளே நேரடியாகத் தொடர்புபட்டவையாக காணப்படுகின்றன. எனவே சேவைத் திணைக்களங்களின் மேந்தலைச் செலவினை அலகிற்கு ஏற்பட்ட செலவினை கணிப்பீடு செய்வதற்கு மீள உற்பத்தித்

E.g: 1) பாண்களை உற்பத்தி செய்யும் பேக்கரி ஒன்றின் கிரய அலகாக அமைவது பாண் ஆகும்.

2) உணவு விடுதி ஒன்றின் கிரய அலகாக அமைவது ஒருவேளைக்கான உணவு

**கிரய நிலையம் (Cost Centre)**

குறித்த சந்தர்ப்பம் ஒன்றில் கிரய அலகுகளிற்கிடையில் கிரயங்களினை பகிர்வதற்கு நடுவராகத் தொழிற்படுவதே கிரய நிலையம் எனப்படும். கிரயங்களினைக் கண்டுகொள்வதற்கு நிலையங்களையோ, நபர்களையோ உபகரணங்களையோ கிரய நிலையமாகப் பயன்படுத்தலாம்.

E.g : கார்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றில் பின்வரும் பகுதிகள் கிரய நிலையமாகத் தொழிற்படும்.

1) வடிவமைத்தல் பகுதி
2) பொருத்துதல் பகுதி
3) முடிவுறுத்தல் பகுதி

**கிரயமிடல் நடைமுறைகள்**

1) மேந்தலைகளினைத் திரட்டுதல்
2) மேந்தலைகளினை ஒதுக்குதல்
3) மேந்தலைகளினைப் பகிர்ந்தளித்தல்
4) மேந்தலைகளினை உள்ளடக்குதல்

**மேந்தலைகளினைத் திரட்டுதல் (Collection of Overheads)**

குறிப்பிட்ட காலப்பகுதி உற்பத்தியின் போது ஏற்பட்ட மேந்தலைச் செலவுகளினை ஒன்று சேர்க்கின்ற நடவடிக்கையே மேந்தலைகளினைத் திரட்டுதல் எனப்படும்.

**மேந்தலைகளை ஒதுக்குதல் (Allocation of Overheads)**

குறிப்பிட்ட செலவு நிலையத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டதும் இலகுவாக அடையாளம் காணக்கூடியதுமான மேந்தலைச் செலவுகளினைக் குறிப்பிட்ட செலவு நிலையத்திற்குச் சாட்டுதல் செய்வதனையே மேந்தலைகளினை ஒதுக்குதல் என்பர்.

E.g: களஞ்சியக் காவலாளி சம்பளத்தினைக் களஞ்சியத் திணைக்களத்திற்குச் சாட்டுதல் செய்தல்.

கம்பனி தொடர்பான தகவல்கள் தரப்படுகின்றன

ஏப்ரல் மாதத்திற்கான மேந்தலைச் செலவுகள் வருமாறு.

| | ரூபா |
|---|---|
| களஞ்சிய மேந்தலைகள் | 5000 |
| உந்து சக்தி | 15000 |
| ஊழியர் நலன்புரி | 35000 |
| மின்சார வெளிச்சம் | 3000 |
| பெறுமானத்தேய்வு | 50000 |
| பொது மேந்தலைகள் | 18000 |
| வாடகையும் வரியும் | 8000 |
| திருத்தங்களும் பராமரிப்பும் | 15000 |
| | 149000 |

வேண்டப்படுவது

அ) திணைக்களத்திற்கு மேந்தலைகளை ஒதுக்கங்களையும் பகிர்தலையும் செய்க.

ஆ) திணைக்களம் x இன் செலவுகள் 3 : 2 என்ற விகிதாசாரத்திலும் திணைக்களம் y இன் செலவுகள் 5 : 2 என்ற அடிப்படையிலும் உற்பத்தித் திணைக்களம் AB ஆகியவற்றிற்கு இடையில் மீள்பகிர்வு செய்க.

**மேந்தலைப் பகிர்வுகள்.**

| மேந்தலைகள் | பகிர்வின் அடிப்படை | உற்பத்தித் திணைக்களம் | | சேவைத் திணைக்களம் | |
|---|---|---|---|---|---|
| | | A | B | X | Y |
| நேர்கூலிகள் | ஒதுக்கீடு | - | - | 20000 | 10000 |
| நேர் மூலப்பொருள் | ஒதுக்கீடு | - | - | 20000 | 10000 |
| களஞ்சிய மேந்தலை | நேர்மூலப்பொருள் | 2500 | 1000 | 1000 | 500 |
| உந்து சக்தி | சக்தி | 4000 | 6000 | 3500 | 1500 |
| ஊழியர் நலன்புரி | ஊழியர் எண். | 17500 | 5834 | 7000 | 4666 |
| மின்சார வெளிச்சம் | மின்குமிழ் எண். | 1200 | 900 | 600 | 300 |
| பெறுமானத்தேய்வு | சொத்துக்களின் பெறுமதி | 20000 | 15000 | 10000 | 5000 |
| பொது மேந்தலை | தளப்பரப்பு | 3600 | 9000 | 3600 | 1800 |
| வாடகையும் வரியும் | தளப்பரப்பு | 1600 | 4000 | 1600 | 800 |
| திருத்தங்களும் பராமரிப்பும் | சொத்துக்களின் பெறுமதி | 6000 | 4500 | 3000 | 1500 |
| 11ம் பகிர்வின் பின் மேந்தலை | | 56400 | 46234 | 70300 | 36066 |
| சேவைத்திணைக்களம் - x | 3 : 2 | 42180 | 28120 | (70300) | - |
| சேவைத்திணைக்களம் - y | 5 : 2 | 25760 | 10304 | - | (36066) |
| | | 124342 | 84658 | - | - |

திணைக்களங்களிற்கு பங்கீடு செய்யப்படல் வேண்டும். இதனையே மீள்பகிர்வு என்பர்.

இவ்வாறு மீள்பங்கீடு செய்யப்பட்ட தன்மையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு இரண்டு வகைப்படுத்தலாம்.

1) உற்பத்தித் திணைக்களங்களிற்கு மட்டும் மீள்பங்கீடு செய்யப்படல்
2) உற்பத்தி திணைக்களங்களுடன் மற்றைய சேவைத் திணைக்களங்களிற்கும் பங்கீடு செய்யப்படல்.

**உற்பத்தித் திணைக்களக்களங்களிற்கு மட்டும் மீள்பங்கீடு செய்யப்படல்**
.

E.g: A, B என்ற 2 உற்பத்தித் திணைக்களங்களையும் x, y என்ற 2 சேவைத் திணைக்களங்களையும் கொண்டுள்ள சந்தியா உற்பத்திக் கம்பனி தொடர்பான பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

| விபரம் | உ/தி திணைக்களம் A | உ/தி திணைக்களம் B | சேவைத் திணைக்களம் X | சேவைத் திணைக்களம் Y |
|---|---|---|---|---|
| நேர் கூலிகள் (ரூபாவில்) | 60000 | 70000 | 20000 | 10000 |
| நேர் மூலப்பொருள் (ரூபாவில்) | 50000 | 20000 | 20000 | 10000 |
| சக்தி (k.w.h) | 4000 | 6000 | 3500 | 1500 |
| மின்குமிழ் (எண்ணிக்கை) | 20 | 15 | 10 | 5 |
| சொத்துக்களின் பெறுமதி (ரூபாவில்) | 40000 | 30000 | 20000 | 10000 |
| பயன்படுத்தப்படும் பரப்பு (சதுரமீற்றர்) | 200 | 200 | 200 | 100 |
| ஊழியர்கள் (எண்ணிக்கை) | 150 | 60 | 60 | 40 |

## ஒருங்கமை சமன்பாட்டு முறை

| விபரம் | பகிர்வின் அடிப்படை | உ.தி திணைக்களம் | | சேவைத் திணைக்களம் | |
|---|---|---|---|---|---|
| | | A | B | களஞ்சியம் | பராமரிப்பு |
| 1ம் பகிர்வின் பின் | | 20000 | 18000 | 10000 | 8000 |
| களஞ்சியம் | 3 : 5 : 2 | 3306 | 5510 | (11020) | 2204 |
| பராமரிப்பு | 8 : 1 : 1 | 8163 | 1021 | 1020 | (10204) |
| | | 31469 | 24531 | - | - |

களஞ்சியம் 3 : 5 : 2
பராமரிப்பு 8 : 1 : 1

மீள்பங்கீடு செய்யப்பட்ட பின்னர் களஞ்சியத் திணைக்களத்தின் மொத்த மேந்தலைச் செலவினை A என்க.
மீள் பங்கீடு செய்யப்பட்ட பின்னர் பராமரிப்புத்திணைக்களத்தின் மொத்த மேந்தலைச் செலவை B என்க.

$A = 10000 + 0.1\,B \quad -\boxed{1}$

$B = 8000 + .2\,A \quad -\boxed{2}$

$-0.2A = 8000 - b \quad -\boxed{3}$

$3 \times 5 - A = 40000 - 5B \quad -\boxed{4}$

$1 + 4 = 0 = 50000 - 4.9B$

$4.9\,B = \frac{50000}{4.9}$

$B = \frac{50000}{4.9} = 10204$

B = 10204 ஐ ச.பா 1ல் பிரதியிட

$A = 10000 + 1020$

$A = 11020$
$B = 10204$

## சேவைத்திணைக்களங்களின் மேந்தலைச் செலவினை உற்பத்தித்திணைக்களத்திற்கும் மற்றைய சேவைத்திணைக்களத்திற்கும் பங்கீடு செய்தல்.

இம் முறையின் கீழ் சேவைத்திணைக்களங்களின் மேந்தலைச் செலவினை மீள்பங்கீடு செய்வதற்கு பின்வரும் 3 முறைகள் பயன்படுத்தப்படும்.

1) தொடர்ச்சியான பங்கீட்டு முறை
2) ஒருங்கமை சமன்பாட்டு முறை
3) நீக்குதல் முறை.

e.g : ரம்யா கம்பனியின் மேந்தலைச் செலவுகளின் விபரம் வருமாறு.

| விபரம் | உ.தி திணைக்களம் | | சேவைத் திணைக்களம் | |
|---|---|---|---|---|
| | A | B | களஞ்சியம் | பராமரிப்பு |
| மேந்தலைச் செலவு | 20000 | 18000 | 10000 | 8000 |
| களஞ்சியத்திலிருந்து பெறப்பட்ட மூலப்பொருள்கள் | 30000 | 50000 | - | 20000 |
| பராமரிப்புக்குத் தேவைப்படும் மணித்தியாலங்கள் | 8000 | 1000 | 1000 | - |

வேண்டப்படுவது
சேவைத்திணைக்களங்களின் மேந்தலைகளை உற்பத்தித்திணைக்களத்திற்கும் மற்றைய சேவைத்திணைக்களத்திற்கும் 3 முறைகளின் ஊடாகவும் கணிக்குக.

### தொடற்சியான பங்கீட்டு முறை

| விபரம் | பகிர்வின் அடிப்படை | உ.தி திணைக்களம் | | சேவைத் திணைக்களம் | |
|---|---|---|---|---|---|
| | | A | B | களஞ்சியம் | பராமரிப்பு |
| 1ம் பகிர்வின் பின் | - | 20000 | 18000 | 10000 | 8000 |
| களஞ்சியம் | 3 : 5 : 2 | 3000 | 5000 | (1000) | 2000 |
| பராமரிப்பு | 8 : 1 : 1 | 8000 | 1000 | 1000 | (10000) |
| களஞ்சியம் | 3 : 5 : 2 | 300 | 500 | (1000) | 200 |
| பராமரிப்பு | 8 : 1 : 1 | 160 | 20 | 20 | (200) |
| களஞ்சியம் | 3 : 5 : 2 | 6 | 10 | (20) | 4 |
| பராமரிப்பு | 8 : 1 : 1 | 3 | 1 | - | (4) |
| | | 31469 | 24531 | - | - |

விடை :

i. ஒரு ஊழிய மணிக்கான மேந்தலைச் செலவு $= \dfrac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலைச் செலவு}}{\text{மதிப்பிடப்பட்ட ஊழிய மணி}}$

$= \dfrac{120000}{10000}$ = ரூ 12

ii. ஒரு இயந்திர மணிக்கான மேந்தலைச் செலவு $= \dfrac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலைச் செலவு}}{\text{மதிப்பிடப்பட்ட இயந்திர மணி}}$

$= \dfrac{120000}{5000}$ = ரூ 24

iii. ஒருஅலகிற்கான மேந்தலைச் செலவு $= \dfrac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலைச் செலவு}}{\text{மதிப்பிடப்பட்ட உ.தி அலகு}}$

$= \dfrac{120000}{600}$ = ரூ 200

vi. ஒரு அலகிற்கான மேந்தலைச் செலவு நேர் மூலப்பொருள் கிரயத்தின் சதவீதமாக $= \dfrac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலை}}{\text{மதிப்பிடப்பட்ட நேர்மூலப்பொருட்கிரயம்}} \times 100$

$= \dfrac{120000}{80000} \times 100 = 150\%$

v. ஒரு அலகிற்கான மேந்தலைச் செலவு நேர் நேர்க்கூலிக்கிரயத்தின் சதவீதமாக $= \dfrac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலை}}{\text{மதிப்பிடப்பட்ட நேர்கூலிக்கிரயம்}} \times 100$

$= \dfrac{120000}{40000} \times 100 = 300\%$

vi. ஒரு அலகிற்கான மேந்தலைச் செலவு மூலக்கிரயத்தின் சதவீதமாக $= \dfrac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலை}}{\text{மதிப்பிடப்பட்ட மூலக்கிரயம்}} \times 100$

$= \dfrac{120000}{120000} \times 100 = 100\%$

## நீக்குதல் முறை

| விபரம் | பகிர்வின் அடிப்படை | உ.தி திணைக்களம் | | சேவைத் திணைக்களம் | |
|---|---|---|---|---|---|
| | | A | B | களஞ்சியம் | பராமரிப்பு |
| 1ம் பகிர்வின் பின் | | 20000 | 18000 | 10000 | 8000 |
| களஞ்சியம் | 3 : 5 : 2 | 3000 | 5000 | (1000) | 2000 |
| பராமரிப்பு | 8 : 1 | 8889 | 1111 | | (10000) |
| | | 31889 | 24111 | - | - |

## மேந்தலைகளை உறிஞ்சுதல் அல்லது உள்ளடக்குதல்.

நேரில் கிரயங்கள் அனைத்தினையும் உற்பத்தி செய்யப்படும். ஒவ்வொரு அலகுகளிற்கிடையிலும் ஓர் பொருத்தமான அடிப்படையில் பகிர்ந்தளிப்பதனையே மேந்தலை உறிஞ்சுதல் என்பர்.

## மேந்தலைகளை உறிஞ்சுவதற்கு பயன்படும் முறைகள்.

i. ஊழிய மணிமுறை
ii. இயந்திரமணி முறை
iii. உற்பத்திமுறை
iv. நேர்மூலப்பொருள் கிரயத்தின் சதவீதமுறை
v. நேர் கூலிக்கிரயத்தின் சதவீதமுறை
vi. மூலக்கிரயத்தின் சதவீத முறை.

e. g 01 வரையறுத்த அல்பா கம்பனி எதிர்வரும் மாதத்திற்காக திட்டமிட்ட மதிப்பீட்டுத்தகவல்கள் வருமாறு.

| | |
|---|---|
| i. நேர் மூலப்பொருட்கிரயம் | 80000 |
| ii. நேர் கூலிக்கிரயம் | 40000 |
| iii. முழு மேந்தலைக்கிரயம் | 120000 |
| iv. எதிர்பார்க்கும் உற்பத்திக்கிரயம் | 600 |
| v. முழுக்கூலி மணித்தியாலம் | 10000 |
| vi. முழு இயந்திரமணித்தியாலம் | 5000 |

**வினா**

மேற்கூறப்பட்ட 6 முறைகளிலும் மேந்தலை உள்ளடக்க வீதங்களை கணிப்பிடுக.

02. சாருக்கான் லிமிடெட் அதனது உற்பத்திக்கிரயத்துடன் 40% வட்டி அதனது உற்பத்திப்பொருட்களின் விற்பனை விலையை பல வருடங்களாகத் தீர்மானித்து வருகின்றது. 31.12.2001ல் முடிவடைந்த வருடத்திற்கான பொருத்தமான தகவல்கள் வருமாறு.

| உற்பத்தி | X%ல் | Y%ல் | Z%ல் |
|---|---|---|---|
| ஒரு அலகிற்கான கூலி | 1.75 | 3.60 | 2.80 |
| ஒரு அலகு மூலப்பொருள் | 6.20 | 4.00 | 2.65 |
| விற்பனை அலகுகளில் | 10000 | 6250 | 5000 |

| தொழிற்சாலை மேந்தலைகள் | ரூபாவில் |
|---|---|
| தொழிற்சாலை வாடகை | 13220 |
| தொழிற்சாலைக்காப்புறுதியும் இறையும் | 4500 |
| தொழிற்சாலை வலு (மாறும்) | 8530 |
| பொறிபராமரிப்பு (மாறும்) | 3100 |
| பொறி பெறுமானத்தேய்வு | 5540 |
| தொழிற்சாலை சிற்றுண்டிச்செலவு | 3360 |

**வேண்டப்படுவது**

உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் அலகுகளின் எண்ணிக்கை அடிப்படையில் தொழிற்சாலை மேந்தலை உள்ளடக்கப்படுகின்றது எனக்கொண்டு ஒவ்வொரு பொருட்களினது விற்பனை விலைகளையும் மொத்த விற்பனைப்பெறுமதியையும் தனித்தனியாகக் கணிப்பிடுக.


$$\text{ஒரு அலகிற்கான மேந்தலைச் செலவு} = \frac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலைச் செலவு}}{\text{மதிப்பிடப்பட்ட விற்பனை அலகு}}$$

$$= \frac{38250}{21250}$$

$$= \text{ரூ } 1.80 \text{ சதம்}$$

### மிதக்கும் நாணயமாற்றுவீதம்

நாணயம் ஒன்றின் கேள்வி நிரம்பல்களினால் நிர்ணயிக்கப்படுகின்ற நாணயமாற்றுவீதமுறை மிதக்கும் நாணயமாற்று வீதமுறை எனப்படும். அதாவது அந்நிய செலாவணிச் சந்தையின் வெளிநாட்டு நாணயங்களின் கேள்வி நிரம்பல்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்ற நாணயமாற்றுவீத முறையாகும். இங்கு வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்வி என்பது குறிப்பிட்ட நாட்டின் இறக்குமதிகளில் இருந்து ஏற்படுகின்றது. நாணயங்களின் நிரம்பல் நாட்டின் ஏற்றுமதிகளில் இருந்து கிடைக்கின்றது. எனவே வெளிநாட்டு நாணயங்களின் கேள்வியும் நிரம்பலும் சமப்படும் இடத்து நாணய மாற்றுவீதம் நிர்ணயிக்கப்படும்.




### நிலையான நாணயமாற்று வீதம்

வெளிநாட்டு நாணயங்களின் கேள்வி நிரம்பல் சக்திகளுக்கு இடமளிக்காமல் நாணய அதிகாரிகளினால் நிர்ணயிக்கப்படும். நாணய மாற்றுவீதம் பெறுமதி நிலையான மாற்றுவீதம் ஆகும். இந்நாணய மாற்று வீதத்தின் பெறுமதி நிர்ணயிக்கப்பட்டு அதனை உறுதியாக வைத்திருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### முகாமைத்துவம் செய்யப்பட்ட மிதக்கும் நாணயமாற்றுவீதம்

வெளிநாட்டு நாணயங்களின் கேள்வி, நிரம்பல்களின் அடிப்படையில் நாணய அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் நிர்ணயிக்கப்படுகின்ற நாணய மாற்றுவீதமே முகாமைத்துவம் செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்றுவீதமாகும்.
இலங்கையில் மிதக்கும் நாணயமாற்று வீதமுறையே தற்போது நடைமுறையில் உண்டு.

நாணயமாற்று வீதத்தின் வேறுபட்ட வகைகள்

01) பெயரளவு பயன் உறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம்

02) மெய்ப் பயனுறுதி வாய்ந்த நாணய மாற்றுவீதம்

## பெயரளவுப் பயன் உறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம்

இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகள் எனக்கருதப்படும் 24 நாடுகளின் நாணயங்களின் அடிப்படையில் கணிக்கப்படுகின்ற சராசரி நாணயமாற்று வீதமே பெயரளவு பயன்உறுதி வாய்ந்த நாணயமாற்று வீதமாகும். இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தில் இந்நாணயங்கள் வகிக்கின்ற முக்கியத்துவத்திற்கு ஏற்ப சிலவற்றிற்கு நிறைவளிக்கப்பட்டு நாணயமாற்றுவீதம் கணிப்பிடப்படும். 1995ம் ஆண்டினை அடியாண்டாகக் கொண்டு (1995 = 100) இந்நாணயமாற்று வீதம் கணிப்பிடப்படுகின்றது.

இந்நாடுகளில் நிலவும் பணவீக்க விளைவுகளை உள்ளடக்காமல் இந்நாணயமாற்றுவீதம் கணிப்பிடப்படுவதால் இது நாணயத்தின் உண்மைப் பெறுமதியைக் காட்டாது மாறாக பெயரளவுப் பெறுமதியை மட்டுமே காட்டுவதால் இது பெயரளவு பயன் உறுதி வாய்ந்த நாணமாற்றுவீதம் எனப்படும்.

## மெய்ப்பயன் உறுதிவாய்ந்த நாணயமாற்றுவீதம்

இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளரின் மற்றும் போட்டி நாடுகள் எனக்கருதப்படும் 24 நாடுகளின் நாணயங்கள் இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தில் வகிக்கும் சார்பு முக்கியத்துவத்திற்கேற்ப நிறையளிக்கப்பட்டு கணிப்பிடப்படுகின்ற நாணயமாற்றுவீதமே மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதமாகும்.

ஏனைய நாடுகளில் நிலவும் பணவீக்கங்களுக்கேற்ப பெயரளவுப் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதமே மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமற்று வீதம் ஆகும். ஏனைய நாடுகளிலும் சராசரி பணவீக்க வீதத்திலும் பார்க்க இலங்கையில் நிலவும் பணவீக்க வீதம் சார்பளவில் உயர்வாக இருக்குமேயானால் மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்றுவீதம் அதிகரிக்கும். மாறாக 24 நாடுகளில் நிலவும் சராசரி பணவீக்க வீதத்திலும் பார்க்க இலங்கையில் நிலவும் பணவீக்கம் சார்பளவில் குறைவாக இருக்குமேயானால் மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்றுவீதம் வீழ்ச்சியடையும். இது பின்வருமாறு கணிப்பிடப்படும்.

## மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்றுவீதம்

உள்நாட்டுப் பொருளாதாரத்தில் நிலவும் பணவீக்கத்திற்கும் நாணயமாற்று வீதத்திற்கும் இடையிலான தொடர்பு

உள்நாட்டுப் பொருளாதாரத்தில் நிலவும் பணவீக்கம் காரணமாக நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி வீழச்சியடையும். உள்நாட்டில் நிலவும் பணவீக்கம் காரணமாக அந்நாட்டின் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் சர்வதேச சந்தையில் அதிகரிக்கின்றன. இதனால் அந்நாட்டின் ஏற்றுமதிகள் போட்டித்தன்மையை இழக்கவே ஏற்றுமதி குறையும்.

உள்நாட்டுப் பொருளாதாரத்தில் நிலவும் பணவீக்கம் காரணமாக உள்நாட்டுப் பொருளிலும் பார்க்க ஏற்றுமதிப் பொருட்கள் சார்பளவில் மலிவாகக் காணப்படுமேயானால் இறக்குமதி அதிகரிக்கும் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் நிலவும் பணவீக்கம் காரணமாக ஏற்றுமதிகள் குறைவடையும் இறக்குமதிகள் அதிகரிக்கும் இந்நிலையில் நாணயமாற்று வீதம் மிதக்க விடப்பட்டிருக்குமேயானால் நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதி வீழ்ச்சியடையும்.


உலகின் ஏனைய நாடுகளில் நிலவும் பணவீக்க வீதத்திலும் பார்க்க உள்நாட்டில் நிலவும் பணவீக்க வீதம் சார்பளவில் உயர்வானதாகவும், நாணயத்தின் வெளிப்பெறுமதியில் உண்டாகும் வீழ்ச்சி பொருளாதாரத்தில் பணவீக்கம் விளைவுகளை ஏற்படுத்தும் நாணயத்தின் வெளிப்பெறுமதி வீழ்ச்சியடையும்போது அந்நாட்டின் இறக்குமதிப் பொருட்களின் விலைகள் உள்நாட்டுச்சந்தையில் அதிகரிக்கின்றன. இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்கள், இடைத்தரப் பொருட்கள், முடிவுப்பொருட்கள் என்பவற்றின் விலை உயர்வின் ஊடாக உள்நாட்டின் பொதுவிலைமட்டம் அதிகரிக்கும். இதன் விளைவாக உள்நாட்டில் பணவீக்க விளைவுகள் தோன்றும்.

## நாணயத்தின் மிகை மதிப்பீடு (Overvalued Currency)

இம் மிகைமதிப்பீடானது இரு சந்தர்ப்பங்களில் நிகழலாம்

1) வெளிநாட்டு நாணயத்திற்கான கேள்வியும் நிரம்பலும் சமநிலை அடையும் நிலையில் நிர்ணயிக்கப்படும் நாணயமாற்று வீதத்தை விடக்குறைவான வீதமொன்றில் நாணய அதிகாரிகள் கட்டுப்படுத்தப்பட்ட நாணயமாற்றுவீதம் ஒன்றைத் தீர்மானித்தல் மிகை மதிப்பீடாகும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சென்மதி நிலுவையில் பற்றாக்குறை ஒன்று தொடர்ந்து நிலைத்திருக்கும்.





02) பொருளாதாரத்தில் பணவீக்க நிலை காணப்படும்பொழுது நாணயமாற்றுவீதம் மிகை மதிப்புடையதாக மாறலாம். இதற்கான காரணம் பணவீக்க நிலைமைகளில ஏற்றுமதி வர்த்தகம் வீழ்ச்சியடையும் அதேவேளை சார்பளவில் உலக சந்தையில் விலைகள் குறைவாக இருந்ததால் இறக்குமதி வர்த்தகம் அதிகரிக்கும்.

இதனால் நாணயமாற்று வீதம் அதிகரிப்பதனால் ஏற்படும் தாக்கங்களில் ஒத்த விளைவுகள் பொருளாதாரத்தில் ஏற்படும். அதாவது பெயரளவு நாணயமாற்று வீதத்தில் எத்தகைய மாற்றங்களும் ஏற்படாத போதிலும் பணவீக்கத்தினால் ஏற்படக்கூடிய பொருளாதாரத் தாக்கங்கள் நாணயமாற்றுவீதம் அதிகரிப்பதனால் ஏற்படும் தாக்கங்களை ஒத்ததாக இருக்கும்.

## நாணயத்தின் குறை மதிப்பீடு

இக்குறை மதிப்பீடானது இரு சந்தர்ப்பங்களில் நிகழலாம்.

01) வெளிநாட்டு நாணயத்திற்கான கேள்வியும் நிரம்பலும் சமநிலையில் அடையும் நிலையில் நிர்ணயிக்கப்படும் நாணயமாற்று வீதத்தினை விடக் கூடுதலான வீதமொன்றில் நாணய அதிகாரிகள் கட்டுப்படுத்தப்பட்ட நாணயமாற்று வீதம் ஒன்றை தீர்மானித்தல் குறைமதிப்பீடாகும்.




இவ்வாறான சந்தர்ப்பங்களில் சென்மதி நிலுவையில் மிகை ஒன்று தொடர்ந்து நிலைத்திருக்கும்.

02) பொருளாதாரத்தில் பணச்சுருக்க நிலை காணப்படும்போது நாணயமாற்றுவீதம் குறை மதிப்புடையதாக மாறலாம். இதற்கான காரணம் பணச்சுருக்க நிலையின் கீழ் ஏற்றுமதி வர்த்தகம் அதிகரித்து இறக்குமதி வர்த்தகம் குறையும்.

இதனால் நாணயமாற்றுவீதம் குறைவதனால் ஏற்படும் தாக்கங்களினை ஒத்த விளைவுகள் பொருளாதாரத்தில் ஏற்படும். அதாவது பெயரளவு நாணயமாற்று வீதத்தில் எத்தகைய மாற்றங்களும் ஏற்படாத போதிலும், பணச்சுருக்கம் ஏற்படக்கூடிய பொருளாதார தாக்கங்கள் நாணயமாற்றுவீதம் குறைவதனால் ஏற்படும் தாக்கங்களை ஒத்ததாக இருக்கும்.

## இலங்கையும் புதிய நாணயமாற்றுக் கொள்கையும்

இலங்கை அரசியல் பொருளாதார நெருக்கடிகளை குறைப்பதற்காக 23.01.2001 அன்று ரூபாவை மிதக்கவிட்டது. அதாவது இதுவரை காலமும் நாணயமாற்று விகிதத்தை தீர்மானித்து வந்த மத்தியவங்கி 23.01.01 முதல் நாணயமாற்று விகிதத்தை தீர்மானிப்பதில் இருந்து மத்திய வங்கி விலகிக் கொண்டது. அன்று முதல் நாணயமாற்றுவிகிதம் மிதக்க விடப்பட்டது. இந்த முடிவுக்கு முக்கிய காரணம் ஏற்றுமதிக்கு இயல்பில்லாத இறக்குமதி அதிகரிப்பே ஆகும்.

வெளிநாட்டுப் பொருட்களின் இறக்குமதியால் உள்நாட்டு உற்பத்திகள் கூட கவனத்தில் எடுக்கப்படவில்லை. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் கிடைக்கும் தேறிய வருமானமே குறிப்பிடத்தக்கதாக உள்ளது. ஆனாலும் பெருந் தோட்டச் செய்கையில் அபிவிருத்தி ஏற்படவில்லை. அல்லது கவனம் மிதக்கவிடப்பட்டது தவிர்க்க முடியாத ஒன்று. உலகமயமாக்கலின் விளைவு இதுவாகும்.

மிதக்க விடப்பட்ட நாணமாற்று வீதத்தால் உற்பத்தியாளர்கள் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. உதாரணமாக ஒரு கருவியை கொள்வனவு செய்வதற்கு ஒப்பந்தம் செய்யும்போது உள்ளவிலையும் அந்த கருவி சுமார் 2, 3 மாதங்கள் கழித்து அது வந்து சேரும்போது டொலரின் பெறுமதி மாற்றத்தால் ஏற்படும் விலை அதிகரிப்பும் இச்சிக்கலுக்கு மூலகாரணமாகும்.

நாணயமாற்று விகிதத்தை மிதக்க விட்டால் உள்ளூர் உற்பத்திகள் அதிகரிக்கும் எனக்கூறப்படுகின்றது. ஆனால் வாழ்க்கை செலவு அதிகரிப்பதால் உள்ளூர் உற்பத்திகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் ஊதியம் அதிகரிக்கும்.

இதனால் உற்பத்தி செலவு அதிகரித்து அதன் மூலம் பொருள்களின் விலைகூடும் விலை கூடிய பொருள்களை வெளிநாடுகள் வாங்கப் போவதில்லை இதனால் ஏற்றுமதி அதிகரிக்கப்போவதில்லை.

ரூபாயின் பெறுமதி குறைவதன் எதிரொலியாக தென்னிலங்கையில் வறுமை நிலையில் இருப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும். வருமான ஏற்றத்தாழ்வுகளால் களவு, கொள்ளை போன்ற சட்ட விரோதச் செயற்பாடுகள் அதிகரிக்கும். வடக்கு கிழக்கு மாவட்டங்களில் வாழும் மூன்றில் ஒரு குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். இதனால் இக்குடும்பங்களுக்கு கிடைக்கும் பணவரவு அதிகரிக்கும். இதேவேளை மற்ற குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாடநேரிடும். இதனால் சமுதாயத்தில் மிகப்பெரிய வருமான ஏற்றத்தாழ்வு தோன்றும்.

எனவே இந்த மிதக்கவிடப்பட்ட நாணயமாற்று விகிதக் கொள்கையால் நாடு இன்னும் பொருளாதாரத்தில் அதிபாதாளத்தை நோக்கி செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்:**


- ❄ உதயன் நாளிதழ்
- ❄ நாணயமாற்று வீதம் : வே.கருணாகரன்
- ❄ க.பொ.த உயர்தர கற்றல், கற்பித்தல் வழிகாட்டி

# வணிக நாதம் சிறக்க

## வாழ்த்துகின்றோம்

NSB பரிசுப் பொதி

தேசிய சேமிப்பு வங்கியின் ஏதாவதொரு சேமிப்புக்கணக்கில் (ஹப்பன், புஞ்சி ஹப்பன், இத்துரு மித்துரு, ரட்ட இத்துரு, ஸ்திரி உட்பட சாதாரண சேமிப்புக்கணக்குகள்) ஜுலை 01ந் திகதி முதல் டிசெம்பர் 31.2002 வரை ரூ 25000/- அல்லது அதன் மடங்குகளில் 6 மாதங்களுக்கு பணத்தை வைப்பிலிட்டு பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லுங்கள்.

1வது பரிசு - 50 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த அழகிய வீடு

2வது பரிசு - பணப்பரிசாக 5 லட்சம்

3வது பரிசு - 5 அதிர்ஷ்டசாலிகளுக்கு ஒவ்வொன்றும் ரூபா 50000 பெறுமதியான 5 விமான டிக்கெட்டுக்கள்.

**மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள**

***NSB* கிளையை நாடுங்கள்.**

# வெளிவாரி விளைவுகள்
# Externalities

N.நிசாந்தி
2002 வர்த்தகம்.

## வரைவிலக்கணம்

தனிநபர்கள் OR நிறுவனம் ஒன்றின் பொருளாதார நடவடிக்கையின் காரணமாக அதனுடன் நேரடியாக தொடர்புபடாத பிறருக்கு நன்மை தீமை ஏற்படுகின்ற போது அதன் பொருட்டு யாதேனுமொரு கொடுப்பனவோ OR நட்டஈடோ வழங்கப்படவில்லையாயின் அத்தகைய நன்மை OR தீமைகள் வெளிவாரி விளைவுகளாகும்.

இவை பொருளாதார நடவடிக்கையான உற்பத்தி நுகர்வின்போது பொங்கி எழும் விளைவுகள் OR அயல்விளைவுகள் OR மூன்றாம் தரப்பு விளைவுகள் ஆகும்.

இங்கு வெளிவாரி என்பது சந்தை விலைபொறி முறையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது வெளியேயானது என்பதையே குறிக்கின்றது.

வெளிவாரி விளைவுகள் இருவழிகளில் வகைப்படுத்தப்படுகின்றன.

01) விளைவின் தன்மையின் அடிப்படையில் வகைப்படுத்தல்
- (1) நேர்க்கணிய வெளிவாரி விளைவு
- (2) எதிர்க்கணிய வெளிவாரி விளைவு

02) பொருளாதார நடவடிக்கையின் அடிப்படையில் வகைப்படுத்தல்
- 1) உற்பத்தியின் வெளிவாரி விளைவு
- 2) நுகர்வில் வெளிவாரி விளைவு
- 3) கலப்பு வெளிவாரி விளைவு

## வெளிவாரி நன்மைகள் OR நேர்க்கணிய வெளிவாரி விளைவு (External Benefits of Positive Externaliteis)

தனிநபர் OR நிறுவனமொன்றின் பொருளாதார நடவடிக்கையான உற்பத்தி நுகர்வின்போது அதனுடன் நேரடியாக தொடர்புபடாத பிறருக்கு நன்மை ஏற்படுகின்ற போதும் அதன்பொருட்டு யாதேனுமொரு கொடுப்பனவும் வழங்கப்படவில்லையாயின் அத்தகைய நன்மைகளே வெளிவாரி நன்மைகளாகும்.

E:g: குறிப்பிட்ட தொழிற்சாலை தொழிலாளரைப் பயிற்றுவிப்பதன் காரணமாக வேறொரு தொழிற்சாலை பயிற்றப்பட்ட தொழிலாலரைப் பயிற்றுவிப்பதற்கான செலவுகள் எதுவும் இன்றி பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.

இத்தகைய வெளிவாரி நன்மைகளிற்கு கட்டணம் அறவிட முடியாது இதனால் தனிப்பட்ட நன்மைக்குள் சேர்க்கப்படுவதில்லை எனவே வெளிவாரி நன்மைகள் சந்தை விலைப்பொறி முறைக்குள் அடங்குவதில்லை.

**வெளிவாரிச் செலவுகள் OR எதிர்க்கணிய வெளிவாரியான விளைவு External Cost)**

தனிநபர் OR நிறுவனம் ஒன்றின் பொருளாதார நடவடிக்கையின் காரணமாகும் அதனுடன் நேரடியாக OR தொடர்புபடாத பிறருக்கு செலவு ஏற்படுகின்ற போது அதன் பொருட்டு யாதேனுமொரு நட்டஈடும் வழங்கப்படவில்லையாயின் அத்தகைய செலவு OR தீமை வெளிவாரி செலவுகளாகும்.

**E:g :** மரக்கைத் தொழிலுக்காக காடழிப்புச் செய்வதனால் மண்ணரிப்பு மண் வளங்கள் குறைதல் ஊற்றுக்கள் வற்றிவிடல் சூழல் மாசடைதல் விவசாயத்துறையினரும் ஏனையோரும் பாதிக்கப்படல்.

இத்தகைய வெளிவாரிச் செலவுகளிற்கு நட்டஈடு வழங்கப்படாமையால் (கணக்குகளில் பதியப்படாமையால்) தனிப்பட்ட செலவில் சேர்க்கப்படுவதில்லை எனவே வெளிவாரிச் செலவுகள் சந்தை OR விலைப்பொறிமுறைக்குள் அடங்குவதில்லை.

2) உற்பத்தியின் வெளிவாரி விளைவுகள்

உற்பத்தி நடவடிக்கையின் காரணமாக உருவாக்கப்படுகின்ற வெளிவாரி விளைவுகள் இவையாகும் தனிநபர் OR நிறுவனம் ஒன்றின் உற்பத்தி நடத்தையினால் உருவாக்கப்பட்டு ஏனைய உற்பத்தியாளர்களது உற்பத்தி நடவடிக்கையினால் செலவுகளைக் குறைக்கவோ OR கூட்டவோ செய்கின்ற போதும் அதன் பொருட்டு கொடுப்பனவோ OR நட்டஈடோ வழங்கப்படவில்லையாயின் அவை உற்பத்தி வெளிவாரி விளைவுகள் ஆகும்.

இவை இருவகைப்படும்

1) உற்பத்தியில் நேர்க்கணிய வெளிவாரி விளைவு
2) உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு

**வெளிவாரி விளைவுகள்.**

- விளைவுகளின் நன்மைகளின் அடிப்படையில்
- பொருளாதார நடவடிக்கையின் அடிப்படையில்

- உற்பத்தியின் அடிப்படையில்
  - உ.தியில் நேர்க்கணிய வெளிவாரி விளைவு
  - உ.தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு
- நுகர்வில் வெளிவாரி விளைவு
  - நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரி விளைவு
  - நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு
- கலப்பு வெளிவாரி விளைவு
  - உற்பத்தி நடத்தையில் உருவாக்கப்பட்டு பிறரின் நுகர்வு நடத்தையில் பயன்பாட்டை குறைக்கவோ அல்லது கூட்டவோ செய்வன.
  - நுகர்வு நடத்தையில் உருவாக்கப்பட்டு பிறரின் உற்பத்தி நடத்தையில் பயன்பாட்டை குறைக்கவோ அல்லது கூட்டவோ செய்வன.

தனிப்பட்ட செலவு

இது பொருட்கள் சேவைகளின் உற்பத்தி நுகர்விற்காக தனிநபர் or நிறுவனத்திற்கு ஏற்படும் செலவைக் குறிக்கின்றது.

இது கணக்குகளில் பதியப்படுவதால் உற்பத்தி அல்லது. நுகர்வுச் செலவுக்குள் அடங்குகின்றது. இவை சந்தைக் கேள்வி நிரம்பலில் பிரதிபலிப்பதன் மூலம் விலையில் உள்ளடங்கும் எனவே தனிப்பட்ட செலவு சந்தை அல்லது விலைப்பொறி முறைக்கு உட்பட்டதாகும்.

**3) நுகர்வில் வெளிவாரி விளைவுகள்**

நுகர்வு நடவடிக்கையினால் உருவாக்கப்படுகின்ற வெளிவாரி விளைவுகள் இவையாகும்.

தனிநபரது நுகர்வு நடவடிக்கையினால் உருவாக்கப்பட்டு ஏனைய நுகர்வோரது பயன்பாட்டை அதிகரிக்கவோ குறைக்கவோ செய்கின்ற போதிலும் அதன் பொருட்டு யாதேனுமோர் கொடுப்பனவோ OR நட்டஈடோ வழங்கப்படவில்லையாயின் அவை தூய நுகர்வின் வெளிவாரி விளைவுகள் ஆகும். நுகர்வின் வெளிவாரி விளைவுகள் இருவகைப்படும்.

(1) நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரி விளைவு
(2) நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு

**3) கலப்பு வெளிவாரி விளைவு**
கலப்பு வெளிவாரி விளைவு இருவகையானவை.

1) உற்பத்தி நடத்தையால் உருவாக்கப்பட்டு பிறரின் நுகர்வு நடத்தையில் பயன்பாட்டை அதிகரிக்கவோ OR குறைக்கவோ செய்வன.

நுகர்வு நடத்தையால் உருவாக்கப்பட்டு பிறரின் உற்பத்தி நடத்தையில் பயன்பாட்டை அதிகரிக்கவோ OR குறைக்கவோ செய்வன.

நுகர்வு நடத்தையால் உருவாக்கப்பட்டு பிறரின் உற்பத்தி நடத்தையில் உற்பத்திச் செலவை அதிகரிக்கவோ OR குறைக்கவோ செய்வன.
வெளிவாரி விளைவுகள் கட்டாயம் சந்தைக்கு வெளியே உருவாக்கப்படுவதாலும் பெறப்படுவதுமாக இருக்க வேண்டும்.

சமூகச் செலவு

இது தனிப்பட்ட செலவையும் வெளிவாரிச் செலவையும் உள்ளடக்கியதாகும். தனிப்பட்ட நுகர்வோரும் உற்பத்தியாளரும் தமது தனிப்பட்ட நலன்களை உச்சப்படுத்த முயல்கின்றனரே அல்லாமல் முழுச் சமூகத்திற்குமான சமூக நலனை உயர்த்துவதற்கு முயல்வதில்லை. எனவே வெளிவாரி விளைவுகள் உள்ள நிலையில் தனிப்பட்ட நலனை உச்சப்படுத்துவதும் சமூக நலனை உச்சப்படுத்துவதும் ஒன்றாக அமைவதில்லை. இதனால் வெளிவாரிச் செலவுகள் உள்ள நிலையில் தனிப்பட்ட செலவும் சமூகச்செலவு உயர்வானதாக இருக்கும். மாறாக வெளிவாரிச்செலவு இல்லையேல் தனிப்பட்ட செலவும் சமூகச்செலவும் ஒன்றிற்கொன்று சமப்படுத்துவதாக காணப்படும்.

வெளிவாரிச்செலவு = தனிப்பட்ட செலவு + சமூகச்செலவு

**தனிப்பட்ட நன்மை**

தனிப்பட்ட நன்மை என்பது பொருட்கள் சேவைகளின் உற்பத்தி OR நுகர்வினால் தனிநபர் OR தனிநபர் OR நிறுவனத்திற்கு ஏற்படும் அனுகூலங்களைக் குறிக்கின்றது. இவை சந்தை OR விலைப் பொறிமுறைக்குட்பட்டதாகும்.


**சமூக நன்மை**

சமூக நன்மை என்பது தனிப்பட்ட நன்மையும் வெளிவாரி உள்ளடக்கியதாகும்.
சமூக நன்மை = தனிப்பட்ட நன்மை + வெளிவாரி நன்மை.

## வெளிவாரி விளைவுகளுடன் சந்தை தோல்வியடைதல்
## Failure throught Externaties

சந்தைச் முறைமை பொருளாதார ரீதியில் திறமையானதும் சமூகரீதியில் நீதியானதுமான சமநிலையினை அடைய தவறுகின்ற எல்லா நிலைமைகளும் சந்தைத் தோல்வி எனப்படும். அதாவது அடைந்து கொள்ளக்கூடியதாகவுள்ள மிகச்சிறந்த நிலையை சந்தை அடையாத நிலையை இது குறிக்கின்றது.

இதன் கருத்து நல்லது எதுவும் நடக்கவில்லை என்பதில்லை திறமையான வள ஒதுக்கீடு காணப்படாமையேயாகும். இத்தகைய திறமையற்ற வள ஒதுக்கீட்டிலேயே சந்தை தோல்வியடைகின்றது இதற்கு சமூக எல்லைச் செலவும் சமூக எல்லை நன்மையும் சமப்படாது இருப்பதே காரணமாகும். ஏனெனில் சமூக எல்லைச்செலவும் சமூக எல்லை நன்மையும் சமப்படும் நிலையே திறமையான வள ஒதுக்கீடு இடம்பெறும் நிலமையாகும்.




Dm - சந்தைக்கேள்வி வளையி

Sm - தனிப்பட்ட செலவின் அடிப்படையில் இருக்கின்ற சந்தை நிரம்பல் வளையி

SS - சமூகச்செலவின் அடிப்படையில் இருக்க வேண்டிய சமூக நிரம்பல் வளையி.

இங்கு சந்தைத் தோல்விக்கு பிரதான காரணமாக வெளிவாரி விளைவுகளே காணப்படுகின்றது. இத்தகைய சந்தைத் தோல்வியே ஏற்படுத்தும் காரணிகளை சீர்செய்ய அரசாங்கம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

**01) அளவுக்கட்டுப்பாடு OR சட்டப்பரிமாணங்கள்**

இவை நேரடியாக வெளிவாரி விளைவுகளில் செல்வாக்கு செலுத்துகின்றன. இவை சந்தையை சீரமைப்பதை விட சந்தை பதிலீட்டு நடவடிக்கைகளாக அமைகின்றன.

**02) வரிவிதிப்பும் மானியம் வழங்கலும்**

இவை சந்தை விலையை சரி செய்வதன் மூலம் சந்தையில் தவற விடப்பட்ட தூண்டுதலை உருவாக்குகின்றன. வரிகள் மூலம் வெளிவாரிச் செலவுகளைக் குறைக்கவும் மானியங்கள் மூலம் வெளிவாரி நன்மைகளை அதிகரிக்கவும் தூண்டுதலை வழங்க முடியும் எனவே இவை சந்தை OR விலை முறையை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையாகும்.

இவ்வகையில் இவை சந்தை சார்ந்த தீர்வு முறைகளாகும். இவ்வழிமுறை வெளிவாரி விளைவுகளை உள்வாரியாக்குகின்றது. தற்போது சந்தை சார்ந்த முறைகளில் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது.

**Reference :**

Enternalities - V.Karanakrana
Teachers guide

மக்கள் மனமறிந்த வங்கியாம் மக்கள் வங்கியின்

# ஜெயஸ்ரீ - 3

# மாபெரும் அதிஸ்டச் சீட்டிழுப்பு

**ஆரம்பம்:**
ஜனவரி 2002 ல் இருந்து

**சீட்டிழுப்பிற்கான தகமை:**
ஓர் வாடிக்கையாளர் நடப்பு மாதத்தில் ஆகக் குறைந்த மீதியாக
1. சேமிப்புக் கணக்கொன்றில் ரூபா. 10,000 பேணுதல்
அல்லது
2. நடப்புக் கணக்கொன்றில் ரூபா 5000 பேணுதல்
இக் கணக்கொன்றில் மேலதிகமாகவுள்ள ஒவ்வொரு ரூபா. 5000 மீதிக்கும் இன்னொரு குலுக்கல் தகமையைப் பெறமுடியும்.

## பரிசுகளின் விபரம்......

நாளாந்தப் பரிசுகள்

தினமும் 24 பரிசுகள் ஒவ்வொன்றும் 1/2 தங்கப்பவுண் (ரூ.3250)

மாதாந்தப் பரிசுகள்

| | |
|---|---|
| 1ம் பரிசு - கார் | 700,000/= |
| 2ம் பரிசு - கொம்பியூட்டர் | 100,000/= |
| 3ம் பரிசு - கொம்பியூட்டர் | 100,000/= |
| 4ம் பரிசு - நடமாடும்தொலைபேசி | 10,000/= |
| 5ம் பரிசு - நடமாடும்தொலைபேசி | 10,000/= |
| 6ம் பரிசு - நடமாடும்தொலைபேசி | 10,000/= |
| 7ம் பரிசு - நடமாடும்தொலைபேசி | 10,000/= |
| 8ம் பரிசு - நடமாடும்தொலைபேசி | 10,000/= |

கால்வருடப் பரிசுகள்

| | |
|---|---|
| 1ம் பரிசு - கார் | 1,800,000/= |
| 2ம் பரிசு - கொம்பியூட்டர் | 100,000/= |
| 3ம் பரிசு - கொம்பியூட்டர் | 100,000/= |
| 4ம் பரிசு - நடமாடும்தொலைபேசி | 10,000/= |
| 5ம் பரிசு - நடமாடும்தொலைபேசி | 10,000/= |
| 6ம் பரிசு - நடமாடும்தொலைபேசி | 10,000/= |
| 7ம் பரிசு - நடமாடும்தொலைபேசி | 10,000/= |
| 8ம் பரிசு - நடமாடும்தொலைபேசி | 10,000/= |

வருடாந்தப் பரிசு

ஒரு வீடு 4,000,000/=

**மாதாந்த, கால்வருட, வருடாந்த சீட்டிழுப்பில் கலந்து கொண்டு பரிசுபெறும் அதிஸ்டசாலிகள் பணமாகவும் பரிசைப் பெறமுடியும்.**

அட்டை வடிவமைப்பு : ஹரிஹரனன் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.